www.padippakam.com

135

# உலக முதலாளித்துவ நெருக்கடியும்

# நான்காம் அகிலத்தின் பணிகளும்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR
SEINE FRANCE

நான்காம் அகிலத்தின்
அனைத்துலகக்குழுவின்
முன்னோக்குகளின் தீர்மானம்
ஆகஸ்டு 1988

படிப்பகம்

www.padippakam.com

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

படிப்பகம்

www.padippakam.com

# நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் முன்நோக்குகளின் தீர்மானம்

1. 1938-செப்டம்பரில் நான்காம் அகிலம் நிறுவப்பட்டு ஒரு அரை நூற்றாண்டின் பின்னர் உலகப் பாட்டாளிகளினுள்ளே புரட்சிகர தலைமை நெருக்கடியைத் தீர்த்துவைக்க அதனால் நடத்தப்பட்ட ஈவிரக்கமற்ற போராட்டத்தினை வரலாறு ஊர்ஜிதப்படுத்திக் கொண்டிருக்கிறது. அனைத்துலகக் குழுவினால் தலைமை தாங்கப்படும் நான்காம் அகிலத்துக்கு வெளியே, தொழிலாள வர்க்கத்தினை உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிராக புரட்சிகரப் போராட்டத்திற்கு அணிதிரட்டி, கல்வி புகட்டும் அரசியல் கட்சி எதுவுமே கிடையாது. அனைத்துலக ரீதியில் தொழிலாளர் இயக்கம் உக்கிரமான நெருக்கடிக் காலப்பகுதியினூடாகச் சென்று கொண்டிருக்கிறது. இது சர்ச்சைக்கு அப்பாற்பட்ட உண்மையாகும். இன்றிருக்கும் பரந்த தொழிலாளர் கட்சிகளாலும், தொழிற்சங்க இயக்கங்களின் தலைமைகளாலும் தொழிலாள வர்க்கத்திற்கு காட்டிக் கொடுப்புகள், தோல்விகள், மன முறிவுகளைத் தவிர வேறெதனையும் வழங்க முடியாதிருக்கிறது. ஸ்டாலினிஸ்டுகள், சமூக ஜனநாயகவாதிகள், அமெரிக்க ஏ. எப்.எல்.—சி. ஐ. ஓ. (AFL—CIO)க்களின் பழைய அதிகாரத்துவ இயந்திரங்கள் இதுகாறும் தொழிலாளர் இயக்கத்தினுள் முதலாளித்துவ வர்க்கத்தின் போலீஸ் படையாக விசுவாசமான முறையில் சேவை செய்து வந்திருக்கின்றன. இவை கோடிக்கணக்கான தொழிலாளர்களின் கண்ணெதிரே முழுமையாக மதிப்பிழந்து கொண்டிருக்கின்றன. ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட தொழிலாளர் இயக்கம் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் இதே கதைதான்: வெட்கமற்ற விதத்தில் அதிகாரத்துவங்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் சகாக்களாக செயல்படுகின்றன, தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களை சீர்குலைக்கவும், முதலாளித்துவ நெருக்கடியின் முழுச்சுமையையும் அதன் முதுகின் மீது சுமத்தவும் தம்மால் ஆனதை எல்லாம் செய்து வருகின்றன.

2. அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் அதனது பாரம்பரிய தலைமைகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றது. முதலாளித்துவ வர்க்கத்தின் பிற்போக்குத் தாக்குதலுக்கெதிராக மிகவும் அத்தியாவசியமான நலன்களைத் தன்னும் பேண இவர்கள் மறுக்கின்றார்கள். மாறாக இந்த திவாலான தலைமைகள், பாட்டாளி வர்க்கம் சமுதாயத்தின் ஒரு தனித்துவமான வர்க்கமாக இருக்கின்றதென்பதையும், அது முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக அதனது சுயாதீனமான நலன்களைப் பேணியாக வேண்டும் என்ற அடிப்படையான கருத்துருக்களையும் கூட காலத்திற்கு ஒவ்வாதது என நிராகரிக்கின்றார்கள். முதலாளித்துவ வர்க்கத்திற்கு சேவகம் செய்யும் அவர்களின் திடசங்கற்பத்தில் அவர்கள் கடந்து செல்லத் தயார் இல்லாத கோடெதுவும் கிடையாது.

3. இந்த ''கைவிடுதல் வாத'' தோற்றப்பாடு கிரெம்ளின் அதிகாரத்துவம் மற்றும் சமூக ஜனநாயக அரசாங்கங்கள் முதல் தொழிற்சங்க அதிகாரிகள் வரையில் தொழிலாளர் இயக்கத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் பிரதி

படிப்பகம்

www.padippakam.com



பலிக்கின்றது. கோர்பச்சேவின் தலைமையின்கீழ்ஸ்டாலினிச அதிகாரத்துவம் இன்று அக்டோபர் புரட்சியின்தேட்டங்களின் பேரிலான தமது வாய்ளவிலான விசுவாசத்தைக்கூட புறக்கணித்துவிட்டு முதலாளித்துவத்தின் மேன்மையை ஒப்புக்கொள்கின்றது. கோர்பச்சேவின் சைகையை ஏற்றுக் கொண்டு உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சிகள், தேசிய முதலாளித்துவ அரசியலினுள் தமது இணைப்பினைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பினைப் பயன்படுத்துகின்றன. சமூக ஜனநாயக அமைப்புக்களைப் பொறுத்தமட்டில், சீர்திருத்தங்களை வழங்க முடியாத முதலாளித்துவத்தின் இயலாமையை, அவை தமது பழைய 'குறைந்தபட்ச' வேலைத்திட்டங்களை நிராகரிப்பதன் மூலம் பிரதிபலிக்கின்றன. சோசலிசப் புரட்சியை 'யதார்த்தமற்றது' என ஒதுக்கித்தள்ளுவதன் மூலம் முதலாளித்துவத்துக்கு தமது அடிபணிதலை கடந்த காலத்தில் நியாயப்படுத்தி வந்த மார்க்சிசத்தின் இருதயமற்ற எதிர்ப்பாளர்கள், இன்று 'யதார்த்தத்தின்' பேரால் சம்பள வெட்டுக்கள், பரந்த வேலை நீக்கங்கள், அத்தியாவசிய சமூக சேவைகள் ஒழிப்பு ஆகியவற்றை ஏற்கின்றார்கள். அப்பணியைப்பின்தொடர்ந்து தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தொழிற்சாலைகளில் எஜமானர்களின் போலீஸ்காரர்களாக அப்பட்டமாகவே தொழிற்படுகின்றனர். முதலாளித்துவ சுரண்டலின் உக்கிரத்தைத் தணிக்க முயலும் தொழிலாளவர்க்க பாதுகாப்பு இயக்கங்களாக இருப்பதிலும் பார்க்க, தொழிற்சங்கங்கள் அந்த சுரண்டல் நுட்பங்களை சரியாகச் செய்யும் பொருட்டு முதலாளித்துவ வர்க்கத்துடன் நேரடியாக இணைந்து மேலும் மேலும் வெளிப்படையாகவே இயங்குகின்றன.

4. நான்காம் அகிலம் அதன் வரலாற்றினதும் வேலைத்திட்டத்தினதும் சீரியபண்பு காரணமாக இந்த அழுகி நாற்றமெடுத்த அதிகாரத்துவ ஒட்டுண்ணிகளின் காட்டிக் கொடுப்புகளுக்கான ஒரே புரட்சிகரப்பதிலீடாக இருக்கிறது. சர்வதேச தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்காலம் முழுவதும் சோசலிசப் புரட்சிக்கான உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்புவதில்தான் பிணைக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் முதலாளித்துவ அமைப்பின் தற்போதைய உலக நெருக்கடியினதும் தொழிலாள வர்க்கத்தின் மீதான அதன் தாக்கத்தினதும் உள்ளடக்கத்தில், புரட்சிகரத் தலைமை நெருக்கடியைத் தீர்ப்பதற்கான டிராட்ஸ்கியின்போராட்டத்தின் ஆழமான வரலாற்றுப் பரிமாணத்தின் மதிப்பை இப்பொழுதுதான் முழுமையாகச் சரியாய் உணர முடிகிறது.

5. டிராட்ஸ்கி நான்காம் அகிலத்தை அமைக்க முதல் அழைப்பைவிட்டிருந்தபொழுது மகத்தான இரு அகிலங்கள்இருபது வருடங்களுக்குள்ளேயே வீழ்ச்சியுற்றிருந்தன — இரண்டாம் அகிலம் 1914லும்-மூன்றும் அகிலம் 1933லும்—இது 1847 ல் கம்யூனிஸ்ட் அறிக்கையை எழுதிய காலம் முதல் போல்ஷேவிக்குகள் 1917-ல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் வரை வளர்க்கப்பட்ட அரசியல் கலாச்சாரத்தைத் தகர்க்கும் அளவிற்கு தாக்குதலைத் தொடுத்தது. முதலாவதாக சமூக ஜனநாயகமும் அதற்குப்பின் ஸ்டாலினிசமும் உலக ஏகாதிபத்தியத்தின் சேவையில சேர்ந்தன. இவற்றின் காட்டிக் கொடுப்புக்கள் தொழிலாள வர்க்கத்திற்கு மிகப் பிரமாண்டமான தோல்விகளைக் கொடுப்பதற்குப் பொறுப்பாய் இருந்தன. ஏகாதிபத்தியத்தின் இந்த இரு ஏஜெண்சிகளினுள்ளும் ஸ்டாலினிசத்தின் பங்கு அளவிட முடியாத அளவு துரோகமானது. சமூக ஜனநாயகம் வெளிப்படையாகவே சோசலிசப் புரட்சியின் வேலைத் திட்டத்தை நிரா

www.padippakam.com



கரித்த பொழுது, சோவியத் அரசின் பிரம்மாண்டமான வளங்களை சடரீதியாக அடிப்படையாகக் கொண்ட அதன் சர்வசேச நடவடிக்கைகள் மூலம் ஸ்டாலினிசமானது, 1917-ன் பதாகையை சிடுமூஞ்சித்தனமாகச் சுரண்டியவாறு அதிகோர ரத்தம்தோய்ந்த எதிர்ப்புரட்சிக் குற்றங்களைச் செய்தது




லியான் டிராட்ஸ்கி

இது அக்டோபர் புரட்சியின் வரலாற்றை நெறிமுறை ரீதியாகப் பொய்மைப்படுத்தி மாபெரும் போல்ஷேவிக்குகளின் பெயர்களை அவதூறுகளின் மூலம் மூடி மறைத்தது, லெனினின் கட்சியை அழித்தது. எண்ணற்ற ஆயிரக்கணக்கான மார்க்சிஸ்டுகளைப் படுகொலை செய்ய ஏற்பாடு செய்தது

6. கற்பனை செய்யவே முடியாத கஷ்டங்களின் எதிரிலும் டிராட்ஸ்கி மார்க்சிசத்தின் வரலாற்று மரபுகளை உவர்ஜிதம செய்ததோடு 'தனி நாட்டில் சோசலிசம்' என்ற பிற்போக்கு தேசியவாத வேலைத் திட்டத்திற்கு எதிராக உலக சோசலிசப் புரட்சி முன்னோக்கினையும் பேணினார். அவர் போல்ஷேவிக் கட்சி மீதான ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வெற்றி சோவியத் குடியரசில் முதலாளித்துவ எதிர்ப்புரட்சியின் முதலாவது கட்டத்தை பிரதிநிதித்துவம் செய்வதாக விஞ்ஞான ரீதயில் எடுத்துக் காட்டினார். ஆதலால் முதலாவது தொழிலாளர் அரசினையும 1917 அக்டோபர் புரட்சியின் தேட்டங்களையும் காசகும் பொருட்டு ஒரு வரலாற்றுத் தேவையாக, அதிகாரத்துவத்தை ஒரு அரசியல் புரட்சி மூலம் தூககி வீசுவது அவசியமானது என்றார். இம் முன்னோக்கினை முன்வைக்கையில், டிராட்ஸ்கி கிரெம்ளினில் ஜி.பி.யு. மாஃபியாவை மட்டும அல்லாமல், தோல்விகளதும் தனிமைப்படுததல்களினதும் காலப்பகுதயில் ஒரு அனைத்துலகக் கட்சியை நிறுவ முடியாது எனக் கூறிக்கொண்ட எண்ணற்ற மத்தியவாத போக்குகளையும் எதிர்த்துப் போரார்ட வேண்டியிருந்தது. டிராட்ஸ்கி தமது பதிலில் மார்க்சிய அரசியல் எது சாத்தியமானது அல்லது எது சாத்தியமற்றது என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கவல்லையெனவும், மாறாக அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணிகளை விஞ்ஞான ரீதியில்

www.padippakam.com



புரிந்து கொள்வதைத்தான் அடிப்படையாகக் கொண்டது எனவும் வலியுறுத்தினார். மேலும் அவர் நாளைய புரட்சிகளின் நீரோட்டத்திற்கு எதிராக இன்று நீச்சல் அடிப்பவர்களால் மட்டுமே அது தயார் செய்யப்பட முடியும் எனவும் பிரகடனம் செய்தார்.

7. இந்தமுன்னாய்வு முழுமையாக ஊர்ஜிதமாகிஇருக்கிறது. சோவியத் அதிகாரத்துவம் சர்வதேச சோசலிசம் தொடர்பான அக்கறையை அழுத்தமாக நிராகரிக்கிறது. உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அனைத்து போராட்டங்களையும் எவ்வளவுதான் அது வரம்புக்குட்டடுத்தப்பட்ட போதிலும் அவற்றிலிருந்து தன்னைபகட்டான முறையில வேறுபடுத்தி, அக்டோபர் புரட்சியின் பெரும் வெற்றிகளை அழிப்பதில் அதிகாரத்துவம் வெளிப்படையாகவே ஆரம்பிக்கிறது. மற்றும சோவியத் யூனியனுள முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துகிறது. சோவியத்யூனியன் ஒரு தொழிலாளர் அரசாக உயிர் வாழ்வதென்பது நான்காம் அகிலத்தைக் கட்டிஅமைப்பதிலேயே தங்கியுள்ளது. அக்டோபர்ப் புரட்சி வேலைத்திட்டத்தையும் மரபுகளையும் டிராட்ஸ்கிசம் மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கிறது எனும் உண்மை ஒரு முக்கியமான விவாதத்திற்கு அப்பாற்பட்டதாகும். சோவியத் சமூகத்துக்குள் தொழிலாள வர்க்கத்திற்கும் ஒட்டுண்ணி அதிகாரத்துவத்திற்கும் இடையிலான முனைப்படுத்தல் என்றுமில்லாத செறிவான மட்டத்தை அடைந்துள்ளது. ஒரு புரட்சிகர நிலைமையின் அனைத்து அத்தியாவசிய முன் தேவைகளும்—அனைத்து சமூகத் தட்டுக்களையும் பாதிக்கும் ஒரு தேசிய ரீதியான நெருக்கடியை—பழைய முறைகளில் ஆட்சிசெய்ய ஆளும் வட்டங்களால் முடியாதிருத்தல், இருந்துவரும் நிலைமைகளை ஏற்றுக்கொள்ள ஆட்சி செய்யப்படுபவர்கள் சகிக்கமுடியாத நிலையில் இருத்தல் இவை சோவியத் யூனியனுக்குள் மிக வேகமாக வளர்ச்சி அடைகின்றன. இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முயற்சியில்அதாவது சோவியத் பொருளாதாரத்தை உலக முதலாளித்துவத்துடன் ஒன்றிணைப்பதன் மூலமாகவும் சோவியத யூனியனுக்குள்ளேயே முதலாளித்துவ உறவுகளை நீடிக்கச் செய்வதன் மூலமும கோர்பச்சேவின் கொள்கைகள் நேரடியாகவே, போல்ஷேவிக் புரட்சியின் பிரதான வெற்றிகளான தேசியமயமாக்கப்பட்ட சொத்துறவுகளை மற்றும் அரச திட்டமிடல்கொள்கைகளை அச்சுறுத்துகின்றன" கோர்பச்செவ்ன் பெரஸ்துரோய்கா வேலைத்திட்டத்தின் தாக்கம், திட்டமிட்ட பொருளாதாரத்தின அடித்தளங்களைப் பேணுவதற்காக சோவியத் தொழிலாள வர்க்கத்தின் ஒரு புரட்சிகர இயக்கத்தன் தோற்றத்திற்கு வழிவகுக்கும்.

8. அழிந்து கொண்டிருக்கும் ஆட்சியின் மரண வேதனையின் முதல் வெளிப்பாடு ஆளும் அதிகாரத்தட்டுக்களுக்கிடையிலான குரூரமான மோதல்கள் வெடித்தெழுவதில் வெளிப்படுத்தப்படுவது, சாதாரண வழக்காகும், சோவியத் யூனியனுக்குள் இந்த வரலாற்றுப்போக்கு உணரப்பட்டுள்ளது, எனவே இறுதியில் வரலாறு ஸ்டாலினிசத்தையும்.அதன் குற்றங்களையும் எட்டிப்பிடித்துள்ளது. மாஸ்கோ வழக்குகளை காலதாமதமாக நிராகரித்ததும், அதன் பலி ஆட்களை புனர் நிர்மாணம் செய்ததும், ஸ்டாலினால் கொலை செய்யபபட்ட போல்ஷேவிக் தலைவர்கள் சோவியத் யூனியனுக்கு எதிராக எந்தவொரு குற்றத்தையும் செய்யாதவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளலும், கோர்பச்சேவின் எண்ணங்களும் சூழ்ச்சிகளும் எதுவாக இருப்பினும் அவற்றிலிருந்து ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் எந்த ஒரு குழுவும மீளமுடியாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. டிராட்ஸ்கிச்

www.padippakam.com



துக்கு அதாவது உண்மையான மார்க்சிசத்துக்கு எதிரான அதிகாரத்துவத்தின் போரின் பிரதான ஆயுதமாக அமைந்த குரூரமான பொய்ப்புனைவுகள் அம்பலப்படுத்தப்பட்டு மதிப்பிழந்துள்ளன. சோவியத் யூனியனுக்குள் வெடித்தெழுந்துள்ள அரசியல் நெருக்கடி ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு சாவுமணியை அடித்தது மட்டுமல்லாமல், அது நான்காம் அகிலத்தின் சகாப்தத்துக்கான ஓர் அறிகுறியாகும். அதாவது, நான்காம் அகிலம் சோவியத் மற்றும் சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் பரந்த கட்சியாக மாறும் சகாப்தம் வந்துள்ளது.

## சர்வதேசியமும் பாட்டாளி வர்க்கமும்

9. நான்காம் அகிலத்தின் சகாப்தம் அர்த்தப்படுத்துவது உலகப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையின் புரட்சிகரசர்வதேசியத்தின் மறுஉயிர்ப்பாகும். உண்மையிலேயே ஸ்டாலினிசத்தின் மற்றும் சீர்திருத்தவாத அதிகாரத்துவத்தின் நெருக்கடி, அரசியல் பொருளாதார தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்களின் திவால் நிலையை எடுத்துக்காட்டுகிறது. அது ஏதோ ஒரு விதத்தில் தொழிலாள வர்க்கத்தை ஒவ்வொரு நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கும் மற்றும் உலக ஏகாதிபத்தியத்துக்குமாக முழுமையாக முடிச்சுப் போடுகின்றது. 1914-ல் முதலாவது உலகப்போர் வெடித்ததிலிருந்து மாக்சிஸ்டுகளின் போராட்டம்—முதலாவதாக சமூக ஜனநாயகவாதிகளுக்கு எதிராகவும அதன்பின் ஸ்டாலினிஸ்டுகளுக்கெதிராகவும்—சர்வதேச பதாகையின்கீழேயே தொடர்ந்தது. திட்டவட்டமாக அறுபது ஆண்டுகளுக்கு முன் ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆளுமைக்குள் அடியோடுவிழுந்துவிட்ட அகிலத்தின் வரைவு வேலைத்திட்டம் பற்றிய அவரது விமர்சனத்தில் டிராட்ஸ்கி பின்வருமாறு எழுதினர்:

10. ''எமதுசகாப்தத்தில்-இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில்-அதாவது உலகப் பொருளாதாரமும் உலக அரசியலும் நிதிமூலதனத்தின் மேலாதிக்கத்தின் கீழ் உள்ள நிலையில், எந்த ஒரு கம்யூனிஸ்ட் கட்சியும் முழுமையாயும் பிரதானமாகவும் தனது சொந்த நாட்டினுள் உள்ள நிலைமைகளின், போக்குகளின் வளர்ச்சிகளில் இருந்துஆரம்பிப்பதன் மூலம் தனது வேலைத்திட்டத்தை ஸ்தாபிக்க முடியாது.......1914 -ஆகஸ்ட் 4ஆம் தேதி அனைத்துக் காலங்களுக்குமாக தேசிய வேலைத்திட்டங்களுக்கு சாவுமணி அடிக்கப்பட்டது. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர கட்சி தற்போதைய சகாப்தத்திற்கு, முதலாளித்துவத்தின் அதியுயர்ந்த வளர்ச்சியும் வீழ்ச்சியும் கொண்ட சகாப்தத்தின் தன்மையுடன் தொடர்புடையதான ஒரு சர்வதேசிய வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாக மட்டுமே இருக்க முடியும். ஒரு சர்வதேசிய வேலைத்திட்டம் என்பது ஒருபொழுதும் தேசிய வேலைத்திட்டங்களின் ஒட்டுமொத்தமோ அல்லது அவற்றின் பொதுத் தோற்றங்களின் ஒருங்கிணைப்போ அல்ல. சர்வதேச வேலைத்திட்டம், உலகப் பொருளாதார உலக அரசியல் அமைப்பை முழுமையாகக் கொண்டதாகவும் நிலைமைகளின் போக்குகளின் அவற்றின் அனைத்துத் தொடர்புகளையும் முரண்பாடுகளையும் அதாவது அதன் தனிப் பகுதிகள் பரஸ்பர ரீதியாகப் பகைமையுடன் ஒன்றிலொன்று தங்கியுள்ள நிலைமைகள் பற்றிய ஆய்விலிருந்தே நேரடியாக ஆரம்பிக்க வேண்டும்.

www.padippakam.com



தற்போதைய சகாப்தத்தில் கடந்த காலத்தைவிட மிக அதிக அளவில் பாட்டாளி வர்க்கத்தின் தேசிய அணுகுமுறை ஒரு உலக அணுகுமுறையிலிருந்தே ஊற்றெடுக்க வேண்டும்; ஊற்றெடுக்க முடியும், எதிர்மாருக அல்ல. இங்கே தான் கம்யூனிச சர்வதேசியத்திற்கும் தேசிய சோசலிசத்தின் அனைத்து வகைருக்களுக்கும் இடையிலான அடிப்படையான பிரதானமான வேறுபாடு இருக்கின்றது.''

11. முதலாளித்துவ லாப அமைப்புக்கு ஒரு முடிவு கட்ட நடத்தும் போராட்டத்தின் மூலோபாய அச்சாக இருப்பது, உலக சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவைக் கட்டுவதாகும். இந்தப் போராட்டத்தின் வேலைத்திட்ட அடித்தளம் டிராட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி தத்துவத்தினின்று வந்ததாகும்—அது உலக சோசலிசப் புரட்சி பற்றிய முழுமையாள பரந்த விசாலமான தத்துவமாகும். அது வளர்ச்சியடைந்த பின்தங்கிய நாடுகளின் அதேபோல் சோவியத் யூனியனின் மற்றும உருக்குலைந்த தொழிலாளர் அரசுகளின் (சீனு, வியட்னும, கிழக்கு ஐரோப்பா....) பாட்டாளிகள்ன் நடவடிக்கையை உள்ளடக்கியதாகும். அனைத்துலகக் குழுவின் முன்னேக்கை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர சர்வதேசியம் ஒரு விஞ்ஞான ரீதியாக முதலாளித்துவ உறபத்தி முறையின் சர்வதேசத்தன்மை பற்றியும்,முதலாளித்துவ நெருக்கடியின் உலகப் பரிமாணங்கள் பற்றியும் அனைத்துக்கும் மேலாகப் பாட்டாளி வர்க்கம ஒரு சர்வதேசவர்க்கம் என்னும் தன்மை பற்றி சரியாக உணர்ந்து கொள்வதிலாகும்.

ய
12. புறநிலை ரீதியாக சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஐக்கில் மானது, மிகவும் ஆழ்ந்த முக்கியமான பொருளாதார செயற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டு வருகிறது. நாடு கடந்த கூட்டுக் கம்பெனிகளின் பிரமாண்டமான வள்ர்ச்சியும் அதனுல் ஏற்படும் முதலாளித்துவ உற்பத்தியின் பூகோள ரீதியான ஒருமுகப்படுததலும் முன்னெருபோதும் இல்லாத அளவ்ல் உலகத தொழிலாளர்களை எதிர்கொள்ளும்நிலைமைகளுள் ஒரே தன்மையை உண்டுபண்ணியுள்ளது. முதலாளிகள்ன் தேசிய குழுக்களுக்கிடையில் உலகச்சந்தையின் ஆதிக்கததிற்காக நடக்கும் குரூரமான போட்டி, ஆளும் வர்க்கங்கள் அவர்களது ''சொந்த'' நாடுகளில் தொழிலாள வர்க்கத்தின் மீதான சுரண்டலை உக்கிரப்படுத்துவதன் மூலம, மிகக் குரூரமான முறையில் உலகளாவிய செயல் முறைகள் மூலம் வெளிக்காட்டப் படுகிறது. மூலதனம் தொழிலாள வர்க்கத்துககு எதிராகத் தொடுக்கும் தாக்குதல் நாட்டுக்குப் பின் நாடாக வேலையின்மையில், சம்பளம் வெட்டுதலில, வேகப்படுத்தலில், தொழிற்சங்கம் உடைத்தலில், சமூக நல சேவைகளை வெட்டுவதில், ஜனநாயக உரிமைகளுக்கெதிரான தாக்குதலை மூர்க்கப்படுத்துவதில் நிலைநாட்டப்படுகிறது.

13. நீண்டகாலமாக மார்க்சிசத்தின் அடிப்படை கூற்று, வர்க்கப் போராட்டமானது, வடிவத்தில் மட்டுமே தேசிய ரீதியானது என்றும் சாராம்சத்தில் அது சர்வதேச ரீதியான போராட்டம் என்றும் இருந்தது. என்ருலும் முதலாளித்துவ வளர்ச்சியின் புதிய தோற்றங்களல், வர்க்க போராட்டத்தின் வடிவம்கூட ஒரு சர்வதேசத்தன்மையை எடுக்கவேண்டயுள்ளது. தொழிலாளவர்க்கத்தின் மிகஅடிப்படை ரீதியான போராட்டங்கள்கூட அதன் நடவடிக்கைகளை ஒரு சர்வதேச ரீதியில் ஒருங்கிணைக்கவேண்டியதேவையை முன்வைக்கிறது. பொருளாதாரவாழ்க்கையின் அடிப்பனை

www.padippakam.com



ரீதியான உண்மை என்னவெனில், நாடுகடந்த கூட்டுக்கம்பெனிகள் ஒரு பூர்த்தி செய்யப்பட்ட பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு பல நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் உழைக்கும் சக்தியைச் சுரண்டுகின்றன. அதோடு அவை தமது உற்பத்தியை அதி உயர்ந்த லாபத்தைத் தேடி பல்வேறு நாடுகளில், பல்வேறு கண்டங்களில் உள்ள தமது தொழிற்சாலைகளுக்கிடையில் உற்பத்தியை விநியோகிப்பதோடு இடம் மாற்றுகின்றன. உதாரணமாக ஃபோர்ட் எஸ்காட் (Ford Escort) ஐரோப்பிய மாடலின் பாகங்கள் உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் உட்பாக வலைப் பின்னல்—பிரிட்டனில் கார்புரேட்டர், எண்ணெய் பம்ப், சிலிண்டர் போல்ட்டுகள் — பெல்ஜியத்தில் சீட்பேட்கள் — ஸ்வீடனில் ஹோஸ் கிளாம்ப்ஸ் (Hose Clamps)→டென்மார்க்கில் ஃபேன் பெல்ட்டுகள்—இத்தாலியில் குளிர்நீக்கி வளைவுகள்—ஜப்பானில் (Alternators) ஆல்ட்டனேட்டர்ஸ்—அமெரிக்காவில் ஈ. ஜி. ஆர். வால்வுகளையும் சக்கர நட்டுக்களையும் உற்பத்தி செய்வதைக் கொண்டிருக்கிறது. இவ்வாறு முன்னொருபோதும் இல்லாத அளவு மூலதனத்தின் சர்வதேசஇயக்கம் வெவ்வேறு நாடுகளில் உள்ள தொழிலாள வர்க்க இயக்கத்தின் அனைத்து தேசியவாத வேலைத்திட்டங்களையும் காலாவதியாக்கி, முழுமையாக பிற்போக்காக்கின்றது. அப்படியான தேசிய வேலைத்திட்டங்கள், தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் ''அவர்களுடைய'' ஆளும் வர்க்கங்களுக்கு தன்னிச்சையாகவே கொடுக்கும் ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டு, உலகச் சந்தையின் ''அவர்களுடைய'' முதலாளித்துவ நிலைப்பாட்டைப் பலப்படுத்தும் தேவையுடன் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரங்களை வரிசைக்கிரமமாக குறைக்கின்றன



**1987 ஆகஸ்டில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தென் கொரியா மோட்டார் வாகனம் செய்யும் தொழிலாளர்கள்**

www.padippakam.com



14. முதலாளித்துவ உற்பத்தியின் உலகத் தன்மையானது, மேலும் பிரதான ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையிலான பொருளாதார மற்றும் அரசியல் பகைமைகளை பிரம்மாண்டமான ரீதியில் கூர்மைப்படுத்தியுள்ளது. இது மீண்டும் ஒரு முறை புறநிலை ரீதியாக உலகப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் வரலாற்று ரீதியாக முதலாளித்துவ உடைமை வேரூன்றி இருக்கும் தேசிய அரசு வடிவத்துக்கும் இடையிலான சமரசம் காண முடியாத முரண்பாட்டை முன்னணிக்குக் கொண்டு வந்துள்ளது. "திட்டவட்டமாக பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசத் தன்மையே அதாவது ஒரு வர்க்கம் எந்தவொரு முதலாளித்துவ "தாய் நாட்டுக்கோ" விசுவாசம் கொண்டிராதது, இத்தன்மையே அதனை நாகரிகத்தைக் குரல் வளையில் நெரிக்கும் தேசிய அரசு அமைப்பு சங்கிலியிலிருந்து விடுவிக்கக்கூடிய முழுமையான சமூக சக்தியாக ஆக்குகின்றது.

15. இந்த அடிப்படைக் காரணங்களினால் எந்தவொரு நாட்டைச் சேர்ந்த ஆளும் வர்க்கத்திற்கு எதிரான போராட்டமும், உலக ரீதியில் பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக அணி திரட்டும் இலக்கைக் கொண்ட சர்வதேச மூலோபாயமாக இருந்தால் மட்டுமே, தொழிலாள வர்க்கத்திற்கு நிலையான முன்னேற்றத்தை மட்டுமல்லாது, அதனுடைய இறுதியான விடுதலையைத் தானும் தயாரிக்க முடியும். பாட்டாளி வர்க்கத்தின் இந்த அவசியமான ஐக்கியப்படுத்தல் ஒருகஉண்மையான சர்வதேச பாட்டாளி வர்க்க, அதாவது ஒரு புரட்சிகரக் கட்சியைக் கட்டுவதன் மூலமே அடைய முடியும். தசாப்தங்களாக சளையாத சித்தாந்த மற்றும் அரசியல் போராட்டங்களின் விளைபயனாய் இப்படியான ஒரே ஒரு கட்சி மட்டுமே இருந்து வருகிறது. அதுதான் லியான் டிராட்ஸ்கியால் 1938-ல் அமைக்கப்பட்ட நான்காம் அகிலமாகும். அது இன்று அனைத்துலகக் குழுவினால் வழிநடத்தப்படுகிறது.

## முதலாளித்துவ நெருக்கடியும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையும்

16. முதலாளித்துவத்தின் நீடித்த வரலாற்று ரீதியான நெருக்கடியானது, இன்று பண்பியல் ரீதியான வளர்ச்சிக்குள் வந்திக் கொண்டிருக்கிறது. இது சர்வதேச ரீதியாக வர்க்கப் போராட்டத்தில் ஒரு வெடிப்பை உண்டுபண்ணுவதுடன், அமெரிக்க ஐக்கிய அரசுகள் உட்பட அனைத்து பெரும் ஏகாதிபத்திய நாடுகளிலும் புரட்சிகர நிலைமையை உருவாக்கும். தொழிலாள வர்க்கத்திற்கும், அதன் புரட்சிகர முன்னணிக்குமான இந்த நெருக்கடியின் முழுமையான தாதபரியதை, ஒரு வரலாற்று ரீதியான முன்னோக்கின் கட்டமைபபுக்குள் ஆராய்ந்தால் தான் புரிந்துகொள்ள முடியும்.

17. நான்காம் அகிலத்தின் ஸ்தாபன ஆவணத்தில் டிராட்ஸ்கி இரண்டு உட்தொடர்புள்ள பிரேரணைகளை முன்வைத்தார். அவர் இந்த சகாப்தத்தை ஏகாதிபத்தியத்தின் மரணவேதனை என விளக்கினார். அதே சமயம் மனித இனத்தின் நெருக்கடி சாராம்சத்தில் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமை நெருக்கடி என வலியுறுத்தினார். முதலாவது பிரேரணையின் உள்ளடக்கம் உலக முதலாளித்துவத்தின் ஆற்றொணா மற்றும் தீர்க்க முடியாத தன்மை பற்றிய புறநிலை ரீதியானதும் வரலாற்று ரீதியானதுமான கணிப்பாகும். இரண்டாவது பிரேரணையில் உள்ளடங்

www.padippakam.com



கியிருப்பது. ஒரு சமூக முற்போக்கை அடிப்படையாகக் கொண்ட இந்த வரலாற்று நெருக்கடியின் தீர்வானது, இறுதி ஆய்வில் பார்க்கையில் நான்காம் அகிலத்தைக் கட்டுவதிலேயே தங்கியிருக்கிறது என எச்சரிக்கப் பட்டது.

18. இப்படியான இரண்டு பிரேரணைகள் சம்பந்தமாக என்றும் சரியான தன்மையை அனைத்துலகக் குழு மட்டுமே வலியுறுத்துகிறது. உண்மையான புரட்சிகர மார்க்சிசத்தின் அனைத்து குட்டி முதலாளித்துவ தீவிரவாத எதிர்ப்பாளர்கள், தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் இருக்கும் கொள்கைகள், வேலைத்திட்டம் பற்றிய டிராட்ஸ்கிசத்தின்கூடுதலான கவனத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென நிராகரிக்கின்றனர். அதற்குப் பதிலாக அவர்கள்' டிராட்ஸ்கி வரலாற்று ரீதியாக நிலைத்திருக்கக் கூடிய முதலாளித்துவ அமைப்பைக் குறைத்து மதிப்பிட்டு, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் திறனை முற்று முழுதாக மிகை மதிப்பீடு செய்துள்ளார் என்பதையே நிரூபிககின்றது என வலியுறுத்தினர்கள். இப்படியான டிராட்ஸ்கிசத்தின் 'நிராகரிப்பு' தவிர்க்க முடியாதபடி மார்க்சிசத்தின் அடிப்படை. ரீதியான கருத்துருக்களை ஏறக்குறைய வெளிப்படையாகவே நிராகரிப்பதில் முடிவடைகிறது. இப்படியான ஏகாதிபத்தியச் சித்தாந்த அடிவருடிகள் கூறியதின்படி நான்காம் அகிலத்தின் 'தோல்வி' எனக் கருதப்படுவது,பாட்டாளி வர்க்கம்'ஒரு வர்க்கமாக தோல்வி கண்டதன் பிரதிபலிப்பும் அத்துடன் சோசலிசம பற்றிய அனைத்து வரலாற்று முன்னேக்கின் தோல்வியுமாகும்.

19. அரசியல் பிற்போக்கான கடந்த தசாப்தத்தின் குட்டி முதலாளித்துவ அறிவு ஜீவிகள்மத்தியில், குறிப்பாக புரட்சிகர அரசியலில ஒரு சமயம் ஈடுபட்டவர்கள் மத்தியில் இப்படியான பின்னேக்கான தத்துவங்கள் மிகப்பரந்த ஆதரவாளர்களைப் பெற்றது ஆச்சரியமானதல்ல. இந்த சமூகத்தட்டின் கண்ணேட்டத்தை 'தொழிலாள வர்க்கத்துக்கு பிரியாவிடை, (Farewell to the working Class) எனும புத்தகத்தின் தலைப்பானது தெளிவாக சுருக்கிக் கூறுகிறது. இப்புத்தகத்தில் இதன் ஆசிரியர் ''முதலாளித்துவ வளர்ச்சி தொழிலாள வர்க்கத்தை உண்டு பண்ணியுள்ளது. இது முழுமையாக உற்பத்திச் சாதனங்களை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முடியாதிருக்கின்றதோடு, அதன் உடனடித் தேவைகள் சோசலிச நியாயத்துடன் ஒத்ததாக இல்லை'',என்று ஆணித்தரமாய் கூறுகிருர்.

20. தொழிலாள வர்க்கம் அடைந்த தோல்விகள், பின்னடைவுகள் என்பவற்றிற்கான காரணங்களைப் பாட்டாளி வர்க்கத்தின் சமூகத்தன்மையில் கண்டுபிடிக்க எடுத்த எண்ணற்ற முயற்சிகளின் வடிவங்கள் எவ்வளவு தான் வேறுபட்டனவாக இருந்தபோதிலும, அவை தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்த போலித் தலைமைகளுக்கு அரசியல் வக்காலத்து வாங்குபவையாக அமைகின்றன, டிராட்ஸ்கி படுகொலை செய்யப்பட்டபொழுது, அவரது மேசையின்மேல் இருந்த அவரது கடைசிக்கட்டுரையில் ஸ்பானியப் புரட்சியின் தோல்விக்கு பாட்டாளி வர்க்கத்தைக்குறைகாண முயன்றவர்களுக்கு மிகவும் பொருத்தமான முறையில் பதிலளித்துள்ளார்

21. டிராட்ஸ்கி எழுதுகையில், ''வரலாற்று ரீதியான பொய்மைப் படுத்தல் இதில்தான் அடங்கியுள்ளது. அதாவது ஸ்பானிய பரந்த மக்க

www.padippakam.com



ளின் தோல்விக்கான பொறுப்பு உழைக்கும் பரந்த மக்களின் மேல் சுமத்தப்படுகின்றது. அது பரந்த மக்களின் புரட்சிகர இயக்கத்தை செயல் இழக்கச் செய்த, அல்லது அபபட்டமாக நசுக்கியகட்சிகளின்மேல் சுமத்தப் படவில்லை. பூம்கட்சியின் (Poum) (ஸ்பானிய இடைநிலை வாதிகள்) வக்கில்கள் வெறுமனே தலைவர்களின் பொறுப்பை நிராகரிக்கின்றனர். இதன் மூலம் அவர்கள் சொந்தப் பொறுப்பைத் தாம் ஏற்பதிலிருந்து தப்பித்துக் கொள்ள முயல்கிறார்கள். இந்த கையாலாகாத மெய்யியலானது, பிரபஞ்ச வளர்ச்சியின் சங்கிலித் தொடரில் தோல்விகளை இன்றியமையாத ஒரு இணைப்பாக நியாயப்படுத்த முயற்சிக்கின்றது. இது தோல்வியை ஒருங்கமைத்த வேலைத்திட்டங்கள், கட்சிகள், நபர்கள் என்ற ஸ்தூலமான அம்சங்களின் அடிப்படையில் பிரச்சனையை முன்வைக்க முழுமையாகத் திறனற்றது மட்டுமல்லாது, அது முன்வைக்கவும் மறுக்கிறது. இந்த விதிப்பயன்வாத மெய்யியலும் சாஸ்டாங்கமாக வீழுதலும் புரட்சிகர செயலின் தத்துவமான மார்க்சிசத்தை நேரெதிராக எதிர்ப்பவையாகும்'' என்றார்.

22. கடந்த அரை நூற்றாண்டின் வரலாற்று அனுபவம் டிராட்ஸ்கியின் ஆய்வை அடிப்படையில நிருசுப்படுத்தியுள்ளது. மனித இனத்தை எதிர்கொள்ளும் வரலாற்று ரீதியான பிரச்சனைகளின் தீர்வு, தொழிலாள வர்க்கத்தின் பற்றுக்குறைகளைப் பற்றிய புத்திமயங்கிய மற்றும் சிடுமூஞ்சித்தனமான ஊகங்களில் அல்ல இருக்கின்றது. அது தொழிலாள வர்க்க இயக்கத்தை புரட்சிகர ரீதியாக அணிதிரட்டலைத் தடைசெய்கின்ற, அல்லது ஊறுவிளைவிக்கின்ற தொழிலாள வர்க்கத்தினுள்ளும், அதன் விளிம்புகளினுள்ளும உள்ள அரசியல் போக்குகளுக்கு எதிராக தயவு தாட்சண்ய மற்ற போராட்டத்தில் தான் இருக்கின்றது. இந்த போராட்டத்தைத் தொடுப்பதற்கு தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை ரீதியான மூலோபாய அனுபவங்களைப் பற்றி கசடறப் புரிந்து கொண்ட விளக்கம்தேவை.

23. உலகப் போருக்குப் பிந்திய காலப்பகுதி பற்றிய மார்க்சிச ஆய்வானது, உண்மையில் தவிர்க்க முடியாத ஒரு முடிவுக்கு வருகிறது; அதாவது, ஸ்டாலினிஸ்டுகளும சமூக ஜனநாயக வாதிகளும் வரிசைக் கிரமமாக நடத்திய காட்டிக் கொடுப்புக்களே, சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தை 1930-ஆம் ஆண்டுகளின் மாபெரும் பொருளாதாரத் தாழ்விலிருந்து உயிர்பிழைக்கவும வழி வகுத்து, இரண்டாம உலக யுத்தத்தைத் தொடர்ந்து பாட்டாளி வர்க்கமும காலனித்துவ வெகு ஜனங்களும தொடுத்த உலகளாவிய எதிர்த்தாக்குதலிலிருந்தும உயிர் பிழைக்க முடிந்தது. 1930-ஆம் ஆண்டுகளில் ஐரோப்பாவில் தொழிலாள வர்க்கம் கண்ட தோல்விகள்—குறிப்பாக ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினிலும்—ஸ்டாலினிச மற்றும் சமூக ஜனநாயகத் தலைவர்களின் துரோகக் கொள்கைகளினால் ஏற்பட்டனவாகும. இவை நேரடியாக இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தன. 1930-ஆம் ஆண்டுகளின் பூகோள ரீதியான பொருளாதாரத் தாழ்விலிருந்து மீள்வதற்கு, ஏறக்குறைய 10 கோடி மக்களின் உயிர்கள் உட்பட, பிரம்மாண்டமான உற்பத்தி சக்திகளின் பகுதிகளை அழிப்பதில் முடிந்த குரூரமான யுத்தம் ஒன்று தேவைப்பட்டது என்பதை, ஒருபோதும் மறந்துவிடக் கூடாது இவ்வாறு உலக யுத்தத்துக்குப் பிந்திய பொருளாதாரச் செழுமையானது, மனிதப் பிணங்களாலான மலையொன்றின் மேல் கட்டப்பட்டது. இந்தப பயங்கர அழிவானது, அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு புதிய செல்வங்களுக்கான ஒரு வருவாயாக அமைந்தது. மூலதனப்பசி கொண்ட பிரம்மாண்டமான சந்தை

www.padippakam.com



ஒன்று அதன்முன் இபபோது உருவானது. ஆனால் ஐரோப்பாவிற்கு அமெரிக்க மூலதனப் செல்வது, யால்டா. போர்ஸ்டாம், உடன்பாட்டுக்களை ஐரோப்பியத் தொழிலாள வர்க்கத்தின மேல திணைத்து, அது ஏகாதிபத்தியத்துடன் ஒரு புரட்சிகரமான கணக்குத் தீர்த்தலைத் தடுத்த சமூக ஜனநாயக வாதிகளதும் குறிப்பாக ஸ்டாலினிஸ்டுகளதும் ஒத்துழைப்பிலேயே தங்கியிருந்தது.



**டாலரை உலக நாணயமாக நிலைநாட்டிய —**
**1944-ன் பிரட்டன் ஊட்ஸ் ஒப்பந்தம்**

24. இரண்டாம உலக யுத்தத்திற்குப் பிற்பாடு புனர் நிர்மானம் செய்யப்பட்ட முதலாளித்துவ சமநிலையானது, முதலாளித்தவத்தின் ஆழமான முரண்பாடுகளைத் தீர்க்கத் தவறியது, உலக முதலாளித்துவம் அதன் பிரம்மாண்டமான பொருளாதார விரிவாக்கத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பொழுதே, இந்த ஆழமான முரண்பாடுகள் நெருக்கடியின் புதிய வெடித்தெழுதல்களைத் தயாரித்துக் கொண்டிருந்தன. உலகின் பிரதான ஏகாதிபத்திய வல்லரசு என்ற நிலையிலிருந்த பிரிட்டனின் இடத்தை அபகரித்துக் கொண்ட அமெரிக்க முதலாளித்தவத்தின் விசாலமான நிதி மற்றும் தொழில் துறைப் பலம், உலக யுத்தத்திற்கும் பிந்திய பொருளாதாரச் செழுமையின் அடித்தளமாக அமைந்திருநதது. போருக்குப் பிந்திய உலக முதலாளித்துவத்தின் புனர்நிர்மாணம் எல்லாவற்றுக்கும் மேலாக மேற்கு ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் அமெரிக்க முதலாளித்துவத்தின் சிறகின் கீழ் தொடரப்பட்டது.

www.padippakam.com



25. 1944-ஆம் ஆண்டு பிரட்டன் வுட்ஸ் ஒப்பந்தத்தின்படி 1 அவுன்ஸ் தங்கம் 35 டாலருக்கு சமம் என்ற விகிதத்தின்படி அமெரிக்க டாலர் உலக நாணயமாகியது. 1930-ஆம் ஆண்டுகளில் உலகச் சந்தையைச் சிதறடித்த பாதுகாப்புவாதக் கொள்கைகளுக்கு மீண்டும் செல்லாது தடுக்கவும், முதலாளித்துவ அரசுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகளை நெறிப்படுத்தவும், அமெரிக்காவினால் உருவாக்கப்பட்ட நிறுவனங்களான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, மற்றும் வர்த்தக சுங்க வரிகள் பற்றிய பொது உடன்பாடுகள் போன்றவை நிறுவப்பட்டன. ஏகாதிபத்திய மையங்களில வர்த்தக மோதல்களைத் தணியச் செய்வதற்காக, மேற்கு ஐரோப்பிய மற்றும் அமெரிக்க முதலாளித்துவ வர்க்கங்கள், நலன்புரி அரசுகளின் கொள்கைகளையும் சமூக சீர்திருத்தக் கொள்கைகளையும் தமது கொள்கைகளாக்கிக் கொண்டன.

26. உலகப் போருக்குப் பின்பான ஸ்திர நிலையின் அடிப்படைமுரண்பாடுகள் பின்வருமாறு: சார்பு ரீதியான சமநிலை, ஐக்கிய அமெரிக்க அரசுகளின் ஆதிக்க நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் அமெரிக்க முதலாளித்துவம் அதன் வெளிநாட்டுப் பகையாளிகளை மீண்டும் புனருத்தாரனம் செய்வதற்கான காரணம், உலக சந்தையை புத்துயிரூட்டவும் ஐரோப்பாவிலும், ஜப்பானிலும் புரட்சிகர அலையைத் தடுத்து நிறுத்தவுமாகும, இந்தக் கொள்கையில் அடங்கியிருந்தது, அதன் சொந்த அழிவிற்கான வித்துக்களாகும். இவெளிநாடுகளுக்கு இடைவிடாத அமெரிக்க மூலதனத்தின் ஏற்றுமதி 1960-களில் ஒரு டாலர் நெருக்கடியை உண்டுபண்ணியது. அது அமெரிக்க ஆதிக்கத்தின் அடிப்படையில் இரண்டாம் உலகப் போரின் பின் உருவாக்கப்பட்ட சமநிலையில், உடைவுக்கான சமிக்ஞையைச் செய்தது, அமெரிக்காவின் நீடித்த அயல்நாட்டுச்செலுத்து நிலையின் (Balance of Payments) பற்றுக்குறை, அமெரிக்க முதலாளித்துவத்தின் உலக நிலைப்பாட்டின் சீரழிவின் நிதிபிரதிபலிப்பாகும். இந் நெருக்கடியைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகள் பயனற்றவை என நிருபிப்பதுடன், ஆகஸ்ட் 15, 1971-ல் பிரெட்டன்—வுட்ஸ் அமைப்பின் அடித்தளத்தை, டாலர் தங்கமாற்றை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம் அமெரிக்க ஐக்கிய அரசுகள் அழித்தது.

27. முதலாளித்துவ அமைப்பின் வளர்ச்சி காணும் சமனற்ற நிலை சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினால் துண்டாடப்பட்டதுடன், அதன் புத்துயிர் பெற்ற போராட்டங்களினால் உக்கிரப்படுத்தப்பட்டது, 1920-களிலிருந்து சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் மிகப்பெரும் புரட்சிகர இயக்கத்துக்கான காலகட்டம் 1968க்கும் 75க்கும் இடையிலான பகுதியாக குறிப்பிடப்பட்டது. வியட்னும் தொழிலாளர் விவசாயிகளின் இராணுவ எதிர்ப்பினால்அமெரிக்க ஏகாதிபத்தியம் உடைத்துநொறுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், ஐரோப்பிய அமெரிக்கத் தொழிலாள வர்க்கம் அதன் வாழ்க்கைத் தரங்களை உயர்த்த ஒரு சக்திவாய்ந்த எதிர்தாக்குதலை நடத்தியது. வரலாற்றிலேயே மிகப்பெரிய—பிரம்மாண்டமான பிரான்சின் மே, ஜூன், 1968 பொதுவேலை நிறுத்தம்—தொழிலாள வர்க்கத்தின் மிகப்பெரும் சர்வதேச எதிர்தாக்குதலுக்கான அறிகுறியை வெளிப்படுத்தியது. அடுத்த ஏழு வருடங்களில் நாட்டுக்குப்பின் நாடாக முன்னெரு போதும் இல்லாத அளவு அரசியல் கொந்தளிப்புக்குள் இழுக்கப்பட்டது.

28. 1960-களின் நடுப்பகுதியிலிருந்து அமெரிக்க ஐக்கிய அரசுகள், மிகப்பரந்த மாணவர் எதிர்ப்புகளினாலும் தொழிலாள வர்க்கத்தின் மிக

www.padippakam.com



வும் ஒடுக்கப்படும் பகுதியினரின் நகர்ப்புற எழுச்சிகரப் போராட்டங்களாலும் லட்சக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட, தொழில்துறை வேலை நிறுத்தப் போராட்டங்களினாலும் நடுங்க ஆரம்பித்தது. வியட்னா

மில் எதிர்பாராத இராணுவத் தோல்வியின் பின்னணியில் அரசியல் நெருக்கடி, 1974-ல் நிக்சன் அரசாங்கம் உடைந்ததுடன் முடிவடைந்தது. ஜெர்மனியில் கூட்டாட்சிக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து முதல் முறையாக 1969-ல் தொழிலாள வர்க்கத்தின் எதிர்த்தாக்குதல் சமூக ஜனநாயகவாதிகளை ஆட்சிக்குக் கொண்டு வந்தது. முதலாளித்துவ இத்தாலி "சூடான இலையுதிர் காலம்" எனப் பேர்பெற்ற 1969 வேலை நிறுத்த அலையினால் ஆட்டங்கண்டது. பிரிட்டனில் தொழிற்சங்க நடவடிக்கைகளை சட்டரீதியாகக் கட்டுப்படுத்த டோரி அரசாங்கம் எடுத்த முயற்சி, 1926க்குப் பின் மிகப்பெரும் வேலை நிறுத்த இயக்கமாக வந்த சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை எதிர்கொண்டது. அது 1974 ஆரம்பத்தில் ஹீத் அரசாங்கத்தை ராஜினாமாச் செய்ய நிர்ப்பந்தித்தது. அதே ஆண்டில் போர்ச்சுக்கல்லிலும், கிரீசிலும் இராணுவ, பாசிச சர்வாதிகாரங்கள் வீழ்ச்சி கண்டன. லத்தின் அமெரிக்கா முழுவதும்—பொலிவியா, சிலி, அர்ஜெண்டினாவில் தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவது என்பது அந்த நாள் நடப்பாக இருந்தது. ஆஸ்திரேலியாவில் 23 வருட கால லிபரல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து சமூக ஜனநாயக விட்லம் அரசாங்கத்தை 1972 தேர்தலில் கொண்டுவந்தது, தொழிலாள வர்க்கத்தின் எழுச்சியுறும் போர்க்குணத்தைப் பிரதிபலித்தது. மூன்று வருட கால ஆழமான வர்க்க துருவ—முனைப்படுத்தலும் அரசியல் நெருக்கடியும், நவம்பர் 1975-ல் கவர்னர் ஜெனரலால் விட்லம் வெளியேற்றப்பட்டதுடன் ஒரு உச்சத்துக்கு கொண்டுவரப்பட்டது.

29. பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச புரட்சிகர இயக்கம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் அதிகாரத்தின் கீழுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கடந்து செல்லாமல் இருக்கவில்லை. 1968-ல் பிராக்கின் வசந்த காலம்—செக்கோஸ்லோவேகியா மீதான சோவியத் யூனியனின் இராணுவ ஆக்கிரமிப்புடன் முடிவடைந்தது. ஆனால் சற்றே இரண்டு வருடங்களின் பின்பு போலந்து தொழிலாள வர்க்கத்தின் மிகப் பிரம்மாண்டமான புரட்சிகர இயக்கம் 'கோமுல்கா' அரசாங்கத்தைக் கவிழ்த்தது.

30. பிரெட்டன் வூட்ஸ் அமைப்பின் டாலர் தங்கமாற்றுரிமை மற்றும் நிலையான நாணயமாற்று வீதங்கள் ஆகஸ்டு71-ல் வீழ்ச்சி கண்டதிலான ஸ்திரமற்ற பிரதிவிளைவுகள் முதலாளித்துவ அமைப்பைப் புரட்சிகரமாகத் தூக்கி வீசுவதற்கான சாத்தியக் கூறை அதிகரித்தது. உடனடியாக உற்பத்தியில் ஒரு கூர்மையான உயர்ச்சி நிலைமை தொடர்ந்து இருந்தபோதிலும், அந்த செழுமை குறுகிய காலமானதென நிரூபிக்கப்பட்டது. ஆகஸ்டு 15-ன் பணவீக்கத்தாக்கம் 1973இறுதியில் 'எண்ணெய் அதிர்ச்சிக்கு வழிவகுத்தது. அப்போது அரபு—இஸ்ரேல யுத்தத்தின் இறுதியில் எண்ணெய்வள ஏற்றுமதி நாடுகள் (OPEC) எண்ணெய் விலைகளில் நான்கு மடங்கு அதிகரிப்பை அறிவித்தன. இது 1930-களில் இருந்து முதலாளித்துவத்தால் அனுபவிக்கப்பெற்றதில் மிக மோசமான பின்வாங்கலைத் தூண்டிவிட்டது.

31. ஒழுங்கீனமான கொடிய இப்படியான காலங்களின்போது முதலாளித்துவம் உயிர்பிழைத்ததானது, 1950-களிலும் பார்க்கக் குறைவில்லா

www.padippakam.com




1968 மே ஜூன் நிகழ்ச்சியின்போது, பிரான்சின் ரெனால்டு தொழிலாளர்கள் அவர்களுடைய ஆலையை ஆக்கிரமித்தல்

மல், இரண்டாம் உலகப் போரின் முடிவைத் தொடர்ந்த இக்கட்டான முதல் வருடங்களில் ஸ்டாலினிச, மாவோவாத சமூக ஜனநாயக அதிகாரத்துவங்களிலும் உண்மையில் எப்பொழுதும் போலவே அமெரிக்க ஐக்கிய குடியரசுகளில் உள்ள முழுமையாகச் சீரழிந்த தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் மீதும் தங்கியிருந்தது. நாட்டுக்குப்பின் நாடாக, பிரதான தொழிலாள வர்க்கக் கட்சிகள், சோசலிசப் புரட்சிக்கான பாதையிலிருந்து பாட்டாளி வர்க்கத்தைத் திசைதிருப்ப நனவாக வேலை செய்தது. 1968-ல் பிரான்சிலும் 1969-ல் இத்தாலியிலும் 1971-ல் போர்ச்சுக்கல், கிரீசிலும் மீண்டும் ஸ்பெயினில் 1975-76 லும் ஸ்டாலினிஸ்டு தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிகள் முதலாளித்துவ ஆட்சியை ஸ்திரப்படுத்தவும், ஆட்டம் கண்ட ஆளும் வர்க்கத்தின் நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டவும், தமது சக்தியிலிருந்து அனைத்தையும் செய்தன. எல்லாவற்றிலும் பெரிய காட்டிக்கொடுப்பு சிலியில் செய்யப்பட்டது. அங்கே செப்டம்பர் 1973-ல் இராணுவ பாசிச சதிக்கு வழிவகுத்த சால்வடோர் அலண்டேயின் முதலாளித்துவ மக்கள் முன்னணி அரசாங்கத்துடன் தொழிலாள வர்க்கத்தை ஸ்டாலினிஸ்டுகள் முடிச்சுப் போட்டனர்.

32. சில தொழிலாள வர்க்கத்தின் தோல்விக்கு சமூக ஜனநாயகவாதிகளின் பங்களிப்பானது, உலகத்தின் ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் அவர்களின் பங்குடன் இசைந்ததாக இருந்தது. தனியாகவோ அல்லது

படிப்பகம்

www.padippakam.com



ஸ்டாலினிஸ்டுகளின் ஒத்துழைப்புடனே இப்படியான ஆழமான அரசியல் பொருளாதார நெருக்கடி வருட காலங்களில் சமூக ஜனநாயகவாதிகள், ஏகாதிபத்தியத்தின் மிக அடிப்படையான நலன்களுக்கு சேவை செய்தனர். இந்த எதிர்ப்புரட்சிகர பாத்திரம் அதன் மிக சரியான வெளிப்பாட்டை ஜெர்மனியில்—பிராண்டின், போர்ச்சுகல்—ஷ்சாரஸ்ஸின், ஸ்பெயினில—கோன்சாலேயின், ஆஸ்திரேலியாவில்—விட்லெமின் (அவரின் ஆபீசிலிருந்து அவரின் சொந்த நீக்கத்தை ஏற்றுக்கொண்டு-கவர்னர் ஜெனரலின் சதிக்கெதிரான தொழிலாள வர்க்க இயக்கத்தைத் தடைப்படுத்தச் செய்தார்) சிலியில்—அலெண்டேயின் கொள்கைகளிலும எடுத்துக் காட்டியது.



கெனன்



மைக்கேல் பப்லோ

## நான்காம் அகிலமும் சந்தர்ப்பவாதமும்

33. ஸ்டாலினிஸ்டுகளும் சமூக ஜனநாயகவாதிகளும் தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்ததை குற்றம் சாட்டுவது எவ்வாறுயினும் போதுமானதல்ல. கேள்வி எழுப்பப்பட வேண்டும்: இந்தக் காலத்தில் நான்காம் அகிலத்தின் பங்கு என்ன? ஏன் அது தொழிலாள வர்க்கத்தின் தலைமையை ஸ்டாலினிஸ்டுகளிடமிருந்தும் சமூக ஜனநாயக வாதிகளிடம் இருந்தும் பிடுங்கி எடுத்து அதனை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியவில்லை?

34. இந்தக் கேள்விக்கான பதில் 1953-ல் இருந்து நான்காம் அகிலத்தின் வரலாற்றின் ஆய்வில் தங்கியிருக்கிறது. அப்படியான ஒரு ஆய்வு காட்டுவது என்னவென்றுல், மே-ஜூன் 1968-ல் பிரெஞ்சு பொதுவேலை நிறுத்தம் வெடித்தெழுவதற்கு முந்தைய 15 வருட காலங்களில் நான்காம் அகிலம பப்லோவாத சந்தர்ப்பவாத வளர்ச்சியினுல், மிக மோசமாக பலவீனப் படுத்தப்பட்டிருந்தது.

35. 1951-ன் ஆரம்பத்திலேயே மூன்ருவது உலக மாநாட்டில், அப்பொழுது நான்காம் அகிலத்தின் செயலாளராக இருந்த பப்லோ ஒரு முன்னேக்கை முன்வைத்தார். அது ஸ்டாலினிசத்தின் மாற்ற முடியாத எதிர்ப்புரட்சித்தன்மை பற்றிய டிராட்ஸ்கியின் அடிப்படை மதிப்பீட்டுக்கு

படிப்பகம்

www.padippakam.com



கைவிட்டது மட்டுமல்லாமல், அதன் இடத்தில் அதிகாரத்துவத்தின் சுயசீர்திருத்தம் எனும் பல இடங்களில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட தத்துவத்தை முன்வைத்தது;: அவரின் நெருங்கிய கூட்டாளியான எர்னஸ்ட் மண்டெலின் ஆதரவுடன் அவர் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான தலைமைப் பங்கை அடிப்படையாகக் கொண்ட ஒரு மத்திய, உலக புரட்சிகர மூலோபாயத்தை நிராகரிக்கும்படி பிரேரித்தார். பதிலாக, அவர் நிலவுகின்ற தேசிய நிலைமைகளினால் நிர்ணயிக்கப்பட்ட, சந்தர்ப்பவாதத் தந்திரங்களினால் வழிகாட்டப்பட்ட, தேசியக்கட்சிகளின் ஒரு கூட்டாக நான்காம் அகிலத்தை உடைக்க செயல்பட்டார் நடைமுறையில பப்லோவின் முன்னோக்கு. ஒரு குறிப்பிட்ட. நாட்டில் தொழிலாள இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய எந்தவொரு அரசியல் சக்திகளுக்கும்—ஸ்டாலினிச, சமூகஜன நாயக. முதலாளித்துவ தேசியவாத அல்லது குட்டிமுதலாளித்துவ தீவிரவாத சக்திகளுக்கு—நான்காம் அகிலத்தின் பகுதிகளை அரசியல் ரீதியான கீழ்ப்படியச் செய்வதையே அர்த்தப்படுத்தியது. "அனைத்து ஸ்தாபன வழிப்பட்ட சிந்தித்தல்களை, அது சம்பிரதாய சுதந்திரமாகவோ அல்லது வேறு விதமாகவோ இருப்பினும் பரந்த இயக்கத்தினுள் அது ஒவ்வொரு நாட்டினுள்ளும் அதனை வெள்ப்படுத்துகிறவாறு உண்மையான ஒருங்கிணைப்புக்கு அல்லது இந்த இயக்கத்தினுள் செல்வாக்கு செலுத்தப் படக்கூடிய ஒரு முக்கியமான நீரோட்ட த்தினுள் ஒருங்கிணைக்கப்பட வேண்டியது அவசியம்" என பப்லோ வலியுறுத்தினார்.

36. நான்காம் அகிலத்தை அரசியல் ரீதியாகவும் இயக்க ரீதியாகவும் கலைத்துவிட அச்சுறுத்திய இந்த சந்தர்ப்பவாத தோற்றத்தை தோற்கடிப்பதற்காக சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP) அமைப்பாளரான ஜேம்ஸ் பி. கெனனின் முன்முயற்சியான அனைத்துலகக் குழு ஆரம்பிக்கப்பட்டது. 1953 நவம்பரில் பிரிட்டனிலும் மற்றும் பிரான்சிலுமுள்ள டிராட்ஸ்கிஸ்டுகளின் ஆதரவுடன் கெனனால் வெளியிடப்பட்ட டகிரங்கக் கடிதம் பப்லோவாதிகளை வெளியேற்றும்படி அறை கூவியது.

37. பப்லோவாதத்திற்கெதிரான போராட்டத்தின் புறநிலைரீதியான விளைபயன்கள் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியில் வெளிக் கொண்டுவரப்பட்டன. சிறப்பாக கொலைபாதக சர்வாதிகாரியின் 1953-ஆம் ஆண்டு மரணத்திற்கும், பிப்ரவரி 1956-ல் குருஷ்சேவ், ஸ்டாலினின் சில குற்றங்களை அம்பலப்படுத்துவதற்குமிடையில் ஏற்பட்ட ஸ்டாலினிசத்தின் பெரும் நெருக்கடி உச்சகட்டத்தை அடைந்தது. இதையடுத்து நவம்பர் 1956-ல் ஹங்கேரியப்புரட்சி நசுக்கப்படுவதோடு பப்லோவின் அதிகாரத்துவ சுய சீர்திருத்த தத்துவமானது, முழுமையாக அம்பலப்படுத்தப்பட்டது. பப்லோவாதத்துக்கு எதிரான போராட்டமானது ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், கெனனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் 1957-ல் இருந்து பப்லோவாதிகளுடன் கோட்பாடற்ற முறையில் மீண்டும் இணைவதற்குத் திரும்ப ஆரம்பித்தனர்: இந்த அபிவிருத்தி சோசலிசத் தொழிலாளர் கட்சியானது, என்றும் மேலும் வெளிப்படையாக ஐக்கிய அமெரிக்க அரசுகளில் உள்ள நடுத்தர வர்க்கத்தினரின் தீவிர்வாதத்திற்கு அடிபணிந்தும், வழமையான பாட்டாளிவர்க்க நோக்கு நிலையைக் கைகழுவி விட்டதும் டிராட்ஸ்கிசத்தை வரலாற்று ரீதியாகக் காட்டிக்கொடுத்ததாக் அமைந்ததோடு, அது சந்தர்ப்பவாதத்திற்கெதிரான அனைத்துலகக் குழுவின் போராட்டத்தைப் பாரதூரமாகக் கீழறுத்தது.

படிப்பகம்

38. கேஸ்ட்ரோவினுடைய குட்டிமுதலாளித்துவ ஜூலை 26 இயக்கத்தை, சோசலிசத் தொழிலாளர் கட்சி அரவணைத்து. அதை டிராட்ஸ்கிசத்தின் நியூாய பூர்வமான ஒரு பிரதியீடு என்று பிரகடனப்படுத்தியதோடு, கியூபாவில் ஒரு தொழிலாளர்களின் அரசு அமைக்கப்பட்டாயிற்று என்று அறிவித்தது. இது நேரடியாக பப்லோவாதிகளுடன் மறு இணைப்புச் செய்து ஐக்கிய செயலாளர் குழுமத்தை அமைக்க இட்டுச் சென்றது. கேஸ்ட்ரோவை "சோசலிசத் தொழிலாளர் கட்சி போற்றி புகழ்வதற்கு மையமாக அமைந்தது என்னவென்றால், பின்தங்கிய நாடுகளில் ஜனநாயகப் புரட்சிகளை முழுமையாக்குவதற்கு சோசலிசப் புரட்சியும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் தேவையில்லை என்று கோரியதாகும். இந்த நிலைப்பாட்டின் மறுபக்கத்தின் அடிப்படையானது என்னவென்றால், பின்தங்கிய நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்தை எல்லா தேசிய முதலாளித்துவப் பகுதிகளில் இருந்தும் நிலை நாட்டி, நான்காம் அகிலத்தின் பகுதிகளை அமைத்து, ஜனநாயகப் புரட்சியில் தொழிலாள வர்க்கத்தின் மேலாதிக்கத்திற்காகப் போராடுவதற்கு தேவையில்லை என்பதாய் இருந்தது. மறு இணைப்பை நிராகரித்து அனைத்துலகக் குழுவின் பதாகையைத் தற்காத்து நின்ற பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு டிராட்ஸ்கிஸ்டுகளால் இந்தக் காட்டிக் கொடுப்பு எதிர்க்கப்பட்டது. என்றாலும் அனைத்துலகக் குழு நான்காம் அகிலமாக இருந்ததன் ஒரு சிறிய சிறுபான்மையையே கொண்டிருந்தது. பப்லோவினதும் மென்டெலினதும் ஹேன்சனினதும் தலைமையைப் பின் தொடர்ந்த உலகம் முழுவதும் உள்ள இயக்கங்களில் சந்தர்ப்பவாதத்துக்கு ஏற்பட்ட வெற்றி, சர்வதேசத் தொழிலாள வர்க்கத்துக்கு அழிவுகரமான விளைபயன்களை ஏற்படுத்தியது.

39. இது மறு இணைப்புச் செய்யப்பட்டு ஒரு வருடத்திற்குள் எடுத்துக் காட்டப்பட்டது. 1964-ஜூனில் பப்லோவாத சர்வதேசத்தில் இலங்கைப் பிரிவான லங்கா சமசமாஜ கட்சி, (LSSP), நாட்டின் முன்னணி முதலாளித்துவ கட்சியான பண்டாரநாயகா அம்மையாரின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் (SLFP) ஒரு கூட்டரசாங்கத்தில் நுழைந்தது. 1953-ல் அனைத்துலகக் குழு அமைக்கப்படுவதை லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) எதிர்த்ததுடன், அதைத் தொடர்ந்து பப்லோவாதிகளுடன் SWP-ன் மறு இணைப்புக்கான தயாரிப்பில் மையப் பங்கு வகித்தது. நான்காம் அகிலத்தின் சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் LSSP, இலங்கையில் அதன்வேலையில் அனைத்து அடிப்படை டிராட்ஸ்கிச கோட்பாடுகளையும், நிரந்தரப் புரட்சி தத்துவத்தின் முக்கியமான போக்குகளையும் வரிசைக்கிரமமாக நிராகரித்தது. இந்த காட்டிக் கொடுப்புக்கள் பப்லோவாதிகளால் மூடி மறைக்கப்பட்டன. ஜூன் 1963-ல் மறுஇணைப்புக்கான மாநாட்டில் சேர்த்துக் கொண்ட தீர்மானம் பிரகடனப் படுத்தியதாவது : "எமது இலங்கைப்பிரிவு 1960-ல் SLFP-ன் மிதவாத முதலாளித்துவ அரசாங்கத்துக்கு ஆதரவளித்த அதன் தவறான அணுகுமுறையை முற்போக்கான முறையில் திருத்தக்கொண்டது. மக்கள் செயலுக்குச் செல்லத் தொடங்கியதிலிருந்து, "அது அதன் நேர்மைறைய தேர்தல் கூட்டாளிகளுக்கு எதிராக மக்களின் தலைமையின் முன்னணியில் அதனை நிறுத்திக் கொள்ளத் தயங்கவில்லை." சரியாக ஒரு வருடத்தின் பின் LSSP, SLFP-ன் தலைமையிலான கூட்டரசாங்கத்துடன் இணைந்தது. இந்தக் காட்டிக் கொடுப்பு ஆசியா முழுவதும் சோகமான பிரதி விளைவுகளை கொண்டிருந்தது. அது உடனடியாக ஸ்டாலினிஸ்டு மற்றும் மாவோயிச கட்சிகளின் ஆதரவைப் பலப்படுத்தியது. இந்த கட்சிகளின் அரசியல் செல்வாக்கு LSSP நிரந்தரப்புரட்சி வேலைத் திட்டத்தை முன்னெடுத்து இலங்கை

www.padippakam.com


யில் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கிவீசப் போராடி இருக்குமாயின் சுக்கு நூறாக்கப்பட்டிருக்கும். இந்த அர்த்தத்தில் LSSP-ன் காட்டிக் கொடுப்பு, 1965-ல் மாவோவாத கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கொள்கைகளினால் முழுமையாக நிராயுதபாணியாக்கப்பட்டிருந்த இந்தோனேசிய தொழிலாள வர்க்கத்தின் அழிவுகரமான தோல்விக்கு நேரடியாகப்பங்களித்தது.

40. பப்லோவாத சந்தர்ப்பவாதம் ஆயிரக்கணக்கான டிராட்ஸ்கிச ஊழியர்களை வரிசைக்கிரமமாக தவறான வழியில் இட்டுச் சென்று, இறுதியாகநான்காம் அகிலத்தின் ஒரு பெரும் பகுதியை அழித்தது. ஸ்டாலினிஸ்டுகளின், சமூக ஜனநாயகவாதிகளின் வெளிப்படையான துரோகத்திற்கு ஒரு வெற்றிகரமான சவாலாக தொழிலாள வர்க்கம் வருவதிலிருந்து திசை திருப்புவதில் முக்கியமான அரசியல் பங்கை பப்லோவாதிகள் வகித்தனர். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர சக்தி இல்லையென்று பப்லோவாதிகள் முழுமையாக நிராகரித்து, [illegible]வர்களை ஒரு புதிய புரட்சிகர முன்னணி எனப்போற்றினர். (மெண்டெலின் "சிவப்பு பல்கலைக் கழகங்கள்" தத்துவம்) அத்துடன் பரந்த தொழிலாள வர்க்க இயக்கங்களின் ஸ்டாலினிச, சமூக ஜனநாயகவாத தலைமைக்கு எந்த ஒரு அரசியல் சவால் ஏற்படுவதையும் எதிர்த்தனர்.

41. லத்தீன் அமெரிக்காவில் பப்லோவாத இடைநிலைவாதத்தின் சந்தர்ப்பவாதத்தின் எதிர்ப்புரட்சிகரத் தன்மை தீர்க்கமாக நிலைநாட்டப்பட்டது. உள்ளூர் ஸ்டாலினிச சமூக ஜனநாயகக் கட்சிகளின் விதிவிலக்கான பலவீனமுள்ள சூழ்நிலைமை டிராட்ஸ்கிச இயக்கத்துக்கு தொழிலாள வர்க்கத் தலைமையை [illegible] ஒரு [illegible] [illegible]த்தை வழங்கியது. ஆனால் கேஸ்ட்ரோயிசத்தை, பெரோனிசத்தை மற்றும் முதலாளித்துவ தேசியவாதத்தின் குட்டி முதலாளித்துவ தீவிரவாதத்தின் ஏனையவடிவங்களையும் பப்லோவாதிகள் போற்றிப் புகழ்ந்தது. 1970 களில் பயங்கரமான தோல்விகளுக்கு கிரிமினல் பங்களிப்புகளாக இருந்தது. ஆகஸ்டு 1971-ல் இராணுவத்தின் கைகளில் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் தோல்வி, நேரடியாக இடைநிலைவாத POR-யினால் பின்பற்றப்பட்ட கொள்கைகளின் காரணத்தினாலாகும். சிலியில் பப்லோவாதிகளின் கலப்புவாதக் கொள்கைகள் அலண்டேயின், ஸ்டாலினிசத்தின்காட்டிக் கொடுப்புகளுக்கு வசதியளித்தது. அலண்டேதேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் மூன்று வருடங்களுக்கும் சற்றுக் குறைவாக, சிலி தொழிலாள வர்க்கம் ஒரு உண்மையான புரட்சிகர நிலைமையை எதிர்கொண்டபொழுது பப்லோவாதத் தலைவர் லூயிஸ் விட்டல் ஏற்கனவே தனது கட்சியை குட்டி முதலாளித்துவ MIR-னுள் கலைத்தபின் பின்வருமாறு எழுதினார்: "கேள்விக்கிடமற்ற உண்மை என்னவென்றால், இரண்டாம் உலகப் போரின் பின்னைய காலகட்ட புரட்சிகள், நாளின் நடப்பாக இயங்குகின்ற கொரில்லாப் போர்த் தந்திரத்தை முன்வைத்தன. அதன் கேந்திர மையம் நாட்டுப்புறத்தலாகும்." இந்த சொற்கள் 1960-களில் பப்லோவாத முன்னோக்குகளின் குணாம்சங்களாக இருந்தது. டிராட்ஸ்கிசத்தின் முழுவேலைத்திட்ட மரபையும் கைவிடுவதற்கு [illegible] நியாயப்படுத்தலை வழங்கியது. அர்ஜெண்டினாவில் 1963-மற்று [illegible]வினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் தவறான வழிகாட்டல், எந்த அளவும் குறைவில்லாத பயங்கரமான பிரதிவிளைவுகளைக் கொண்டிருந்தது. அந்த [illegible] எர்னஸ்டோ சேகுவாராவை டிராட்ஸ்கிக்கு சம [illegible] அரசியல் தத்துவவாதியென துதிபாடிய மெண்டெலின் [illegible] பப்லோவாத இயக்கத்தின் ஒரு பிரிவினர் நகர்ப்புற கொரில்லா [illegible]

www.padippakam.com



திரங்களின் பக்கம் திரும்பினர், மற்றும் சரீரரீதியாக அழித்தொழிக்கப்பட்டனர். மரினோவாலும் ஹேன்சனினாலும் தலைமை தாங்கப்பட்ட மற்றைய பிரிவு இழிவான முறையில் பெரனிடமும் முதலாளித்துவ அரசிடமும் சரணு கதி அடைந்தது. அனைத்து பப்லோவாதப் பிரிவுகளின் காட்டிக் கொடுப்புக்களின் இணைந்த உற்பத்தியே 1976-ல் ஜெனரல் விடெலாவின் வெற்றியாகும்

42. 1968-75 இடையிலான முக்கிய வருடங்களில் உலக நிலைமை பிரம்மாண்டமான சர்வதேச தொழிலாள வர்க்க எழுச்சியினாலும் பொருளாதாரக் கொந்தளிப்பினாலும் ஆட்டம் கண்டிருந்தபோது, ஏகாதிபத்தியம் உயிர் பிழைப்பதை சாத்தியமாக்கிய ஒரு முக்கியமான துணைப்பங்கை, பப்லோவாத இடைநிலைவாதிகளின் சந்தர்ப்பவாதம்—அது ஸ்டாலினிசம். சமூக ஜனநாயகம் மற்றும் முதலாளித்துவ தேசியவாதத்துக்கு வழங்கிய அதன் உதவியின்மூலம் வகித்தது. அது இடைநிலைவாதம் ஏகாதிபத்தியத்தின் இரண்டாம்தர ஏஜென்சி எனும் டிராட்ஸ்கியின் மதிப்பீட்டை ஊர்ஜிதம் செய்தது. இயற்கையாகசீவ குட்டி முதலாளித்துவ தோல்விவாதிகள், பாட்டாளி வர்க்கத்தின் கையாலாகாத தன்மை பற்றி அதிமேதாவித்தனமாக பேசிய அதே சமயம் முதலாளித்துவ வர்க்கத்திற்கு புதிய வளமான சந்தர்ப்பங்களைக் கண்டார்கள். மரணித்துக கொண்டிருக்கும் முதலாளித்துவம் 1980-ஆம் ஆண்டுகள் வரையிலும் கூட உயிர்வாழ முடிந்தது என்பது சம்பந்தமாக அவர்கள் ஸ்தூலமாக ஆராய அக்கறை கொள்ளவில்லை பப்லோவாதிகளைப்பொருத்த அளவில், அவர்களுடைய சொந்தக் கொள்கைகளின் புறநிலையான முக்கியத்துவம் பற்றியோ வரலாற்று விளை பயன்கள் பற்றியோ, ஆராய அவர்கள் சிறிதும் கரிசனைகொள்ளவில்லை. இடைநிலைவாதிகளின், தீவிரவாதிகளின், வர்க்கநிலை இழந்த அறிவு ஜீவிகளின் அனைத்துக் குட்டி முதலாளித்துவ சகோதரத்தன்மை தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் திறன்களை முடிகூட்டியே உதறித் தள்ளுபடி செய்து, அதன் தோல்வி தவிர்க்க முடியாததென ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள், 1964-ல் இலங்கையிலும், 1968-ல் பிரான்சிலும், 1973-ல் சிலியிலும், 1974-ல் கிரீஸ் மற்றும் போர்ச்சுக்கலிலும் ஒரு சரியான மார்க்சிசக் கொள்கையின் விளைபயன்கள் என்னவாக இருந்திருக்கும் என்பதைப் பற்றிக்கூட ஒருபொழுதேனும் சிந்திக்கவில்லை.

43. மறுபுறம் அனைத்துலகக் குழுவானது இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய காலப்பகுதியில், பாட்டாளி வர்க்கத்தின் மூலோபாய ரீதியான அனுபவங்களில் இருந்து தீர்க்கமான படிப்பினைகளை அகழ்ந்தெடுத்து, வரவிருக்கும் புரட்சிகர வெடித்தெழுதல்களுக்கான தயாரிப்புகளுக்கு அதனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது: உலக சோசலிசப் புரட்சியின் கட்சியாக நான்காம் அகிலத்தைக்கட்டி சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்த. சந்தர்ப்பவாதத்திற்கும் இடைநிலைவாதத்திற்கும் எதிராக சமரசமற்ற சளையாத போராட்டம் தேவையானது.

## சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டத்தின் ஒரு வரலாற்று இருப்பு நிலைக்குறிப்பு

44. 1953-ஆம் ஆண்டில் நான்காம் அகிலத்தினுள் சந்தர்ப்பவாதத்தின் வளர்ச்சியை எதிர்த்துப் போராட அனைத்துலகக் குழு அமைக்கப்பட்ட பொழுது, ''வைதீக டிராட்ஸ்கிசத்தின்'' (Orthodox Trotskyism) வேலைத்திட்டத்திற்கு எதிரான திருத்தல்வாதத் தாக்குதல்களை எதிர்த்து சர்வதேச வேலைத்திட்டம் ஒன்றைத் தொடுக்கும்படி கெனனுடைய உலக டிராட்ஸ்கிச

www.padippakam.com



இயக்கத்திற்கோர் பகிரங்கக் கடிதப் அறைகூவல் விடுத்தது அது மார்க்சியத்திற்கும் பப்லோவாதத்திற்கும் இடையிலான பிளவு சமரசத்திற்கு சாத்தியமில்லாத அளவு ஆழமானது என்று வலியுறுத்தியது பப்லோவாதிகளின் சந்தர்ப்பவாதத் தத்துவங்களும் அரசியலும் நான்காம் அகிலத்தினுள் வெற்றி ஈட்டுவனவாயின், சர்வதேச தொழிலாள இயக்கத்தினுள் டிராட்ஸ்கிசம் ஒரு இயக்க பூர்வமான புரட்சிகாசக்தியாக இருப்பது கலைத்து அழிக்கப்படும்'' என்று கெனன் எச்சரிக்கை செய்தார்.



1964ல் இலங்கையில் ஒரு முதலாளித்துவ கூட்டு அரசாங்கத்தினுள் புகுந்த லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்பு

45. ஆனால் சில வருடங்களினுள் சோசலிசத் தொழிலாளர் கட்சியின் தலைமை பப்லோவாதத்திற்கெதிரான போராட்டத்தைக் கைவிட்டு, 1953-ஆம் ஆண்டில் பிளவிற்கு வழிகோலிய வேலைத் திட்டப் பிரச்சனை சம்பந்தமாக எந்த வித கலந்துரையாடலும் இன்றி, பப்லோவாத சர்வதேச செயலாளர் குழுமத்துடன் மீண்டும் இணைவது பற்றி வலியுறுத்த ஆரம்பித்தது. இந்த கோட்பாடற்ற ரீதியில் மீண்டும் இணைவதற்கான யோசனை — கோட்பாடற்றது ஏனென்றால், அது திட்டவட்டமாக 1953 ல் கிளப்பப்பட்ட பிரச்சினைகள்பற்றிய கலந்துரையாடல்கள் தலைதூக்காது நசுக்குவதை அடிப்படையாகக் கொண்டிருந்ததனால்—அனைத்துலகக் குழுவின் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப் பகுதிகளினாலும் சோசலிசத் தொழிலாளர் கட்சியினுள் உள்ள ஒரு சிறுபான்மையினராலும் எதிர்க்கப்பட்டது. இந்த எதிர்ப்புக்கு எதிராக ஜூன் 1963-ல் மீண்டும் மறு இணைப்பு செய்யப்பட்டது.

46. அனைத்துலகக்குழு அமைத்து 35 வருடங்களுக்குப் பின்னும் சோசலிசத் தொழிலாளர் கட்சி-பப்லோவாத மறு இணைப்பின் கால் நூற்றாண்டுக்குப் பிற்பாடும் நான்காம் அகிலத்தின் சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் அடிப்படை ரீதியான வேலைத்திட்ட

வினைபயன்களைப்பற்றி. ஒரு முழுமையான பாலன்ஷீட் ஒன்றை வகுக்கக் கூடியதாக இருக்கின்றது. உண்மையில் சந்தர்ப்பவாதத்தின் தன்மைக் கேற்ப, பப்லோவாதம் டிராட்ஸ்கிசத்துடனான அதன் வேறுபாடுகளை ஒரு வரி சைக்கிரமமாக எடுத்துக்கூற ஒருபொழுதும் முற்படவில்லை. ஆனால் அதன் திருத்தல்களின் ஒட்டுமொத்தம், குறிப்பாக டிராட்ஸ்கிசத்தினதும், பொதுவாக மார்க்சிசத்தினதும் அடிப்படைக் கோட்பாடுகள் அத்தனையையும் முற்றுமுழு தாக நிராகரிப்பதை பிரதிநிதித்துவம் செய்கின்றது பப்லோவாதிகள் நான் காம் அகிலம் அமைக்கப்பட்ட தன் அரசியல் அத்திவாரங்கள் அனைத்தையும் நிராகரித்துள்ளார்கள். அதாவது அவர்கள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வரலாற்றுரீதியானதும் சமூகரீதியானதுமான செயற்பாடுபற்றி டிராட்ஸ்கியின் ஆய்வையும் அவரது நிரந்தரப் புரட்சி தத்துவத்தையும் நிராகரித்துள்ளார்கள். இன்று பப்லோவாத தத்துவங்களை தீர்க்கமான வரலாற்று அனுபவங்களின் வெளிச்சத்தில் கணிப்பிடுவது சாத்தியமாக இருக்கிறது.

## ஸ்டாலினிசத்தின் பங்கு பற்றி பப்லோவாதம்

47. பப்லோவாதிகளின் சந்தர்ப்பவாதத் தத்துவங்கள், சோவியத் அதி காரத்துவத்துக்கு ஒரு புரட்சிகரப் பங்கு இருக்கின்றதென நியாயப்படுத்தும் முயற்சியில் அவற்றின் முதலாவது வெளிப்பாடுகளைக் காட்டின. பப்லோவினு லும் எர்னஸ்ட் மண்டெலினாலும் வகுக்கப்பட்ட சாசனத்தில், முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் போராட்டம், வரலாற்று வளர்ச்சிப்போக்குக்கு இனிமேல் உந்துசக்தி அல்ல என்பதாகும். பதிலாக அது மார்க்சியத்தினால் விஞ்ஞான ரீதியாக வரையறுக்கப்பட்ட வர்க்கப் போராட்டம் பப்லோவின் கருத்தின்படி, "முதலாளித்துவ ஆட்சி மற்றும் ஸ்டாலினிச உலகம்" எனப்படும் இரண்டு சக்திவாய்ந்த முகாம்களுக்கு இடையிலான மோதலினால் கடந்து சென்றுவிட்டது. இந்த புதிய "புறநிலையான் சமூக எதார்த்தத்தினுள்" நான்காம் அகிலத்தின் பதாகையின் கீழ் ஏகாதிபத்திய மற்றும் ஸ்டாலினிச ஆட்சிகள் இரண்டிற்கும் எதிராகத் தொழிலாள வர்க்கத் தை புரட்சிகரமாக அணிதிரட்டுவதற்கு இடமே இல்லை. இரண்டு முகாம் களுக்கு இடையிலான பூகோளப்போர் தவிர்க்க முடியாததெனவும், அந்த "அப் படியான போர்" அதன ஆரம்பத்திலிருந்தே ஒரு சர்வதேச உள்நாட்டுப் போரின் தன்மையைக் கொண்டிருக்கும் என்ற முடிவுக்கு பப்லோ வந்ததிலி ருந்து டிராட்ஸ்கிச இயக்கத்துக்கு, இருந்துவரும் ஸ்டாலினிச கட்சிகளினுள் செல்வாக்கு செலுத்தி அவற்றை இடது பக்கம் செல்ல வைக்கும் முயற்சியைத் தவிர வேறு எதுவும் அங்கே செய்வதற்கு இருக்கவில்லை. ஸ்டாலினிசக் கட்சி களினுள் இயங்கிவரும் டிராட்ஸ்கிஸ்டுகளின் இரண்டாம்தர உதவியுடன் புற நிலை நிபந்தனைகளின் முழுமையான சக்தி, இப்படியான கட்சிகளை இடதுபக்கம் தள்ளி ஏகாதிபத்திய ஆட்சிகளைத் தூக்கிவீச அவர்களை நிர்ப்பந்திக்கும் என் றும், இவ்வாறாக நூற்றாண்டுகளுக்கு நிலைத்திருக்கும் "ஊனமுற்றதொழிலாளர் அரசுகள்" ஸ்தாபிக்கப்படும் என்று பப்லோவாதிகள் கூறினார்கள்.

48. வரலாறு ஈவிரக்கமற்ற முறையில் இந்தப் போலியான முன்னோக் கின் மேலெழுந்த வாரியான தன்மையை அம்பலப்படுத்தியது. பப்லோ அவரது கருத்தான "புறநிலையான சமூக எதார்த்தத்திற்கு" இரட்டை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தார்—அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலா திக்க நிலை ஒரு புறமும் சோவியத் அதிகாரத்துவத்தின் ஆதிக்க நிலை மற்றொரு புறமுமாகும்—இவை மோசமடைந்து செல்லும் அமெரிக்க அயல்நாட்டு

www.padippakam.com



செலுத்து நிலையினுலும் (Balance of Payments) சோவியத் அதிகாரத்துவத்துக்கு எதிராக கிழக்கு ஐரோப்பாவில் வெடித்தெழுந்த எழுச்சிகளினுலும் விரைவாகவே முரண்பாடடைய ஆரம்பித்தன.

49 இது வெறுமனே ''போர்—புரட்சி'' தத்துவத்தின் பிரம்மாண்டமான டம்பங்கள் பற்றியதல்ல, ஆனல் மிக முக்கியமாக அதிகாரத்துவ சுயசீர்திருத்தம், ஸ்டாலினிசத்துக்கு இருக்கும் புரட்சிப்பங்கு பற்றி கோடிட்டுக் காட்டப்படும் கருத்துரு வரலாற்றினல் மதிப்பிழந்ததைக் காட்டுகிறது. ஸ்டாலினிசத்தின் இயல்பான பரிணமம் இடது பக்கமாக இருக்கவில்லை, அதாவது உலக ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சிகரப் போராட்டமாக இருக்கவில்லை. அதற்கு நேர்மாருக அது தொடர்ச்சியாக வலது பக்கம் நோக்கியே இருந்தது, அதாவது தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக உலக ஏகாதிபத்தியத்துடன் மேலும் அதிகரித்துச் செல்லும் நேரடிக் கூட்டை நோக்கியதாய் இருக்கிறது.

50. இருந்தபோதிலும் ஒவ்வொரு நெருக்கடியான கட்டத்திலும் ஸ்டாலினிசத்துக்கு எதிரான நான்காம் அகிலத்தின் உக்கிரப்படுத்தப்பட்ட சுதந்திரமான புரட்சிகரப் போராட்டத்தின் அவசியம் முன்வைக்கப்பட்டபொழுது, அதிகாரத்துவத்தின் ஆற்றெரு யுக்திகளை, சுயசீர்திருத்த நிகழ்வுப்போக்கின் புதிய மற்றும் இன்றியமையாத சம்பவம் என்ற பிரமையை பப்லோவாதிகள் வளர்த்து வந்துள்ளார்கள். மீண்டும் மீண்டும் பப்லோவாதிகள் அதிகாரத்துவத்தில் மார்க்சிசத்தின் ஒரு மரண எதிர்ப்பை அல்ல, ஆனல் பலவிதமான டிராட்ஸ்கிசப் பிரிவுகளை வளர்ச்சி செய்வதற்கான அரசியல் விளைநிலத்தையே கண்டனர். இவ்வாறு 1962 மார்ச்சில் பல்வேறு ஆளும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களினுள்ளும் அதன் கூட்டாளிகளினுள்ளும் தோன்றுகின்ற தகராறுகளை ஆராய்ந்த எர்னஸ்ட் மண்டெல், பின்வரும் வியக்கத்தக்க ஆய்வைச் செய்தார்:

51. ''சர்வதேச கம்யூனிச இயக்கத்துள் இன்று நடக்கும் விவாதம் ஒரு புரட்சிகர மார்க்சிசத்தை ஒரு உடைந்த முறையில, அதாவது சூரிய கதிர்களை எப்படி படிகம் அது கொண்டுள்ள வண்ணங்களின் நிறமாலையாகப் பிரிக்கின்றதோ அப்படி பிரதிபலிக்கின்றதென்று கூறமுடியும், விவாதத்தில் பங்கு கொள்வோரில் டிராட்ஸ்கிச நிலைப்பாடுகள் அத்தனையையும் காணக் கூடியதாக இருக்கின்றது. ஆனல் இன்றைய இந்தப் போக்குகள் எதுவும் அவற்றை முழுமையாய் ஏற்கவில்லை, ஸ்டாலினிச மரபை ரஷ்யர்கள் கலைக்கின்ருர்கள் சீனர்கள் நிரந்தரப் புரட்சி தத்துவத்திற்கு கிட்டுமானமாக வருகிருர்கள்; கியூபர்கள் தைரியமாக ஒரு தொழிலாளர் அரசு மற்றைய நாடுகளின் பாட்டாளிகளுக்கு, புரட்சியை சர்வதேச ரீதியாக விஸ்தரிக்க அறைகூவல் விட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்; யுகோஸ்லாவியர்கள் தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாள சபைகளின் கைகளில்இருக்க வேண்டும் என்று விளக்குகிருர்கள்; இத்தாலியர்கள் (அவர்களிலும்பார்க்க குறைவாக போலந்தவர்கள்) கட்சிக்குள்ளும் தொழிற்சங்கத்திற்குள்ளும் லெனினிய மரபான சுதந்திரக் கலந்துரையாடலுக்குத் திரும்புகிருர்கள்; அல்பேனியர்கள் பெரிய அளவினதாயினும் சிறிய அளவினதாயினும் எல்லாக்கம்யூனிஸ்ட் கட்சிகளினதும் சம உரிமை என்னும் கோட்பாட்டையும் எல்லா சர்ச்சைகளையும் மனம் திறந்த நேர்மையான சர்வதேச கலந்துரையாடல்கள் மூலம் தீர்த்துவைக்க வேண்டிய தேவையைப் பிரகடனப்படுத்துகின்றனர். புரட்சிகர மார்க்சிசத்தின் ஒரு அடிப்படை ரீதியான நிலைப்பாடு மட்டும் இந்தக் கட்சிகள் ஒன்றினல் கூட ஆதரிக்கப்படவில்லை. இது எமது டிராட்ஸ்கிச இயக்கத்தின்

படிப்பகம்

www.padippakam.com



ஏகபோகமாக' இருந்து வருகிறது: அதாவது சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தை வழி நடத்தவும் ஒருமுகப்படுத்தவும் ஜனநாயக மத்தியத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர சர்வதேசியத்தின் முற்றுமுழு தான் தேவையாகும்.'' உண்மையில் அது மட்டுமே!

52 1963 மறு இணைப்பின் தறுவாயில் எழுதுகையில் மண்டேல், ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் உள்ளே ஏற்பட்டுவரும் சுயசீர்திருத்தல் போக்குகள் ஒரு புதிய அனைத்துலக புரட்சிகர இயக்கத்திற்கு இட்டுச் செல்லும் எனவும் நான்காம் அகிலம் அதில் ஒரு பாகமாக இருக்கும் எனவும் நம்பினார்; இன்றைய பிளவுகள், குழப்பங்கள் ஊடாக உலக கம்யூனிச இயக்கம் தவிர்க்க முடியாதபடி தனது சொந்த விதிகளின்படி உயர்மட்டத்திற்கான ஒரு ஐக்கியத்தையும் ஒரு அமைப்பையும் நோக்கியும், எமது சகாப்தத்திற்குப் பொருத்தமான லெனினிச வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கம்யூனிஸ்ட் அகிலத்தை நோக்கியும் சென்றுகொண்டிருக்கிறது'' என்றார்.

53 பப்லோ, அவரது பழைய கூட்டாளியை விஞ்ச விடாதவாறு ஸ்டாலினிசத்துடனான பிளவின் மீண்டும் திருப்ப முடியாத தன்மையை பகட்டாகக் கூறுகையில், ஸ்டாலினுடைய மரணத்தின் பத்தாண்டுகளின் பின் குறிப்பாக சோவியத் யூனியனில் ஸ்டாலினிச ஒழிப்புப் போக்கானது மீண்டும் திருப்பமுடியாதது மட்டுமன்றி, சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதன் புரட்சிகர புதுப்பித்தலுக்கான அடிப்படைகளை ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது என்ற



ஜோசப் ஹேன்சன்



சில்வியா பிராங்ளின்

வாறான பரிமாணத்தை எடுத்திருக்கின்றது. மற்றைய தொழிலாளர் அரசுகள் என்னவாக இருந்தபோதிலும்; புரட்சிகர தலைமையை நிரூபித்துவிட்டாலும், சோவியத் யூனியனானது 'சீர்திருத்தம்' கூடிய ஒரு சிக்கலான பாதையில் செல்லவில்லை. ஆனால் அதற்கு மாறாக, அது உலகப் புரட்சிக்கு ஆதரவாக, ஒரு உறுதியான, தீர்மானகரமான, தெளிவான பங்கை நோக்கி செலுத்தப்படுகிறது.

www.padippakam.com



54. ஸ்டாலினிசத்திற்கு பப்லோவாதிகளின் அடிபணிவு, டிராட்ஸ்கிச வேலைத்திட்டத்தின் திரித்தல்களுடன் நிற்கவில்லை. அது நான்காம் அகிலத்திற்கு எதிராக கிரெம்ளின் அதிகாரத்துவத்தின் ஜி. பி. யு. (G. P. U.)—கே. ஜி. பி, (K G B) ஏஜெண்டுகளால் செய்யப்பட்ட குற்றங்களை மூடி மறைப்பதற்கும் கூட இட்டுச் சென்றது. 1950-களின் வாக்கிலிருந்து, டிராட்ஸ்கி மற்றும் அவரது மகன் லியான் செடோவ் உட்பட நான்காம் அகிலத்தின் முன்னணி உறுப்பினர்களின் படுகொலைகளுக்கு ஏற்பாடு செய்த ஸ்டாலினிச ஏஜெண்டுகள் தொடர்பான எந்தவித புலன் விசாரணைகளையும் பப்லோவாதிகள் எதிர்த்தே வந்தனர். 1955 மார்க் ஜிபோரோவ்ஸ்கியைப் பற்றிய அம்பலப்படுத்தல்களைத் தொடர்ந்து—செடோவ், நான்காம் அகிலத்தின் செயலாளர் ருடால்ப் கிளமெண்ட், மற்றும் ஜி. பி. யு, விலிருந்து வெளியேறிய அதிருப்தியாளர் இக்னேஸ்ரெயிஸ் ஆகியோரைக் கொல்வதற்கு ஸ்டாலினிஸ்டுகளால் பயன்படுத்தப்பட்ட தகவல்களைக் கொடுத்த, ஜி. பி. யு, வின் பிரதான ஏஜண்ட் ஜிபோரோவ்ஸ்கி நான்காம அகிலத்தின் பாரிஸ்மையத்தினுள்ளே இருந்தார்—ஜிபோரோவ்ஸ்கியின் கடந்த கால நடவடிக்கைகளை நான்காம் அகிலம் புலன்விசாரணை செய்வதற்கான தீர்மானத்தை எர்னஸ்ட் மண்டெல் நேரடியாகவே எதிர்த்தார்.

55. லியான்டிராட்ஸ்கியின் படுகொலை சம்பந்தமாக புலன்விசாரணை நடத்த, 1975-ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு நான்காம் அகிலமும் பாதுகாப்பும் என்பதை ஆரம்பித்தது. இக்கொலைக் குற்றத்தைத் தொடர்ந்து உடனடியாக சோசலிச தொழிலாளர் கட்சி (SWP)யின் வழக்கறிஞர் ஆல்பர்ட் கோல்ட்மெறல் முதல் முறையாக இப்படியான புலன் விசாரணை நடத்தபட்டது. அமெரிக்க அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான மற்றும் முன்னர் வகைப்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான தஸ்தாவேஜுகளில்—அவற்றுள் பல தகவல் சுதந்திரச் சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. அந்த தஸ்தாவேஜுக்கள், இந்தப் படுகொலைக்காக பெரிய அளவு ஜி. பி. யு. (G.P.U.) வலைப்பின்னல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையை பளிச்செனக் காட்டியது ஆரம்பத்திலிருந்தே இந்தப் புலன் விசாரணை பப்லோவாதிகளால் கண்டிக்கப்பட்டது. டிராட்ஸ்கிச இயக்கத்துக்கு எதிரான ஜி. பி. யு. (G. P. U.) குற்றங்கள் பற்றி, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் புதிதாக வெளிக் கொண்ரப்பட்ட ரகசியங்கள், என்றுமில்லாத அளவு வெளிப்படையான தங்களின் ஸ்டாலினிசக் கட்சிகளுடனான கூட்டிணைத் துண்டித்துவிடும் என பப்லோவாதிகள் அஞ்சினர்.

56. ஒரு சமயம் கோயோகானில் (Coyeacan) லியான் டிராட்ஸ்கிக்கு செயலாளராகப் பணிபுரிந்த; அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP) பப்லோவாதத் தலைவர் ஜோசப்ஹேன்சன், 1940 படுகொலைக்கு முன்னரே ரகசியமாக ஜி. பி. யு: (G,P U.) வை சந்தித்ததையும், "நம்பிக்கையான பயமின்றி தகவல்களை தெரிவிப்பதற்காக ஒருவரிடம்" ரகசியத் தொடர்பை ஏற்படுத்தித் தரும்படி அமெரிக்க அரசாங்கத்துடன் பின்னர் கலந்துரையாடலில் ஈடுபட்டதையும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் புலன் விசாரணை வெளிப்படுத்திய தகவல்கள் ஆவணங்களைக் காட்டியபொழுது, பப்லோவாதிகளின் எதிர்ப்பானது வெறித்தனமாக மாறத் தொடங்கியது. 1940-ல் சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP) உயிர்வாழ்ந்து கொண்டிருந்த தலைமை உறுப்பினர்களால்—

www.padippakam.com



**கொடுக்கப்பட்ட சத்திய பிரமான சான்றுகளின் அடிப்படையில்—கட்சி, அமெரிக்க அரசாங்கத்துடனான ஹேன்சனின் தொடர்புகள் பற்றி ஒன்றும் அறிந்திருக்கவில்லை என்பதை அறிந்து கொண்டது.**

57. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால், நான்காம் அகிலமும் பாதுகாப்பும் என்பதனுள் திரட்டப்பட்டிருந்த ஆதாரங்களை ஆய்வு செய்யவும், தீர்ப்பு அளிக்கவும் விசாரணைக்குழுவினை நிறுவுவதற்காக, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் அழைப்புக்கள் விடுக்கப்பட்டபொழுது, பப்லோவாதிகள் அவற்றைத் திருமபத் திரும்ப நிராகரித்தனர். பதிலாக, ''வெட்கமற்ற ஜேபடிப்பு'' என்று புலனாய்வைக் கண்டிப்பதற்காக, சர்வதேச பிரச்சாரததிற்கு அவர்கள் ஏற்பாடு செய்தனர். இந்த வகையில்''ஜோடிப்புக்கள்''என அழைக்கப்படுபவற்றின் அப்பாவிப்பலியாட்களாக அவர்கள் வக்காலத்து வாங்குபவர்களுள் ஹேன்சன் மட்டுமல்ல, கடந்த 1930 களில மற்றும் 1940 களில் ஜேம்ஸ் பி. கென்னின் தனிச் செயலாளராக இருந்த சில்வியாபிராங்ளினுமாவார், இப்பெண்மணி ஸ்டாலினிஸ்டுளால் திட்டமிடப்பட்டு கைக்கப்பட்டவர் என்று ஜி. பி. யு (G .P U.) வில் இருந்து வெளியேறிய லூயிஸ் புடன்ஸினால் 1947-ல் அம்பலப்படுத்தப்பட்டிருந்தார். புடன்ஸன வெளிப்படுத்தல்களுக்குப் பிறகு பிராங்க்ளின திடீர் தலைமறைவு ஆகியிருந்தபோதிலும்; மற்றும் அதனைத்தொடர்ந்து அமெரிக்க அரசாங்கத்துடன் இணைந்து, தனது முனைவுள் ஜி. பி, யு. கட்டுப்பாட்டு அதிகாரி ராபர்ட் ஸோப்லனுக்கு எதிராக வழக்குத் தொடுப்பது பற்றிய தயார்ப்பில் இருந்தபோதிலும், ஹேன்சனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் (SWP) அவளை ''சிறிய'' தோழர் என்று தொடர்ந்து புகழ்ந்தனர். சோசலிசத் தொழிலாளர் கட்சி (SWP)யின் தலைவர் ஜாக்பான்ஸ், பிராங்க்ளின் தன்னுடைய தனப்பட்ட நாயகராக இருந்தார் என்று பகிரங்கமாக அறிவித்தார். ஆனால் 1983-ல கட்சித் தலைமையில் உள்ள அரசாங்க ஏஜண்டுகள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்திற்குப் எதிராக, சோசலிசத் தொழிலாளர் (SWP) கட்சியின் முன்னைய உறுப்பினர் அலன்கெல்பண்டினால் (Alan Gelfand) வழக்குத் தொடுக்கப்பட்டதன் விளைவாக, 1954 மற்றும் 1958-ல் உயர் மன்ற நடுவர்களின் முன்வைக்கப்பட்ட பிராங்க்ளினின தஸ்தாவேஜுகள்—இதுவரையில் ரகசியமாக வைக்கப்பட்டிருந்த தஸ்தாவேஜுகள்-கடைசியாக வெளியிடப்பட்டன. தாம் சோசலிசத் தொழிலாளர் கட்சிக்குள் ஸ்டாலினிச உளவாளியாக செயல்பட்டிருந்ததை பிராங்க்ளின் ஏற்றுக்கொண்டார் என்பதை, கையெழுத்துப் பிரதிகளின் நகல்கள் காட்டுகின்றன. ஹேன்சனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் பிராங்க்ளினை விடாப்பிடியாக பேணியதை விளக்கும் சான்றினையும் கூட கெல்பண்ட் பெற்றுக்கொண்டார். ஹேன்சன் கூட ஜி பி யு. (G.P.U) ஏஜண்ட் என்று லூயிஸ் புடன்ஸினால் இனங்காட்டப்பட்டதானது, ஹேன்சனின் தணிப்பட்ட கடிதத் தொடர்புகளிலிருந்து தோன்றுகிறது. அனைத்துலகக் குழுவின் இந்த மறுக்க முடியாத நிருபனமான குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும் பப்லோவாதிகள் பிராங்களின் மற்றும் ஹேன்சனைத் தொடர்ந்தும் பாதுகாத்தனர். இவ்வாறாக ஏஜண்டுகளைப் பாதுகாத்தல், ஸ்டாலினிசம் மற்றும ஏகாதிபத்தியத்தின் பேரில் நான்காம் அகிலத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் சம்பந்தமாக அலட்சியமாக இருத்தல், பப்லோவாதிகளின் டிராட்ஸ்கிசக் காட்டிக் கொடுப்பின் மிகவும் கேவலமான வெளிப்பாடு மட்டுமேயாகும்.

www.padippakam.com





போலந்தின் சமீபத்திய வேலை நிறுத்தங்கள் சோவியத் யூனியனில் வரவிருப்பதன் ஒரு எதிர்பார்ப்பு

58. தங்களுடைய வேலைத்திட்ட திருத்தல்கள் மற்றும் ஸ்டாலினிச குற்றங்களை மூடி மறைத்தல் ஆகிய இரண்டினாலும் பப்லோவாதிகள். நான்காம் அகிலத்தை ஸ்டாலினிசத்திற்கெதிரான புரட்சிகரப் போராட்டங்களிலிருந்து திசை திருப்பி, அதிகாரத்துவத்தின் மேல் பிரமைகளை வளர்க்க முயற்சித்ததோடு டிராஸ்கியினுடைய ஆய்வின் உள்ளடக்கத்தைத் திரிக்கவும், அதன் புரட்சிகர முனைப்பை மழுங்கடிக்கவும் நான் அகிலத்தின் சுதந்திரமான வேலைத்திட்டத்தை அரசியல் ரீதியில் அழித்தலை நியாயப்படுத்தவும் முயன்றனர்கள். பப்லோவாதிகளின் டிராட்ஸ்கிசம் பற்றிய இந்த திரித்துப் புரட்டல்களை திரும்ப நினைவு கூறுவோமாயின்—அவ்வளவு வெளிப்படையாக வரலாற்றால் அது தவறானதென நிரூபிக்கப்பட்டிருக்கிறது—அதை நினைவு கூறுவது ஒரு புலமைவாதப் பயிற்சி அல்ல. இன்றைய காலப்பகுதியில் ஸ்டாலினிச நெருக்கடியால் முன் வைக்கப்படும் புதிய அரசியல் சாவல்களை எதிர்கொள்ள, திருத்தல் வாதத்திற்கு எதிரான போராட்டத்தின் படிப்பினைகளை உள்ளீர்த்துக் கொள்வது இன்றியமையாதது.

## சோளியத் யூனியன் இன்று

59. அதிகாரத்துவ சுயசீர்திருத்தத்தின் நீண்ட நிகழ்வுப் போக்கில் புதிய மற்றும் உச்சக்கட்டத்திற்கு அப்பால், பெரஸ்துரொய்கா மற்றும் கிளாஸ்நோஸத்—அந்த வகையான முட்டாளின் கையிலுள்ள பிததளைத் தங்கம் ஆர்வத்துடன் உலகெங்கிலும் உள்ள சந்தர்ப்பவாதிகளால் தழுவிக்கொள்ளப் படுகிறது. சர்வதேச தொழிலாள வர்க்கத்தையும் மற்றும் சோவியத் யூனிய

www.padippakam.com



னுக்குள்ளேயே அக்டோபர் புரட்சி வெற்றிகளை தாக்கும் வண்ணம், ஏகாதிபத்தியததுடனுன அதிகாரத்துவத்தின் கூட்டை பண்பியல் ரீதியாக ஆழப்படுத்துவதை இது பிரதிநிதித்துவம் செய்கிறது அதிகாரத்துவ ஜாதி, தனது ஆட்சிக்கான உறுதியான சமூக அடிததளங்களை நிர்மானிப்பதற்கான—அதாவது அதலையே ஒரு உண்மையான ஆளும் வர்க்கமாக உருமாற்றிக் கொள்ளும முயற்சிகள்—கோர்பச்சேவினுல் கடைப்பிடிககப்படும் கொள்கைகளிலும், அவை மிகவும் விடாப்பிடியானதாகவும் மற்றும் நனவாகவும் வெளிப்படுகிறது.

60. ஸ்டாலினிசம் நீண்ட காலத்துக்கு முன்பே உலகப் புரட்சி வேலைத்திட்டத்தை நிராகரித்து விட்டது. ஆனுல் தொழிலாள வர்க்கத்தை ஏமாற்றும் பொருட்டு, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டததுடன் சோவியத் யூனியனை பெயரளவில் இனங்காட்டிக் கொள்வதைப்பேணுவது அவசியம் எனக் கண்டது சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்துடன் நெருக்கமான உறவுகளைப் பெறவேண்டி, கோர்பச்சேவ் அக்டோபர் மரபுகளுடனுன இந்த பெயரளவிலான தொடர்பினையும் கூட நிராகரித்து விட்டார். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் (C P. S U.) 27 வது காங்கிரஸ், சமாதான சகவாழ்வு ஒரு ''திட்டவட்டமான வர்க்கப் போராட்டம்'' என்ற நீண்ட காலக்கோரிக்கையையும் உத்தியோகப் பூர்வமாக நிராகரித்ததோடு, யுத்தத்தின் வெடிப்பிலிருந்து எழும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான புரட்சிகர எழுச்சிகள் தொடர்பான குறிப்புக்களையும் அதனுடைய வேலைத்திட்டத்திலிருந்து நீக்கியுள்ளது. ஜூலை 1988—ல் வெளிவிவகாரக் கொள்கை நிபுணர்களிடம் மாநாட்டில், ''பகைமையுடைய இரு அமைப்புகளுக்கிடையிலான போராட்டம் இந்த தசாப்தத்தில ஒரு தீர்மானிக்கும் போக்கை இனி கொண்டிருக்காது'' என்று சோவியத் வெளிவிவகார அமைச்சர் எட்வாடு செவர்நட்சே கூறினுர். மற்றும் சுற்றுப்புறசூழல் கேடுகள், வறுமை, போரின் பிரச்சனைகள் ஆகியவை முதலாளிததுவத்திற்கெதிரான போராட்டத்துடன் சம்பந்தமில்லாததுடன், அதற்கும் மேலான முக்கியத்துவம் உடையதாகி விட்டன என்றும் அவர் வலியுறுத்தினுர்.

61. கோர்பச்சேவ் தனது ''பெரஸ்துரொய்கா'' என்ற நூலில் ''வர்க்க நலன்களுக்கு மேலாக அனைத்து மனித இனத்தினதும் பொது நலன்களுக்கு முன்னுரிமை'' என்பதில் தனது நம்பிக்கையை உலகுக்குப் பிரகடனம் செய்கிருர். இந்த சொற்ரெடர், கோர்பச்சேவின் கொள்கைகளை வழி நடத்தும் முழுமையான முதலாளித்துவ வர்க்கக் கண்ணேட்டத்தினை அம்பலமாக்குகின்றது தம்மேல் தொழிலாள வர்க்கத்தினுல்திணிக்கப்பட்டவரையறைகளில் இருந்து முழுமையாய் விடுபடுவதற்கான அதிகாரத்துவத்தின் தவிப்பினை இது காட்டுகின்றது. ''வர்க்க நலன்களை'' வெறுமனே பிரதிநிதித்துவம் செய்யும் அரச சொத்துக்களைப் பேணுவதற்கு எதிராக கோர்பச்சேவ் ''அனைத்து மனித இனத்தினதும்'' நலனின் பேரில் தனிச்சொத்துடமைக்கும் தனிப்பட்ட சொத்துத்திரட்சிக்கும் எதிரான சட்டங்களை நீக்கிவிட வாதிட்டு வருகின்ருர்.

6 . தசாப்தங்களாக, அதிகாரத்துவம் பறித்தெடுத்த அரசியல் அதிகாரம் அதன் சலுகைகளுக்கு அரணுக சேவை செய்தது; அதிகாரத்துவ அபகரிப்பாளர்கள், இன்று உண்மையான சோவியத் ஜனநாயகத்தை யதார்த்தமாக்கும் பொருட்டு அந்த அதிகாரங்களைக் கைவிட்டு, வருகின்ருர் என தாத்பரியமாக (Seriously) நம்புவதானது மார்க்சியத்தையே அடியோடு நிராகரித்து விடுவதாகும். அதிகாரத்துவ பெருக்கமும் அதன் எதேச்சாதிகாரமும்,

www.padippakam.com



1917 அக்டோபரின் பின்னர் நிலைநாட்டப்பட்ட உற்பத்திச் சாதனங்களில், சமூக சொத்துடைமைக்கும் அரசின் கட்டுப்பாட்டுக் குட்பட்ட தொழிற்துறைகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை முதலாளித்துவ முறையில் விநியோகம் செய்வதற்கும் இடையேயான குரோதத்துடன் பிணைந்துள்ளது. அதிகாரத்துவ எதேச்சாதிகாரத்தினை சமாதான வழியில் இல்லா தொழிப்பது என்பது, இந்த குரோதம் தீர்க்கப் பட்டுவிட்டதைக் குறிக்கும். அதாவது உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியானது, அத்தகைய ஒரு உச்ச கட்டத்தை அடைவதன் மூலம் சமத்துவமின்மை தாண்டப்பட்டு, முதலாளித்துவ விநியோகத்தை அமுல் செய்வதற்காக, அரச நிர்ப்பந்தத்தினைப் பயன் படுத்துவதற்கு எவ்விதமான புறநிலை அடிப்படையும் இனி இல்லை என்பதாகும் உண்மையில் அதுதான் நிலைமையாயின், ஸ்டாலின் - புககாரின் கோட்பாடான 'தனி நாட்டில் சோசலிசம்' நிரூபிக்கப்பட்டுவிட்டது என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கும்.



சோவியத் தொழிலாளர்

63. ஆனல் முதலாளித்துவ விநியோக முறையை வென்றதற்கு வெகு தூரத்துக்கு அப்பால், சோவியத்தின் சீர்திருத்தம் இன்னும் பெருமளவு சமூக சமத்துவமின்மையை வேண்டி நிற்பதாய் கோர்பச்சேவ் தலைமை வலியுறுத்துகிறது. 1917-ஆம் ஆண்டின் சோசலிச மரபிற்கு சோவியத் பாட்டாளி வர்க்கம் காட்டும் ஆழ்ந்த விசுவாசம், சமத்துவப் போக்குகளைச் சாடும் கோர்பச்சேவின் சித்தப்பிரமையான அதிகமான கண்டனங்களுக்கு ஆளாகியுள்ளது. 1988-பெப்ரவரி 18-ல் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட்

www.padippakam.com



கட்சியின் மத்திய குழுவின்முன் 'புரட்சிகர பெரஸ்துரொய்கா' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையில் கோர்பச்சேவ், ''இன்று எவரும் அரசின் 'தருமத்தில்' தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது'' என எச்சரித்தார். மற்றும் தனியார் செல்வத்தின் பெருக்கம் சம்பந்தமாக தொழிலாளர்களின் எதிர்ப்பின் மீது கோபாவேசத்தை வெளியிடும் கோர்பச்சேவ், ''மட்டப்படுத்தும் போக்குகளை ஒழித்துக்கட்டுவதான பிரச்சனைகளில் நாம் உண்மையான மனப்பூர்வத்துடன் இறங்க வேண்டும். இது பெரிதும் முக்கியமான சமூக, பொருளாதார மற்றும் தத்துவார்த்த விவகாரமாகும். அனைத்து நோக்கங்களுக்கும் இலக்குகளுக்கும் மட்டப்படுத்தும் போக்கானது, பொருளாதாரத்தின் மீது மட்டுமின்றி மக்களின் நல்லொழுக்கங்களிலும் மற்றும் அவர்களின் சிந்தனை, நடவடிக்கை பற்றிய முழு வழிமுறைகளிலும் ஒரு அழிவுகரமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது'' என்று கூறுகிறார். (சோவியத் செய்தியிலிருந்து மறு பிரசுரிப்பு 1988-மார்ச் 31)

64. ''பெரஸ்துரொய்காவின்'' சமூக பொருளாதார உள்ளடக்கத்தை ஆராயாமல், கோர்பச்சேவின் 'கிளாஸ் நோஸ்தின்' உண்மையான முக்கியத்துவத்தை தீர்க்கமாக மதிப்பிட்டுவிட முடியாது. ஹீலி போன்ற மார்க்சிசத்தின் ஓடுகாலிகள், அவர்களுக்குள் இத்தகைய ''சிறிய'' விபரங்களைப்பற்றி சட்டை செய்வதாய் இல்லை. ஆனால் கோர்பச்சேவ் ''அரசியல் புரட்சியை'' முன்னெடுத்துச் செல்வதாக ஹீலி வாதிடும் வேளை, விரும்பிய முடிவு காணத்தக்கவாறு சாதுரியமாக நிர்வகிக்கும் கோர்பச்சேவின், அதிகாரத்துவ ''ஜனநாயக மயமாக்கலின்'' பிரதான இலக்கு-தொழிலாள வர்க்கத்தின் பிரதானமான சோசலிச வெற்றிகளின் மேல் தீர்க்கமான தாக்குதலுக்காக அதிகாரத்துவத்தின அதி கூடிய சலுகை கொண்ட பிரிவினருக்குள்ளும், அறிவு ஜீவிகள் மற்றும் பெரிய அளவிலான சிறு தொழில் அதிபர்கள் ஆகியோருக்குள்ளும் ஆதரவினைத் திரட்டுவதற்கே ஆகும் என்பது தெள்ளத் தெளிவாகிறது. கோர்பச்சேவின் முக்கிய பொருளாதார ஆலோசகர்களுள் ஒருவரான டட்டியானா சாஸ்லாவ்ஸ்கயா, திட்டமிடல் அடிப்படைக் கொள்கைகள், மற்றும் தொழிலாள வர்க்கம் சம்பந்தமான தனது வெறுப்பினை மூடி மறைக்க சிறிதளவே முயறசிப்பவராவார்; அவர் சோவியத் பொருளாதாரத்தை பரவலாக்குதல் மற்றும் தேசியமயமாக்கலை ஒழித்தல் ஆகியவற்றிலிருந்து ஆதாயமடையக் கூடிய சமூக குழுக்களைக் கொண்ட நீண்ட பட்டியலை தயார் செய்துள்ளார். அப்பெண்மணி எழுதியிருப்பதாவது, ''உற்பத்தி உறவுகளில் முன்னேற்றம் காண்பதில் வெற்றிகரமான நல்ல சிந்தனைமிக்க சமூக மூலோபாயம் இருப்பது அவசியம். ஒருபுறத்தில் பொருளாதாரத்தை துரிதப்படுத்துவதில் மற்றும் நிர்வாக வழி முறைகளை மாற்றி அமைக்கவும் தொடர்பான உண்மையான அக்கறை கொண்ட குழுக்களை உள்ளீர்க்கவும், மறு புறத்தில், சிக்கலான பிரச்சினைகளில் முடிவெடுப்பதைத் தடை செய்யும் குழுக்களின் நடவடிக்கைகளை தடுக்கவும் இலாயக்கானதாக இருக்க வேண்டும்'' என்கிறார்.

65. சோவியத் விவாதங்களில் ''பொருளாதாரத் துரிதமாக்கல்'' என்ற பதத்துக்கு ஒரு திட்டமான அர்த்தம் உண்டு: அதிகரித்த கூலி வேறுபாடுகளை ஊக்குவிப்பது மற்றும் வேலையின்மையை சட்டரீதியாக்கல், கடுமையான நிர்வாக முறைகளைப் பயன்படுத்துதலின் மூலம் ''தொழில் ஒழுங்குகள்'' ஊடாகவும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதை இலக்காகக் கொண்ட நிர்வாக முறைகளையே அது அர்த்தப்படுத்துகிறது. கோர்பச்சேவின் காதாக இருக்கும் மற்றொரு முக்கியமான சோவியத் பொருளாதார நிபுணரான வசிலீசெலியுனின் எழுதியதாவது: ''(மேற்கில்) அவர்கள் வேலையின்மையைக் கொண்டிருக்

www.padippakam.com




வர்க்கப் போராட்டத்தை அதிகாரப் பூர்வமாய் கைவிட்டுவிட்ட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரஸ்

கின்றனர். சொல்லின் முழு அர்த்தம் மேலதிக மக்கள் இருககின்றனர் ஆனால் மற்றொருபுறம் வேலை செய்ய வேண்டியவர்களிடமிருந்து கடின உழைப்பு கறந்தெடுக்கப்படுகிறது நாம் வேலையின்மையை மறந்துபோயிருக்கிறோம், ஆனால் குறித்த காலத்தில் அரைப் பகுதி பலத்தில் நாம் வேலை செய்வது நல்லதா?'' சோவியத் யூனியனில் இடம் பெறும் விவாதங்களை கவனமாக ஆராய்ந்த அமெரிக்க முதலாளித்துவ அறிஞர் ஒருவர்' ''தீவிரவாத சீர்திருத்த வாதிகளில் ஒருவரான லியோனிட் அல்பாக்கின கருத்துக்கள் பரந்த அளவில் சோவியத் பிரசுரங்களில் வெளியிடப்படுவதை கவனித்து அண்மையில் கருத்துத் தெரிவித்ததாவது ''நிலப்பிரபுத்துவம் முதலாளித்துவம் ஆகிய இரண்டும் ருசியின்மையைக் கொண்டிருந்தது அல்லது கொண்டிருக்கிறது. ஆனால் இருந்த போதிலும் உழைப்பை ஒழுங்கு முறைப்படுசதுவதற்கான சக்தி வாய்ந்த செயல் நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. சோசலிசமே, இன்னும் நன்கு மனிதாபிமான மிக்க ஒழுக்க வடிவங்கள் பற்றிய பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கவில்லை'' என்கிறார். (ஹேவட், *சோவியத் பொருளாதாரத்தின் சீர் திருத்தம்*, வாஷிங்டன் 1988, பக்கம் 293-294)

66. ஹேவட்டின்படி, ''வேலையின்மைக்குப் புறத்தே, கலந்துரையாடலுக்குள்ளாகியிருக்கிற முக்கிய பிரச்சனைகள், திவால் நிலைமை, வருமானத்தில் சமத்துவமின்மை மற்றும்——மிகவும் நெருக்கமான தொடர்புடைய விஷயமான—சோசலிச நாட்டில் தனியார் பொருளாதார நடவடிக்கைகளுக்கான உரிய பங்குபற்றியதாகும். உண்மையில் கோர்பச்சேவின் கொள்கைகள், திட்டமிட்ட பொருளாதாரத்தை ஒழித்தல், அரசு தொழிற்துறையின் பெரும் பகுதியை அழித்தல் மற்றும் வெளி நாட்டு வர்த்தகத்தில் ஏகபோகத்தை

www.padippakam.com



ஒழித்தல் ஆகியவற்றுக்கான, சட்டரீதியான அடித்தளங்களை நிறுவியுள்ளது. அதே சமயம் சோவியத் யூனியனுள்ளே, உற்பத்தி சக்திகளில் தனியார் உடைமையும், பரந்த அளவில் கூலி உழைப்பை மறு நிர்மானம் செய்வதும் அதிகாரத்துவத்தால் கொண்டுவரப்படுகின்றன

67. 1988 மார்ச்சில் அறிமுகம் செய்யப்பட்ட கூட்டுறவுகள் சம்பந்தமான வரைவுச் சட்டம் முதலாளித்துவம் மீண்டும் தோன்றுவதற்கான தீர்க்கமான நிலையை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ''கூட்டுறவுகள்'' எனப்படும் பதம் தனியார் கார்ப்பரேஷன்களுக்கான ஒரு நாசூக்கான பதமாகும். மற்றும் அவற்றின் தோற்றங்கள் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் மிகத் தெளிவாக ஊக்குவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு உடமையாளரின ''சொத்து நலன்களைப்'' பேணுவதாக வரைவுச் சட்டம் மீண்டும் மீண்டும் வாக்குறுதி அளித்து ''அது மீறக் கூடாதது'' என்றும் அது அரச பாதுகாப்பில் இருக்கிறது'' என்றும் பிரகடனப்படுத்துகிறது. ''அது அரச சொத்துடன் ஒரே சமமதிப்பில் சட்டத்தினுல் பாதுகாக்கப்பட்டுள்ளது.'' ஒரு கூட்டுறவு ''சொந்த கட்டிடங்களை, அமைப்புகளை, இயந்திரங்களை, உபகரணங்களை, போக்கு வரத்து வசதிகளை உற்பத்தி மற்றும் குறிப்பு எழுதப்பட்ட, உயிருள்ள கையிருப்புகளை, பூர்த்தியான உற்பததிப் பொருட்கள், நாணய வளங்கள் மற்றும் அதன் தேவைகளை பூர்த்தி செய்யும் சொத்து போன்றவற்றை சொந்தமாக வைத்திருக்கலாம்,'' என்று வரைவுச்சட்டம் கூறுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு கூட்டுறவை அமைபபதற்கு ''அரசாங்கத்திடமிருந்தோ பொருளாதார அல்லது ஏனைய அதிகாரப்பிரிவினரிமிடருந்தோ ஒரு விசேடப் பத்திரமும் தேவையில்லை,'' என்கிறது.

68. கூட்டுறவுகள், தொழிலாளர்களை கூலிக்கு அமர்த்தும் உரிமையை, இச்சட்டம் தருகின்றது. ஏனைய முதலாளித்துவ நாட்டிலுள்ளதைப் போல, கூட்டுறவுகள் ''தொழிலாளியுடன ஒப்பந்தம் செய்யலாம், சம்பளம் பரஸ்பர உடன்பாட்டிற்கு உட்பட்டது வேலை நாள், காலம், மற்றும் வழக்கமான வேலை முறைகள், வழக்கமான மற்றும் மேலதிக ஓய்வு நாள் ஏனைய நிலைமைகள், கூட்டுறவின் உள்-மனை விதிகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.'' அரச தொழில் துறையின் பெரும் பகுதிகளை வேண்டுமென்றே திவாலடையச் செய்வதன் மூலமாக, இப்படியான சோவியத் கூட்டுறவுகளில், அவர்களது உழைப்பை விற்க நிர்ப்பந்திக்கப்படும்படியாக, ஒரு பிரமாண்டமான அளவில் வேலையில்லாத தொழிலாளர்களின் அளிப்பினை (supply) உண்டுபண்ண அதிகாரத்துவம் திட்டமிடுகிறது. இந்த சட்டம் பிரகடனப்படுத்துகிறது; ''இழப்புகள தீர்க்கமுடியாமை, தேவை (Demned) இல்லாமை போன்றவற்றால் மூடப்பட்ட சிறிய, நடுத்தர செய்பொருள் ஆலைகள், விவசாயம், கட்டிடம் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களின அடிப்படையில் அரசு ஏஜென்சிகள், கூட்டுறவுகளை அமைக்கலாம்... அவை இழந்தவர்களின் சொத்தை இயங்குகின்ற அல்லது திட்டமிடப்பட்ட கூட்டுறவுகளுக்கு மாற்றலாம்.'' அரச தொழில் துறைகளின் போஷாக்கு மிக்க பகுதிகளை, கூட்டுறவுகளாக மாற்றுவதன் மூலம் தமது தனிப்பட்ட (அல்லது அவர்களது உறவினர்களின் அதிர்ஷ்டங்களை அடையும் சந்தர்ப்பததைச் உணர்ந்து கொள்ளும் அதிகாரதுவத்தினர், இந்த சட்டத்தைச் சாதகமாக்கி, முன்பு மீளமுடியாத சொத்தாக இருந்தனவற்றின் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிப்பார்கள் என்பதை முன்கூட்டியே பார்ப்பது கடினமானதல்ல.

www.padippakam.com


69. உலக முதலாளித்துவத்துடன் கூட்டுறவுகள், தொடர்பு கொள்வவை அனுமதிக்கும் வரைவுச் சட்டம் பிரகடனப்படுத்துகிறது : ''பெரும் கூட்டுறவுகளும் சர்வதேசரீதியாக போட்டியான அவர்களது கூட்டுக்களும், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களை அவர்களாகவே நடத்துவதற்கு அனுமதிக்கப்படலாம்; கூட்டுறவுகளும் அதன் கூட்டுக்களும்' வெளிநாட்டுச் செலாவணியைப் பயன்படுத்தி, உற்பத்தி, வர்த்தகம், சமூக சௌகரியங்கள் போன்றவற்றை வளர்ச்சியடையச் செய்ய பண்டங்களையும், சேவைகளையும் இறக்குமதி செய்யலாம்'' மேலும் அது கூறுகிறது. ''கூட்டுறவுகளும் அவற்றின் கூட்டுக்களும் அவர்களுடைய வெளிநாட்டு பங்குதாரருடன் ஒன்றாக இணைந்து, கூட்டுநிறுவனங்களை சிறப்பாக்குவது பற்றியும் தேவை, விலைகள் மற்றும் ஏனைய சந்தைக்காரணிகளிலிருந்து ஆரம்பித்து உற்பத்தியின் அளவையும், வகையையும் தீர்மானிக்க வேண்டும் கூட்டு நிறுவனங்கள் இந்த நாட்டிலாவது அல்லது வேறு எங்காவது அமைக்கப்படலாம்......... சோவியத் கூட்டுறவுக்கும் அவற்றின் கூட்டுக்களும், சர்வதேச கூட்டுறவு அமைப்புகளின் நடவடிக்கைகளில் பங்கெடுக்கலாம்' இறுதியாக அந்தச் சட்டம் பின்வருமாறு கூறுகிறது, ''சோவியத்யூனியனின் பொருளாதார அமைப்பு, கூட்டுறவுகளில் பிரஜைகள், ஒன்றுபடும் அவர்களது அரசியலமைப்பு உரிமையை உறுதி செய்ய வேண்டும். உற்பத்தி சாதனங்கள் மீதான கூட்டுறவுகளின் உடமையையும் சட்டபூர்வமான சொத்துக்களை அங்கீகரிக்க வேண்டும். மற்றும் கூட்டுறவுகளை அரசு ஊக்குவிக்க வேண்டும்.''

70. சோவியத்யூனியனுக்குள் நடக்கும் மாற்றங்கள், முதலாளித்துவம் மீண்டும் கொண்டுவரப்படுவதற்கான சாத்தியமான வடிவங்கள் பற்றி விவாதிக்கையில் டிராட்ஸ்கி வலியுறுத்திய அதே காட்சிகளை மிக சக்தி வாய்ந்த முறையில் உறுதிப்படுத்துகிறது. ''எல்லாவற்றுக்கும் முதல் பலவீனமான கூட்டுப் பண்ணைகளில் பலமான விவசாயிகளின் வளர்ச்சிக்கான நிலைமைகளையும் மற்றும் பலமான கூட்டுப் பண்ணைகளை முதலாளித்துவ வகையான உற்பத்தியாளர் கூட்டுறவுகளாக—விவசாய சேகரிப்பு கம்பெனிகளாக உருவாக்குவது அவசியமானதாக வரும். தொழிற்துறையைப் பொறுத்த அளவில் தேசியமயமாக்கப்பட்ட நிலையை நீக்குவது இலேசுரக தொழிற்துறையுடனும், (Light Industry) உணவை உற்பத்தி செய்யும் தொழிற்துறையுடனும் ஆரம்பிக்கும் இடைமருவு காலத்திற்குத் திட்டமிடும் கோட்பாடானது, அரச அதிகாரத்திற்கும் தனியார் கூட்டுறவுகளுக்கும்'—சோவியத்தின் தலைமை தாங்கும் தொழிற்துறை மத்தியில், உருவாகக்கூடிய சாத்தியமுள்ள முதலாளிகளுக்கும்—இடையில் ஒரு தொடர்ச்சியான சமரசமாக மாற்றப்படும்.'' (லியான் டிராட்ஸ்கி காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி. நியூயார்க் பப்ளிகேஷன்ஸ், 1973, பக்கம். 253.

71. 'கிளாஸ் நோஸ்து' சோவியத் ஜனநாயகத்தின் ஒரு உண்மையான புதுப்பித்தலை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. இன்னும் சரியாகக் கூறப்போனால், இது பாட்டாளிவர்க்கத்தின் அரசியல், சமூக அந்தஸ்தினை மேலும் பலவீனப்படுத்துவதன் மூலம் அதிகாரத்துவத்தினுள்ளும், சோவியத் சமூகத்தினுள்ளும், முழுமையாக முதலாளித்துவப் போக்குகளைப் பலப்படுத்தும் திசையில் திருப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் ஒரு முதலாளித்துவ பாணியிலான பாராளுமன்றத்தையும், போனபாட்டிச மாதிரியிலான ஜனாதிபதியையும் கொண்ட ஒரு புதிய அரசாங்க அமைப்பினை நிறுவ எடுக்கப்பட்டுள்ள தீர்மானமாகும். 1917-அக்டோபரில் நிர்மாணிக்கப்பட்ட சோவியத் அரசிற்கும் தொழிலாள வர்க்கத்திற்கும் இடை

www.padippakam.com



யிலான வரலாற்றுத் தொடர்பினை மேலும் சீர்குலைப்பதே இந்த "சீர்திருத்தத்தின்" அடிப்படை நோக்கம் ஆகும். இந்தச் சீர்திருத்தங்கள் "பெரஸ்து ரொய்கா"வை அமல் செய்ய எந்த அளவிற்கு இன்றியமையாதது என கோர்பச்சேவ் பிரகடனப்படுத்தி இருக்கிறரோ, அந்த அளவு மறுக்க முடியாதபடி அதிகாரத்துவத்தின் சலுகை மிக்க பகுதிகளினால் பின்பற்றப்படும் நடைமுறை இலக்கு, சஸ்லவாஸ்கையா வலியுறுத்துவது போன்று, முதலாளித்துவ உறவுகளும் தனிச் சொத்துடமையும் வளர்ச்சி காண்பதற்குத தடையாக உள்ள தொழிலாள வர்க்கத்தின் குறுக்கீடுகளைத் தடுப்பதற்கேயாகும். மேலும் தமது ஏகபோக அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள அதிகாரத்துவத்தால் உருவாக்கப்பட்ட, பயங்கரவாத செயல்முறை முழுவதும் அப்படியே தொடப்படாது இருக்கிறது. கே ஜி பியின் அதிகாரங்கள் குறைந்து போகவில்லை. அத்துடன் எண்ணற்ற பல்லாயிரக் கணக்கான புரட்சியாளர்களின் கொலைக்குப் பொறுப்பானவர்கள் எவரும் இன்னமும் இனங்காணப்பட்டுத் தண்டிக்கப் படவில்லை மற்றும் நகோர்னு-கரபாக் சம்பவங்கள், தமது சொந்த நடவடிக்கைகள் மூலம் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க சோவியத் வெகு ஜனங்கள் எடுக்கும் எந்தவொரு முயற்சியும் ஈவிரக்கமற்ற முறையில் தண்டிக்கப் படும் என்பதை மீண்டும் சுட்டிக்காட்டுகின்றன

72 தனிச் சொத்துடமையை திரும்பக் கொண்டு வர சட்டரீதியான கட்டமைப்பை உண்டு பண்ணவும், உண்மையில முதலாளித்துவத்தை மறு அறிமுகம் செய்யவும் மற்றும் சோவியத் பாட்டாளி வர்க்கத்தை கூலி அடிமைகளாக மாற்றுவதற்கும் அதிகாரத்துவத்துக்கு இவை போதுமானவை அல்ல. அதனுடைய இலக்குகளை யதார்த்தமாக்குதல் நிர்வாக நடவடிக்கைகளை காட்டிலும் மேலானதை வேண்டி நிற்கிறது. அதிகாரத்துவம், சோவியத் தொழிலாள வர்க்கத்தின் ஆழமான எதிர்ப்பினை இரத்தம் தோய்ந்த எதிர்ப் புரட்சி வழிமுறைகளின் மூலம் கட்டாயமாக நசுக்கியதாக வேண்டும். கோர்பச்சேவின் கொள்கைகளுக்கு மக்களின் எதிர்ப்பு பற்றிய பரவலான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. உற்பத்திச் சாதனங்களில் தனிச் சொத்துடமையை மீண்டும் அறிமுகம் செய்வதை, சோவியத் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் எதிர்பார்க்கிருர்கள், எனபதற்கான கண் புலனாகக் கூடிய அறி குறிகள் இல்லை என்பதை முதலாளித்துவ பார்வையாளர்கள் கூட அங்கீகரிக்கும் வண்ணம் தள்ளப்பட்டிருக்கின்றனர். தனியார் வர்த்தகத்தை அங்கீகரிக்கும்-1987 மே 1-ன் சட்ட சீர்திருத்தம் சம்பந்தமாக சார்பு ரீதியில் சிறிய அளவே பொது மக்கள் அக்கறை கொண்டதை 'வெளிவிவகாரத்துறை'' (Foreign Affairs) அச்சம் நிறைந்த அதிர்ச்சியுடன் வெளியிட்டுள்ளது. மாஸ்கோ, லெனின்கிராடு —எங்குமாக சில டஜன் பேர் மட்டுமே தனியார் டாக்சிகளை ஓட்டுவதற்கான லைசென்சுகளைப் பெற்றுக் கொண்டனர். வெளி விவகாரத்துறை இதைப் பற்றி, "சோவியத் யூனியனில் இன்று அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் பால் குறைந்த தனனியல்பான இயக்கமே இருக்கிறது. (பாகம் 66, எண். 3) எனக் கவலையுடன் உறுதிப்படுத்துகிறது.

73. தனது எதிர்ப்புரட்சிகர பெரஸ்து ரொய்காவை அமல் செய்ய முயலுகைலல், ஸ்டாலினிசம ஆதாரமாய்த் தங்கியிருந்த அனைத்து பொருளாதார அடிப்படைகளும்—அதாவது தனியொரு நாட்டில் சோசலிசம் நிர்மாணிக்கபபட முடியும் என்பது அடியோடு தகர்ந்துபோய் விட்டதை, கோர்பச்சேவ் ஒப்புக்கொள்வத தொக்கி நிற்கிறது. உண்மையில சோவியத் பொருளாதாரத்தின் நிஜ நெருக்கடியானது, உலகச் சந்தையின்

வளங்களில் இருந்தும் சர்வதேச உழைப்புப்பகுப்பிலிருந்தும் வலுக்கட்டாய மாக தனிமைப்படுத்தப்பட்டதிலேயே வேரூன்றியுள்ளது. இந்த நெருக் கடியைக் கையாளுவதற்கு இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. கோர்பச் சேவினுல் பிரேரிக்கப்பட்ட வழியானது, அரச தொழிற்துறையை நிர்மூல மாக்குதல், திட்டமிடல் கொள்கைகளை நிராகரித்தல், வெளிநாட்டு வர்த்தக கத்தில் அரசின் ஏகபோகத்தைக் கைவிடல் ஆகியவற்றை உள்ளடக்கி இருக் கிறது. அதாவது சோவியத் யூனியனை உலக ஏகாதிபத்திய அமைப்பினுள் மறு இணைப்புச் செய்வதாகும்: இந்த எதிர்ப்புரட்சிகரத் தீர்வுக்கு பதிலீ டானது உலகப் பொருளாதாரத்தின் மீது ஏகாதிபத்திய ஆளுமையை அழிப்பதை வேண்டி நிற்கிறது. திட்டமிட்ட பொருளாதாரத்தினை ஐரோப்பிய, வட அமெரிக்க, ஆசிய முதலாளித்துவக் கோட்டைகளுக்கு சோவியத் மற்றும் சர்வதேச தொழிலாள வர்க்கத்தை ஒரு புரட்சிகர எதிர்த்தாக்குதலினூடாக விஸ்தரிப்பதை இலக்காகக் கொண்டிருக்கிறது.

74. இந்த பதிலீடுகளது இணக்கம் காணமுடியாத குரோதம் நிறைந்த பண்பானது, சோவியத் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று உந்துதல்களுக்கும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் முன் நோக்குகளுக்கும் இடையே ஆழமாய் வேர் விட்டுள்ள சமூக முரண்பாடுகளைப் பிரதிபலிக்கின்றது. அக்டோபர் புரட்சி யின்அடிப்படையான தேட்டங்கள் மீதான அதிகரித்துக்குவரும் தாக்குதல்கள், அதிகாரத்துவத்துக்கு எதிரானதொழிலாளர் வர்க்கத்தின்புரட்சிகரப் போராட் டத்திற்கான களத்தினை தயார்செய்கின்றது. அண்மையில் போலந்திலும்யூகோ ஸ்லாவியாவிலும் இடம்பெற்ற வேலைநிறுத்தங்கள் சோவியத்யூனியனில் வந்து கொண்டிருப்பதாக ஏதிர்பாக்கப்படும் ஒருமங்கல் வெளிச்சம்மட்டுமே. சோவியத் யூனியனில் போல்ஷேவிசத்தை அதன் இன்றைய வடிவான டிராட்ஸ்கிசத்தில் புதுப்பிப்பதற்கான புறநிலைமைகள் இன்று ஏற்பட்டுள்ளன.

75. அனைத்துலகக் குழுவானது, அதிகாரத்துவத்திற்குள் உள்ள நெருக்கடிகளால் உருவாக்கப்பட்ட சந்தர்ப்பங்களை, மற்றும் கிளாஸ் நோஸ்தினுல் வழங்கப்பட்டவை தற்காலிகமானவையாக இருப்பினும் அவை உள்ளடங்கலாக—சோவியத் பாட்டாளி வர்க்கத்தினரிடையே புரட்சிகர பணிகளை வளர்த்தெடுக்க— அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும். ஆனால் அந்தப்பணி எப்போதும ஸ்டாலினிசத்துக்கு எதிரான நீண்ட போராட்டத்தின் வரலாற்றுப் படிப்பினைகளின் அடிப்படையில் மார்க்சிச நனவினை வளர்ச்சிபெறச் செய்யும வகத்தில் வழி நடத்தப்பட வேண்டும். பழம் போல்ஷேவிக்குகளின் புனருத் தாரணமும் மற்றும் மாஸ்கோ வழக்குகளின் நிராகரிப்பும் சோவியத் அதிகாரத்துவத்துக்கு எதிரான போராட்டம் தொடர்பான நான்காம் அகிலத்தின கோட்பாட்டு ரீதியான நோக்கினையோ அல்லது கோர்பச்சேவ் பிரிவினர்பால் கொண்ட எமது மதிப்பீட்டையோ மாற்றிவிடவில்லை எந்த விதத்திலும் இப்புனருத்தாரணத்திற்கான "நற்சான்று", சோசலிசத்திற் கான ஸ்டாலினின் "பங்களிப்பை அக்டோபர் புரட்சியின் எழுபதாவது ஆண்டு விழாவில் இன்னமும் புகழ்ந்து கொண்டிருக்கும் கோர்பச்சேவுக்கு அல்லாமல், அதிகாரத்துவத்திற்குள் உள்ள நெருக்கடிகளுக்கு அடிப்படை யாக இருக்கும், திட்டமிட்ட பொருளாதாரத்தை ஓயாமல் பேணுதலையும், கம்யூனிச இலக்கினை அடைய சளைக்காத அர்ப்பணிப்பையும் கொண்டுள்ள சோவியத் தொழிலாள வர்க்கத்துக்குப் போய்ச்சேர்கிறது. அதிகாரத் துவத்தின் உள்ளேயான சகல பிரிவுகளிலிருந்து சோவியத் தொழிலாள

www.padippakam.com



வர்க்கத்தின் அரசியல் சுதந்தரத்தைக் காக்கவும், அரசியல் புரட்சியின் பதாகையை வழங்குதலும் உள்ளடங்கலாக போராடுவதே அனைத்துலகக் குழுவின் முதல் பொறுப்பாகும்.



சீனுவில் வேலையில்லாத இளைஞர்கள்—சீன ஸ்டாலினிஸ்டுகள் முதலாளித்துவத்தை வரவேற்கின்றனர்.

## சீனுவில் ஸ்டாலினிசம்

76. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினுல் ஆளப்படும் எல்லா நாடுகளிலும் தொழிலாள வர்க்கம் வென்றெடுத்த தேட்டங்களின் மிச்சசொச்சங்களின் உயிர்வாழ்வு, இப் போரராட்டத்தின் முடிவிலேயே தாங்கியுள்ளது, கிழக்கு ஐரோப்பா முழுவதிலும், சீனு, வியட்னும் மற்றும் லாவோஸிலும் அதிகாரத்துவங்கள், தங்களது தேசிய பொருளாதாரத்தை உலக முதலாளித்துவ அமைப்பினுள் ஒருங்கிணைப்பதில்,சோவியத் யூனியனைக்காட்டிலும் அதிவேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிகழ்வுப்போக்கு சீனுவில் மிகவும் முன்னேறியுள்ளது. பொதுநலப் பார்வைக்காக மாவோவின் சடலம் இன்னமும்கெடாது பேணப்பட்டிருக்கலாம், ஆனுல் அவரது பாரம்பரியத்தின் அழுகல் நாற்றமோ உச்சகட்டததை எட்டியுள்ளத. அவரின் வாரிசுகள் திட்டமிட்ட பொருளாதாரத்தில் எஞ்சியிருந்த அனைத்தையும் அழிக்கத் தொடங்கிவிட்டனர். 1949-ன் பின்னர் கூட்டுப்பண்ணைமுறைக்குள் கொண்டுவரப்பட்ட எல்லா நிலங்களும தனியார் சொத்துடைமைக்கு திருப்பப்பட்டுள்ளது, அத்துடன் ''செல்வந்தராவது மகத்துவமானது'' என்ற அரசாங்க ஊக்குவிப்பின் கீழ், நாட்டுப்புறங்களில் முதலாளிததுவ உறவுகள் செழித்து வந்து கொண்மருக்கிறது. நகர்ப்புற மையங்களில் முதலாளித்துவ நிறுவனங்கள் மீதான சகல கட்டுப்பாடுகளும் அடியோடு ல்கற்றப்பட்டுள்ளதோடு, ஒரு காலத்தில் அரசுடைமைத் தொழிற்துறை

www.padippakam.com


யாக இருந்தனவற்றின் பெரும்பாகம் வெளிநாட்டு தேசிய முதலாளிக்கு ஏலத்தில் விடப்பட்டிருக்கின்றது 1000க்கும் அதிகமான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் தனியார் தொழிற்சாலைகள் பல அங்கே உண்டு. 1988 ஜூனில் வெளியிடப்பட்ட புதிய விதிகள் முதலாளித்துவ நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கைபற்றிய சகல வரையறைகளையும் அகற்றியுள்ளது.

77. உலக ஏகாதிபத்தியத்தின் இந்த சீன ஸ்டாலினிச ஏஜெண்டுகள் சிறப்புப் பொருளாதார வலயங்களை (SEZ) ஸ்தாபித்துள்ளனர். அவர்கள் இவற்றினை, தொழிலாள வர்க்கத்தின் மீதான கட்டில்லாத சுரண்டலுக்காக வரவேற்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்தில், தாய்வான் மூலதனத்தின் வேகமாக விரிவடையும் பாத்திரம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். 1987—ல் ஹொங்கொங்கை ஒரு இடமாற்றப் புள்ளியாகக் கொண்ட, தைவானுக்கும் சீனாவுக்கும் இடையிலான மறைமுக வர்த்தகம் 58% வளர்ச்சியினால் 1.5 பில்லியன் டாலர் ஆகியுள்ளது! நாட்டின் உற்பத்தியில் ஏற்கனவே 80-க்கும் அதிகமான தைவான் நாட்டுக் கம்பெனிகள் மூதலீடு செய்துள்ளதோடு,200-க்கும் அதிகமானவை அந்தநடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

78. முதலாளித்துவத்திற்கான நல்வரவுப் பாய்விரிப்பானது மார்க்சிசத்தின் மீதான எல்லாவித முழு அளவிலான தாக்குதலுடனும் இணைந்துள்ளது. இந்த அதிகாரத்துவம் கம்யூனிஸ்டு அறிக்கை வெளியிடப்பட்ட 150—ஆவது ஆண்டு நிறைவு விழாவினை, அதன் தவறெனப்படுபவற்றை கண்டிப்பதற்கான சந்தர்ப்பமாக்கிக் கொண்டது. ''முதலாளித்துவம் வீழ்ச்சியடைந்து சோஸிசம் வந்து கொண்டிருக்கிறது என மார்க்சும் எங்கெல்சும் தீர்க்க தரிசனமாகக் குறிப்பிட்டது தவறு, ஏனெனில் இது உண்மை நிகழ்வுகள் மூலம் ஊர்ஜிதமாகவில்லை'' என்று ஒரு முன்னணி பத்திரிகை சமீபத்தில் ஆட்சேபித்தது. இன்னும் முக்கியமான மற்றுமோர் அறிக்கை, ஸ்டாலினிஸ்டுகளால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கொள்கைகளின் உண்மைத்தன்மையை அம்பலமாக்குகிறது. ஒரு முன்னணி ''தத்துவவாதி'', அரசாங்கக் கொள்கை ''உழைப்புக்கும் மூலதனத்துக்கும் ஏற்ப லாபங்கள் பங்கிடப்படுவதை அனுமதிக்கின்றன'' என விளக்கினார். அது தொழிலாள வர்ககத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தைப்பற்றி அந்த தத்துவவாதி கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கம் ''சுரண்டலை அனுமதிக்கிறது. ஆனால் சோஸிச சுரண்டலை!'' என்றார்.

79. இந்த '.சோசலிச சுரண்டலின்'' அர்த்தத்தை சீன ஸ்டாலினிச பத்திரிகையில் வெளியான ஒரு உண்மையின் மூலம் அறியலாம்: தனிப்பட்ட முதலாளித்துவ வேலை கொள்வோருக்காக (employes) வேலை செய்யும் பொருட்டு 30 லட்சம் குழந்தைகள் பாடசாலைகளில் இருந்து விலகியுள்ளனர். வேலை கொள்வோர் ''குழந்தை உழைப்பைப் பயன்படுத்தி செல்வந்தர்'' ஆவதை பத்திரிகை ஒப்புக்கொள்கிறது. குழந்தைஉழைப்பின் வளர்ச்சியானது, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஒரு உண்மையான வெளிப்பாடாகும். தொழிலாளர்கள் தமது ஊதியத்தில் துண்டு துண்டான அதிகரிப்பினை மட்டும் பெற்றிருக்கும் வேளையில், பண வீக்கம் அதிகரித்து வருகின்றது 1988—ன் முதல் காலாண்டுப் பகுதிகளின் அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்களின் விலை 24·7% ஆகவும் காய்கறிகள் விலை 48% ஆகவும் அதிகரித்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



80. பல தசாப்தங்களாக பப்லோவாதிகள் மாவோயிசத்தை டிராட்ஸ்கிசத்துக்கான ஒரு பதிலீடு எனப்புகழ்ந்தனர் 1952—க்குமுன்பே பப்லோ, மக்கள் குடியரசு நிறுவப்பட்டதன் பின்பு மாவோயிஸ்டுகளால் சிறையில் தள்ளப்பட்டிருந்த சீன டிராட்ஸ்கியிஸ்டுகளின் மேல்முறையீடுகளை பிரசுரிக்கவும் மறுத்து விட்டார். ஸ்டாலினிசம், முதலாளித்துவ தேசியவாதம, விவசாய தீவிரவாதம் ஆகியவற்றில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட மாவோவின் கலவைக்கு எதிராக, உண்மையான ஒரு பாட்டாளி வர்க்க நிலைபபாட்டைப் பாதுகாக்கும் சீன டிராட்ஸ்கிஸ்டுகளின் எதிர்ப்புப் போக்கினால், பப்லோவாதிகள் ஆத்திரமுற்று, அந்த உறுதியான மார்க்சிஸ்டுகளை ''புரட்சியின் அகதிகள்'' எனப் பகிரங்கமாகக் கணடித்தனர். 1954-ல் இலங்கை பப்லோவாதிகள்சீன வெளிநாட்டு அமைச்சர் சூ-என்-லாயை சந்தித்த பொழுது. இந்த சிறை வைக்கப்பட்டிருந்த டிராட்ஸ்கிஸ்டுகளைப பற்றிய பிரச்சினையை எழுப்ப மீண்டும் மறுத்தனர். மாவோயிசததுக்கு அடிபணிந்த பப்லோவாதிகளின் வரலாற்றுத் தாக்கங்கள் இன்று ' மாபெரும் மாலுமியின்'' கொள்கையினல் முழுமனே அமபலமாகியுள்ளது. முதலாளித்துவத்தை மீணடும் வெறியுடன் அறிமுகம் செய்து வைக்கும சீன ஸ்டாலினிஸ்டுகளின் கொள்கைகள், நாட்டினைப் பொருளாதார அழிவினுள் தள்ளி வருவதோடு, தவிர்க்க முடியாத வகையில பட்டாளி வரக்கத்தின் பிரயமாணடமான எழுச்சிக்கு கட்டாயம் இட்டுச்செல்லும். அடுத்த புரட்சிகர எழுச்சியின்போது, நாட்டில் அதிகாரத்துவத்தை ஒழித்துக்கட்டவும், ஸ்டாலினிசத்தால் முகாமிடப்பட்ட முதலாளித்துவ வர்க்கத்தை வெற்றி கொள்ளவுமான பிரம்மாணடமான போராட்டத்தில, ஏழை விவசாயிகளின் தலைமையை வகிப்பது சீனத்தொழிலாள வர்க்கமாகவே இருக்கும்

## நிரந்தரப் புரட்சித் தத்துவம் ஊர்ஜிதம்

81. ஸ்டாலினிசத்திற்கும், மாவோயிசத்திறகுமான பப்லோவாதிகளின் அடிபணிதலுடன் பின தங்கிய நாடுகளில தேசிய முதலாளித்துவ வர்க்கங்களுடன் அவர்கள் ஒத்துப்போவது ஒன்று சேர்ந்தது. அக்டோபர் புரட்சி, சீனப்புரட்சி (1925—1927) மற்றும் ஸ்பானியப் புரட்சியின் அத்தியாவசியமான வரலாற்றுப படிப்பினைகளுககு புற முதுகு காட்டுவதன் மூலம் பப்லோவாதிகள் அல்ஜீரியாவின் பென்பெல்லா மற்றும் அர்ஜெண்டினாவின பெரோன் முதல பர்மாவின் நெவின வரையிலான ஒவ்வொரு முதலாளித்துவ தேசிய தலைவர்களுக்கும் கூட கைதட்டும தலைவர்களாயினர். தேசிய முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து தொழிலாள வர்க்கத்தின் அரசியல் தந்திரத்திறகாகப் போராடுவதன அவசியத்தை நிராகரித்தனர். பதிலாக நிரநதரப்புரட்சி தத்துவததினைப் பொய்மைப்படுத்தினர். பாட்டாளி வர்ககத்தின் சர்வாதிகாரததுக்கான போராட்டத்துககு வழிகாட்டும் ஒரு நனவாக மூலோபாயம் என்ற நிலையில் இருந்து, இத்தத்துவத்தினை பாட்டாளி வர்க்கம் அல்லாத சக்திகளுக்கு தமது சொந்த அடிபணிவினை நியாயப்படுத்தும் நிலைக்கு உருமாற்றினர். தொழிலாள வர்க்கத்தை சுதந்திரமாக அணி திரடடுவதன்மூலம நிரந்தரப் புரட்சித் திட்டத்தின் மூலோபாயத்திற்காகப் போராடுவதைக் காட்டிலும், பப்லோவாதிகள் அது நனவற்ற முறையிலாயினும் கேஸ்ட்ரோ, பென்பெல்லா, பெரன் போன்ற முதலாளித்துவ தேசிய வாதிகளினல் அடையப் பட்டுள்ளதாக மிக திருப்தியுடன் பிரகடனம் செய்தனர். மேலும்

www.padippakam.com



கேஸ்ட்ரா, பென்பெல்லா போன்ற ''நனவற்ற மார்க்சிஸ்டுகள்,' ''தொழிலாளர் அரசுகளை'' ஸ்தாபிப்பதில் வெற்றி கண்டுள்ளதாகக் கருதப்படுவதால், பாட்டாளி வர்க்கம் ஆட்சிக்கு வர தனது சொந்த புரட்சிக் கட்சியைக் கொண்டிருக்க வேண்டியதில்லை என பிரகடனம் செய்தனர், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சம்பந்தமாக மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், மற்றும் டிராட்ஸ்கி எழுதிய அனைத்தையும்— சிறப்பாக ஆட்சியின் புதிய வடிவமாக தொழிலாள வர்க்கத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட சோவியத்துக்களின் உலக முக்கியத்துவத்தை— புறக்கணித்து விட்டு பப்லோவாதிகள், ஒரு தொழிலாளர் அரசு உருவாகி விட்டதா இல்லையா என்பதை தீர்மானம் செய்வதற்கு தொழிலாளர் ஆட்சியின சுதந்திரமான வடிவங்களின் தோற்றம் ஒரு அத்தியாவசியமான அளவீடு ஆகாது என வாதிட்டனர்.

82. 1963—ஆம் ஆண்டின் மறு இணைப்பிற்கான மாநாடு, பின் தங்கிய நாடுகளில் நான்காம் அகிலத்தின் பகுதிகளைக் கட்டி எழுப்பும் வரலாற்றுத் தேவையை நிராகரிக்கும் வேலைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அந்தக் காங்கிரசில் பப்லோவாதிகளால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பிரகடனம் செய்வதாவது: ''மூலாதாரம் வரை அழுகிப்போய், பரந்த மக்களின் ஆதரவினை இழந்துபோயுள்ள ஆளும் வர்க்கங்களால் எதிர்கொள்கையில் புரட்சியானது ஏழை விவசாயிகள், திவாலாகி விட்ட குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் உட்பட பரந்த உழைக்கும் மக்கள் தொகையைப் போராட்டத்தினுள் ஈர்க்கின்றது. இதன் மூலம் பாரம்பரிய ஒழுங்கையும், அதன் அரசினையும் சீர்குலைவுக்குக் கொண்டு வருகிறது. அத்தகைய அழுத்தங்களை இடைநிலைவாத தொழிலாள வர்க்கக்கட்சிகள் மற்றும் அந்த போன்ற அமைப்புக்கள் மீது செலுத்துவதன் மூலம் அவற்றை ஆட்சிக்குக் கொணரச் செய்கிறது... பின் தங்கிய நாடுகளில் எதிரியின் பலவீனங்கள் மொட்டை ஆயுதத்துடனும் கூட ஆட்சிக்கு வருவதற்கான சாத்தியக்கூறைத் திறந்து விட்டிருக்கிறது,''

83. புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்பும் போராட்டத்தினை கைவிடுவதானது, சாராம்சத்தில் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர பாத்திரத்தினையே நிராகரிப்பதாகும். இவ்வாறாக பாட்டாளி வர்க்கத்திற்கு மாற்றுக்களை தேடலானது, மறுஇணைப்புத் தீர்மானத்தில் வெளிப்பட்டது; ''இந்நாடுகளின் தனித்துவமான சமூக பொருளாதார நோக்கில் பாட்டாளி வர்க்கத்தின் பிரதான பலம் தொழில்துறை நிறுவனங்களின் தொழிலாளர்களிடையே இருக்கவில்லை இவர்கள் அர்ஜெணடினாவைத் தவிர இந்நாடுகளின் சுறுசுறுப்பான மக்கள் தொகையில் ஒரு இம்மி அளவு பிரிவினரையும் கூலி பெறுபவர்களில் சிறுபகுதியினரையும மட்டுமே கொண்டுள்ளனர்... சுரங்கத்தொழிலாளர் பெருந்தோட்ட விவசாயத் தொழிலாளர் மற்றும் பேரளவில் வேலையற்றோர் மீது கவனம செலுத்தப்படவேண்டும்... கெரில்லாப்படைகளை விரிவுபடுத்தும் வகையில் விவசாயிகள் சந்தேகத்திற்கிடமில்லாமல், மார்க்சிச கோட்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டதைவிட, மிகவும் மேலான தீவிரமான மற்றும தீர்க்கமான பாத்திரத்தினை காலனித்துவப் புரட்சியில் ஆற்றியுள்ளனர்.''

www.padippakam.com



84. கொரில்லா வாதத்தினைப் புகழ்வது பொலிவிய பப்லோவாத மொரஸ்கோசாவினால் உச்சரிக்கப்பட்டதாவது: ''கியூபானியர்களால முன் வைக்கப்பட்ட கெரில்லா முறையானது, ஒவ்வொரு நாட்டினதும் சிறப்புத் தன்மைக்கு ஏற்றவாறு வடிவத்தில் வேறுபட வேண்டியிருப்பினும், சகல பின்தங்கிய நாடுகளிலும பிரயோகிக்கத்தக்கதாகும். தீர்வுகாணப்படாத நிலப்பிரச்சினைகளைக் கொண்ட பரந்த அளவிலான விவசாயிகளைக் கொண்ட அந்நாடுகளில், கெரில்லாக்கள் விவசாயிகளிடமிருந்து தமது பலத்தினைப் பெறுவர்; கெரில்லாப போராட்டம் இம்மக்களைக் கியூபாவில் சியராமேஸ்ட்ராவிலிருந்து தொடங்கியது போல ஆயுதமும் கையுமாக தமது விவசாயப் பிரச்சினையைந் தீர்க்க நடவடிக்கையில் ஈடுபடுத்தும். ஆனால் மற்ற நாடுகளில பட்டாளி வர்க்கமும நகர்ப்புற தீவிரவாத குட்டி மூதலாளித்துவ வர்க்கமும் கெரில்லா படைகளுக்கு ஆட்களை வழங்கும்'' (எர்னஸ்ட் மெண்டெல், ஆசிரியர், உலகப்புரட்சியின ஐம்ப தாண்டுகள் (நியூயார்க்: பாதபைன்டர் அச்சகம், 1970) பக்கம் 194-195) அன்று சிலி தொழிலாளர்களின எதிர்காலத் தோல்விக்கான தயாரிப்பு செய்து கொண்டிருந்த மொரஸ்கோசாவின் சகாவான விட்டெல் கெரில்லா யுத்ததன் அளவு கடந்த முக்கியத்துவத்தைத் தம்பட்டமடித்து, 'இந்தப் புதிய ஆயுதக்கிளர்ச்சி மூலோபாயத்தை தொடக்கி வைத்த பெருமை மாவோ சேதுங்குக்கும் சீனக்கம் யூனிஸ்ட் கட்சிக்குமே உரியது என்பதில் கேள்விக்கே இடமில்லை.'' (அதே நூல் பக்கம 46) எனக்கூறினார்.

85 பப்லோவாதிகளின் அரசியல்குற்றங்களின் பரிமாண த்தினை முழுமனை புரிந்து கொள்ள கெரில்லா மூலோபாயத்தின் பலாபலனகள் பற்றிய ஒரு இருப்பு நிலைக்குறிப்பை (Balance Sheet) வரைய வேண்டியிருக்கும். சிலி, உருகுவே, பொலிவியா, அர்ஜெண்டினா முதலான நாடுகளில் கெரில்லா வாதத்தினை புகழ்ந்து பாராட்டுவதன் மூலம் பப்லோவாதிகள் பாட்டாளி வர்க்கத்திலருந்து புரட்சிகர சக்திகளை தனிமைப்படுத்தினர்; தொழிலாள வர்க்கத்துள் புரட்சிக்கட்சியின் அபிவிருத்தியைத் தடை செய்தனர்; பெரும் தோல்விகளுக்கு பங்களிப்பு செய்தனர்.

86. நிரந்தரப்புரட்சிக் கோட்பாட்டினைக் காட்டிக் கொடுத்த இப்பயணத்தல், பப்லோவாதிகள் அனைத்துலகப் பட்டாளி வர்க்க நிலைப் பாட்டினை முழுமனை கைவிட்டதுடன், ஏகாதிபத்தியம் முதலாளித் துவத்திறகெதிரான தொழிலாள வர்க்கததின் போராட்டத்தின் வேர்களினின்று, சோசலிசததின் வரலாற்று முன்னோக்கினைத் தனிமைப் படுத்தினர். பப்லோவாதிகள் தமது சந்தர்ப்பவாதப் போக்கினை அமுல் செய்யும் பொருட்டு ஸ்டாலினிஸ்டுகளின் பழைய, செல்வாக்கிழந்த ''இரண்டு கட்ட'' கோட்பாட்டுக்கு புத்துயிருட்டினர். பல தசாபதங் களாக கிரெம்ளின் அதிகாரத்துவம் இக்கோட்பாட்டின்மூலமே சோசலிசப் புரட்சிக்கான முன் முயற்சி ஜனநாயகப் புரட்சி நிறைவேற்றப்படும் வரை தாமதப்படுத்தபபட வேண்டும் எனக்கூறி பாட்டாளி வர்க்கத் தினை பலவேறு முதலாளித்துவ தேசிய தலைவர்களுக்குக் கீழ்ப்படுத்தினர்

87 தேசிய முதலாளித்துவத்திற்கு தமது அடிபணிவினை நியாயப் படுத்திக் கொண்டிருந்த அதே வேளையில், பப்லோவாதிகள் தமது மறு இணைப்பிற்கான காங்கிரசில், பின்தங்கிய நாடுகளில் புரட்சித்தலைமைக் கான நெருக்கடி உண்மையில் நிலவவில்லை அல்லது குறைந்த பட்சம்

www.padippakam.com



அற்ப அளவில் தானும் இல்லையெனவும் குறிப்பிட்டனர். "காலனித்துவ அரைக்காலனித்துவ நாடுகளில் முதலாளித்துவத்திற்குரிய பலவீனமானது ஏகாதிபத்தியத்தினால் உருவாக்கப்பட்ட பிரத்தியேகமான சமூக—பொருளாதார முழு அடிப்படையும் ஆகும். ஒரு தீவிரமான விவசாயப் புரட்சி இல்லாமையால் சனத்தொகையில் பெரும்பகுதியினரின் நீடித்த அவலங்களும், தொழில் மயமாக்கல் சார்புரீதியில் துரிதமாக முன்னேறிய போதிலும் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும், ஒரு புரட்சிகர அலை இல்லாமல் தன்னியக்கமாகவே சார்புரீதியான அல்லது தற்காலிகமான அளவில்கூட சமூக அல்லது பொருளாதார உறுதிப்பாட்டுக்கான நிலைமையை உருவாக்கி விடாது. பொலிவியா 10 ஆண்டுகளாகப் பெற்றிருக்கின்ற அனுபவங்களைப் போன்று, ஒரு ஓய்ந்து போகாத வெற்றியளிப்பதாகக் காணப்படுகின்ற பரந்துபட்ட மக்கள் போராட்டம் தொடர்கின்றது" கடந்த கால்நூற்றாண்டின் துன்பகரமான அனுபவங்கள்—இந்தோனேஷியா, சிலி, பொலிவியா, அர்ஜெண்டினா, சூடான்—தோல்விகள் (பெயர் குறிப்பிட சிலமட்டுமே) இவையும் இந்த சந்தர்ப்பவாத உதாசீனத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன!

88. பல ஆண்டுகளாக பப்லோவாதிகள் தமது கொள்கை நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது எனகூறி வந்தனர் ஆனால் 1982-ல் பப்லோவாதத்தின் பிடிவாதமான தாக்கத்தினைத் தொடர்ந்து சோசலசத் தொழிலாளர் கட்சி டிராட்ஸ்கியைக் கண்டனம் செய்தது. சோலிசத் தொழிலாளர் கட்சி தனது சகோதரக் கட்சிகளாக வரவேற்றுக் கொண்டுள்ள கிரனெடா "நியூஜூவ்வமூவ்மெண்ட்" (New Jewel Mcvement). நிகரகுவா சாண்டினிஸ்டா போன்ற குட்டி முதலாளத்துவ இயக்கங்களைக் கொண்ட ஒரு புதிய "பரந்த லெனினிச அகிலத்தின்" அபிவிருத்திக்கு நிரந்தரப்புரட்சி கோட்பாடு ஒரு தடையாக இருப்பதாக பிரகடனம் செய்தது. நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டைக் கைவிட்டதோடு சோசலிச தொழிலாளர் கட்சியானது, 1917—ல் போல்ஷெவிக்குகளால் கைவிடபட்டு, 1920—களில் சியாங் கேஷேக்குடனான தனது நாசகரமான கூட்டினை நியாயப்படுத்தும் பொருட்டு, ஸ்டாலினால் புத்துயிரூட்டப்பட்ட "தொழிலாளர் விவசாயிகளது ஜனநாயகச் சர்வாதிகாரம்" என்ற பழம் கருத்துருவினை புனருத்தாரணம் செய்துள்ளனர். டிராட்ஸ்கிசம் மீதான இந்த தாக்குதலின் அர்த்தமானது, தென் ஆப்பிரிக்க பட்டாளி வர்க்கம் முதலாளித்துவ ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் அரசியல் ஆளுமைக்கு நிபந்தனை இன்றி அடிபணிய வேண்டுமென சோலிசத் தொழிலாளர் கட்சி தீவிரமாக வற்புறுத்தியதன் மூலம் நன்கு துல்லியமாகத் தெளிவாகியுள்ளது.

89. தேசிய முதலாளித்துவ வர்க்கத்திடம் பப்லோவாதிகளின் இழிவான அடிபணிவு—சாராம்சத்தில் இரண்டாம் உலகப்போருக்குப் பின் பாட்டாளி வர்க்கப்புரட்சியின் அச்சுறுத்தலைத் திசை திருப்பும் பொருட்டு, ஏகாதிபத்தியம் அந்த சக்திகளின் பால் ஒத்துப்போகும் நிலைக்குத திரும்பியதையே பிரதிநிதித்துவம் செய்கிறது. இரண்டாம் உலகப்போரினைத் தொடர்ந்து ஆசியா, மத்தியகிழக்கு, ஆப்பிரிக்கா முழுமையாகவும் உள்ள அரசுகளுக்கு ஏகாதிபததியத்தினால் போலிச் சுதந்திரம வழங்கப்பட்டது. ஆனால் 40 ஆண்டுகளின் பின்னரும் இந்தப் "புதிய சுதந்திர அரசுகளில்" அடிப்படை ஜனநாயகப் பணிகள்

www.padippakam.com



எதுவுமே வெற்றிகரமாக அமுல் செய்யப்படவில்லை. ஸ்டாலினிசத்தின் சீரழிவுடன் சேர்ந்து, பின்தங்கிய நாடுகளில் மக்களின் அடிப்படைத் தேவைகளைத் திருப்தி செய்ய முடியாத முதலாளித்துவ தேசிய வாதத்தின் தோல்வி, சோசலிசத்தை அடைவது என்பது தனியாக ஒருபுறமிக்க, சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் உள்ளே மார்க்சிசத்தின் அபிவிருத்தியைத் தடைசெய்ய குட்டி முதலாளித்து தத்துவவாதிகளால், சிறப்பாக பப்லோவாதிகளால் முன்வைக்கப்பட்ட எல்லா மூலிகைகளுக்கும் மேலாக டிராட்ஸ்கிசத்தின் பூரண தத்துவார்த்த வெற்றியைப் பறைசாற்றுகின்றது.

90. 1947-ல் இந்தியா துண்டாடப்பட்டது, தேசிய முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துடன் கூட்டமைத்து ஜனநாயக தேசியபோராட்டத்தைக் கருச்சிதைத்ததுடன் அடையாளமாயிற்று. இந்தப் பாணி அதனையே மீண்டும் மீண்டும் இடம்பெறச் செய்தது ஆயுதப் போராட்டத்தின் தலையீட்டில் நேரடி காலனித்துவ ஆட்சி முடிவுற்ற அங்கெல்லாம், தேசிய முதலாளித்துவத்தினால் காலனித்துவத்தின் கசப்பான மரபுகளையும் பொருளாதார பிணைவுகளையும் இல்லாமற் செய்ய முடியவில்லை, குறைந்த ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரக் குரல்வளை விடுபட முடியாத வகையில் நெரிக்கப்பட்டுக்கொண்டிருப்பதானது, குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் என்றழைக்கப்படும் நாடுகளின் தப்பவியலாத கடன்பளுவில் இருப்பதில் காண முடிகிறது. பின்தங்கிய நாடுகளின் மக்கள் தொகையின் பல்வேறு தேசிய இனங்களுக்கிடையில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு மாறாக, இன, மொழி, மற்றும் மதரீதியான குரோதங்கள் திட்டமிட்டு வேண்டுமெனறே தூண்டிவிடப்படுகின்றன. சுயநிர்ணய உரிமை மறுப்பின் வெளிப்பாடே இனவாதம், படுகொலைக்கான ஏற்பாடுகள் மற்றும் அரச ஒடுக்கு முறைகளாகும்.

91 பப்லோவாதிகள் சுயாதீனமான பாட்டாளி வர்க்கப் புரட்சித் தலைமையின் அபிவிருத்தியை இடைவிடாது எதிர்த்து வந்த வேளையில், தேசிய முதலாளித்துவம் தமது சொந்த நலன்களை பலப்படுத்திக்கொள்ள, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் பரந்த மக்களின் தியாகங்களை சுரண்டிக் கொண்டது. இதுவே அல்ஜீரியா, பங்களாதேஷ், சிம்பாப்வே, மொசாம்பிக் போராட்டங்களில் வெளிப்பட்டது என்பதை எடுத்துக் கூறுவதற்கான சில உதாரணங்கள் மட்டுமே ஆகும் ஈரானில் முதலாளித்துவ வர்க்கம், ஈராக்குடன் சகோதரர்களைக் கொல்லும் மரணயுத்தத்திற்கு புரட்சியில் இட்டுச்சென்றமை, பாரசீக வளைகுடாவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கரத்தை வலுப்படுத்தியது.

92. மிக அண்மைக்காலத்தில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு உறுதியான போராட்டத்தினை நடத்தும் தேசிய முதலாளித்துவத்தின் இயலபான இயலாமையானது, பி. எல். ஓ, தமிழ் புலிகள் மற்றும் நிகராகுவாவின சாண்டினிஸ்டாக்களால் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டப்பட்டது. பாலஸ்தீனிய சுயநிர்ணயத்திற்கு எதிரான மிகக் கசப்பான எதிரியான, பிற்போக்கு அரசு முதலாளித்துவ வர்க்கத்தின் முற்றுகையை முடிச்சுப்போட்டுக் கொண்டுள்ள பி. எல் ஓ ஆனது, காசா மற்றும் மேற்குக்கரையில் உள்ள இளைஞர்கள், தொழிலாளர்களது இயக்கத்தை பாலஸ்தீன முதலாளித்துவம் ஏற்றுக் கொள்ளும்

www.padippakam.com



வரம்புகளுக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்க முயன்றது. அரபாத்தின் கொள்கைகள் தேசிய இயக்கத்தினை மத்திய கிழக்கின் பாட்டாளி வர்க்கத்திடமிருந்து திட்டமிட்டு தனிமைப்படுத்தி வைக்கிறது.

93 சிறிலங்காவில் தமிழ்குட்டி முதலாளித்து வர்க்கத்தின் மிகவும் தீவிரப்பிரிவினராக பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் புலிகள். சுயநிர்ணய உரிமைக்கான ஒரு உறுதியான போராட்டத்தினை கொண்டு நடத்த தகுதியற்றதாக உள்ளனர். புலிகளின அரசியல், இந்திய முதலாளித்துவத்தின் மீதான அவர்களுடைய ஆபத்து நிறைந்த பிரமைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை அவர்கள் அங்கீகரிகததன் மூலம உச்சக்கட்டத்தை அடைந்ததோடு தமிழ [illegible] இந்திய இராணுவத்தால் வேட்டையாடப்படும் இன்றைய நிலையிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்கள் ராஜீவ்காந்தி மீதான நம்பிக்கையை இன்னும் பிரகடனப்படுத்துவதுடன், இந்தியப் பாட்டாளி வர்க்கத்திற்கு புறமுதுகுகாட்டி வருகின்றனர். எல் டி. டி. இன் குட்டிமுதலாளித்துவத்தனமான பிரமைகளைவுகள், இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் மூலோபாய நலன்களைப் பேணுவதில் அவர்களை மிகத்தெளிவாய் படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடானது. அதன் மத்தியகுழு உறுப்பினரான திலகரால் கொடுக்கப்பட்ட பேச்சினில் சுருக்கமாக கூறப்பட்டது. அவர் பிரகடனப்படுத்தியதாவது: ''எமது விடுதலை இயக்கம இந்தியாவின் நலன்களுக்கு எதிரானது அல்ல. தெற்காசியாவின் பிராந்திய வல்லரசு என்றமுறையில் அதன் அந்தஸ்தினை நிலைநாட்டும இந்தியாவின் மூலோபாய அபிலாசைகளுக்கு நாம் எவ்விதத்திலும் எதிரானவர்கள அல்லர். நாம எப்போதும இந்தியாவின் நேசசக்தியாக இயங்கி வந்துள்ளோம். அவ்வாறே தொடர்ந்தும் இயங்குவோம். உடன்படிக்கை இந்தியாவின் புவிஇயல்—அரசியல் நலன்களை ஈட்டிக் கொள்வதில் இலக்காகக் கொண்ட இந்திய—இலங்கை உறவுகளின் வரையறைக்குள் நின்று கொண்டிருப்பின், நாம் எமது நிபந்தனையற்ற ஆதரவை இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்கு வழங்குவோம்.''

94 இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் புவியியல் — அரசியல் நலன்களுக்கு தமிழ்புலிகள் சாஸ்டாங்கமாக வீழ்ந்து கும்பிடுபோடும்பணி ஏரியஸ் நட்டம் நிகராகுவா சாண்டிஸ்டாக்களால் அங்கீகரிக்கப்படுவதில் எதிரொலித்தது. அது மத்திய அமெரிக்காவில் ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின ஊர்ஜிதம் செய்யும அரசவடிவங்களின் மீறத்தகாத தன்மையை ஏற்கின்றது சாண்டினிஸ்டாக்களின் வரலாறும் பரிணாமும் முதலாளித்துவ தேசியவாதத்துக்கு பப்லோவாத அடிபணிவினை அடித்து நிரூபித்துள்ளது. ஆட்சிக்கு வநத ஒரு தசாப்தததின் பின்னர், சாண்டினிஸ்டாக்கள் ஜனநாயகப் புரட்சியின் எந்தவிதமான அடிப்படைப் பணிகளையும் செய்ய தவறிவிட்டனர் நிலச்சீர்திருத்தம் சம்பந்தமான விரிவான வேலைத்திட்டம எதுவுமே கிடையாது நாட்டின் பொருளாதாரத்தின் பெரும்பங்கு இன்னமும் தனியார் உடைமையாக இருக்கையில் சோவிசத் தொழிலாளர் கட்சி (Swp) நிகராகுவா ஒரு தொழிலாளர் அரசு என பிரகடனம் செய்கின்றது. இந்த உடன்படிக்கை கைச்சாற்றிடப்பட்டதன பின்னர். சாண்டினிஸ்டாக்கள் தொழிலாளர் வர்க்க வேலை நிறுத்தங்களை நசுக்கையில், மானாகுவாவில் காண்ட்ராகலகக்காரர்களை சமாதான பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். உண்மையில் கண்ட்ரா தலைவர்களுடன்

www.padippakam.com



—இவர்களில் பலர் ஒருகாலத்தில் சாண்டினிஸ்டா முன்னணியில் இருந்தவர்கள் — உறவுகள் புதுப்பிக்கப்பட்டதானது தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் தீவிரவாத குட்டி முதலாளித்துவ ஜனநாயகப் பிரிவினர் கூட தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான இயக்கத்தினை எதிர்கொள்ளும் தருணத்தில் மிகவும் பிற்போக்கான முதலாளித்துவ வர்க்கப் பிரிவினருடன் கூட்டுச்சேர தயாராய் உள்ளமையை அம்பலப்படுத்துகின்றது.

95. அமெரிக்காவில் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட வொர்க்கர்ஸ்லீக் — அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆத்திரமூட்டலுக்கு எதிராக நிகராகுவாவை சமரசத்திற்கு இட்டுக்கொண்டு செல்கையில் வேண்டிவந்துள்ளது. உலக ஏகாதிபத்தியத்தின் மையத்தில் தனது தினசரி வேலைகளை நடத்துகின்ற ஒருகட்சி என்ற முறையில் அனைத்து ஒடுக்கப்படும் தேசங்களதும், சிறப்பாக யாங்கி ஏகாதிபத்தியத்துடன் நேரடியான கடும் மோதலுக்கு ஆளாகியுள்ள லத்தீன் அமெரிக்கா, கரீபியன் நாடுகளின் நலன்களைக்காக்கும் ஒரு விசேட பொறுப்பு வொர்க்கர்ஸ்லீக்கின் தோளில் விழுகின்றது. மேலும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுடனான பாட்டாளிவர்க்க ஐக்கியத்திற்கான போராட்டம் அமெரிக்கத்தொழிலாள வர்க்கத்தினுள்ளே புரட்சிகர வர்க்க நனவினை வளர்த்தெடுப்பதற்கான ஒரு தீர்க்கமான அங்கமாக விளங்குகிறது — அமெரிக்கத் தொழிலாள வர்க்கம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெற்றிகரமான ஒவ்வொரு ஏகாதிபத்திய காட்டுமிராண்டித்தனத்தையும் வெறுத்தொதுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இருந்தபோதும் ஏகாதிபத்திய அடிமைத்தனைக்கு முற்றுப்புள்ளிவைக்கும் ஒடுக்கப்பட்ட நாடுகளை நிபந்தனையின்றி பேணுகையில் வொர்க்கர்ஸ்லீக்கோ அல்லது அனைத்துலகக்குழுவின் எந்த ஒருபகுதியோ அவற்றின் முதலாளித்துவத் தலைவர்களின் வேலைத்திட்டத்தினை அங்கீகரிக்கக் கடமைப்பட்டவை அல்ல. உண்மையில் எண்ணற்ற கசப்பான அனுபவங்கள், பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் அடிப்படையில் ஜனநாயகப்புரட்சியின் வெற்றி சாத்தியமாகும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன.

96. உலக சோசலிசப்புரட்சி மூலோபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒருகட்சி என்ற முறையில் அனைத்துலகக்குழு தனியொரு வர்க்க நிலைப்பாட்டையே கடைப்பிடிக்கிறது. தேசிய முதலாளித்துவத்தின் எந்த ஒரு பிரிவினரின் கீழும் தொழிலாள வர்க்கத்தைக் கீழ்ப்படுத்துவதை நியாயப்படுத்தும் "விதிவிலக்கான நிலைமைகள்" எந்தவொரு நாட்டிலும் இருக்கப்போவதில்லை; இருக்கவும் முடியாது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதல்நான்கு காங்கிரஸ்களின் காலப்பகுதியில் (1919—22) பலநாடுகளின் இன்னமும் முதலாளித்துவ உறவுகள் அரிதாகவே வளர்ச்சி கண்டிருந்ததோடு, அதில் பாட்டாளி வர்க்கம் மக்கள் தொகையில் புறக்கணிக்கக் கூடிய தொகையினரையே கொண்டிருந்தபோது, லெனின் முதிர்ச்சியடையாத பாட்டாளி வர்க்கத்தினரிடையேயும்கூட அதன் சுதந்திரமான நலன்பற்றிய நனவினை விருத்திசெய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். ஏறத்தாழ 70 ஆண்டுகளின் பின்னர் ஒவ்வொரு கண்டத்திலும் ஏற்பட்டுள்ள முதலாளித்துவ உறவுகளின் பிரமாண்டமான வளர்ச்சிகளுக்கிடையே சகல ஒடுக்கப்பட்ட நாடுகளிலும் தேசிய முதலாளித்துவ வர்க்கம் அழுகி நாற்றமெடுத்ததை நிரூபித்த பரந்த வரலாற்று அனுபவங்களுக்கு இடையே, தொழிலாள வர்க்கத்தின்

www.padippakam.com



அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் இருந்து செய்யும் பின் வாங்கல்கள் அதனை நிராயுதபாணியாக்கவும் தோல்விகளைத் தயார் செய்வதற்குப மட்டுமே உதவும்.

97. தொழிலாளர் புரட்சிக் கட்சியின் (WRP) குத்துக்கரணம் நிரூபித்தது போன்று மத்திய கிழக்கில் தொழிலாள வர்க்க நலன்கள் காட்டிக் கொடுக்கப்பட்டமையானது, விடாப்பிடியான முறையில் பிரிட்டனிலேயே முதலாளித்துவ வர்க்கத்திற்கு சரணுக்கு அடைவதற்கு இட்டுச்சென்றது.




இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள்

லிபியாவின் கடாபியுடனும், ஈராக்கில் சதம்ஹூசைனுடனும் வைத்திருந்த கொள்கையற்ற கூட்டுகள் உலக ஏகாதிபத்தியத்தின் அடிப்படை நலன்களுக்கே சேவகம் செய்தன. ஏகாதிபத்தியம் இந்த அல்லது அந்த ஆட்சியாளர்களுடன் என்னதான் முரண்பாடுகளைக் கொண்டிருப்பினும், பின்தங்கிய நாடுகளில் அதற்கு முக்கிய அச்சாணியாக விளங்கும் புரட்சிகர தொழிலாள வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இன்னமும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்திலேயே தங்கி உள்ளது.

98. அனைத்துலகக்குழுவும் அதன் பகுதிகளும் இப்பூகோளத்தின் ஒவ்வொரு பகுதியிலும் அனைத்துப் போராட்டங்களிலும் சர்வதேச புரட்சிகர வர்க்கமான தொழிலாளவர்க்கத்தின் வரலாற்று நலன்களைப் பிரதிநித்துவம் செய்கின்றன. அவை எல்லாவித நிலைமையின் கீழும் ஏகாதிபத்தியத்தின் அனைத்து அரசியல் ஏஜென்சிகளிடம் இருந்தும் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்டப் போராடுகின்றன.

www.padippakam.com



99. 1985-ல் இருந்து அனைத்துலகக்குழு, பிரித்தானிய டிராட்ஸ்கிசஇய்ய கத்தின் மாஜி தலைவர்களான ஓடுகாலிகள் ஹீலி, பண்டா, சுலோட்டருக்கு எதிராக நடத்திய போராட்டத்தின் வரலாற்று முக்கியத்தும் இங்கு தான் தங்கி யுள்ளது தொழிலாளர் புரட்சிக் கட்சியுடன் (WRP) ஏற்பட்ட பிளவானது, பப்லோவாத சந்தர்ப்ப வாதத்துக்கு எதிரான அனைத்துலகக்குழுவின் புதுப்பிக் கப்பட்ட போராட்டத்தினை பிரகடனம் செய்தது. இதன் மூலம் நானகாம் அகிலத்தின் உள்ளே 1951—ஆம்ஆண்டின் மூன்றும் காங்கிரசுடன் ஆரம்பமாகி நீண்டுவந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நிலைமைகளைத் தோற்றுவித்தது.

100. 1963—ஆம் ஆண்டின் மறுஇணைப்பிற்கு எதிராகவும் அனைத்துலகக் குழுவினைப்பேணவும் சோசலிச லேபர்லீக் (1973-ல் தொழிலாளர் புரட்சிக்கட்சி (WRP) எனப்பெயர் மாற்றப்பட்டது.) தலைமை தாங்கிய போராட்டத்துக்கு இடைய SLL/WRP இன் அரசியல் போக்கு 1960 களின் கடைப்பகுதியில் இருந்து பெரிதும் தேசியவாத, சந்தர்ப்பவாதப் பண்பினை எடுத்தது. பப்லோ வாதத்துக்கு எதிரான அனைத்துலகக்குழுவின் போராட்டத்தில் இருந்து பின் வாங்கியSLL/WRP, அனைத்துலகக்குழுவினை அமைப்பதனை பிரிட்டனில்புரட்சிக் கட்சியை கட்டுவதற்கு துணையானதாக நோக்கிற்று .எப்போதும் தேசியபபணி களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டதாக, திட்டவட்டமான தசிய அழுத்தங்களுக்கு சந்தர்ப்பவாத அடிபணிவினை பிரதிபலித்தது. 1968—மே—ஜூன் சம்பவங்களின் முக்கியத்துவம், அவை பிரிட்டனின் வேலையில் ஏற்படுத்தும் நடைமுறைத் தாக்கங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டதே அன்றி (அதாவது ஒருதினசரிப்பத்திரிகையை ஸ்தாபிதம்செய்தல்) தொழிலாள இயக்கத்தில் உள்ள எல்லாவித போக்குகளுக்கும் வகித்த பாத்திரங்களை முழுமையாக ஆய்வு செய்யகோரும் அனைத்துலகப்பட்டாளி வர்க்கத்தின் ஒரு மூலோபாய அனுபவமாக மதிப்பிடப்படவில்லை.

101. இந்தப்பின்வாங்கல் எஸ் எல் எல். (SLL) தலைமையின் உள்ளே யான பப்லோவாதப் போக்குகளின் அபிவிருத்தியுடன் பிணைந்துகிடந்தது. 1967-அளவில்பண்டா. ஹோ—சி. மின்-ஐ லெனினின் அரசியல்மறுபிறப்பென பாராட்டியும்சீனாவில் செங்காவலர் (REDGUARD) இயக்கத்துக்கு நிபந்தனை யற்றஆதரவு வழங்கியும், நாசரின் முதலாளித்துவ தேசியவாத ஆட்சிக்கு எகிப்திய தொழிலாளவர்க்கத்தை அடிபணியக்கோரியும் வந்தார் டிராட்ஸ்கிச அடிப்படைக் கொள்கைகள் மீதான தாக்குதல்களை எதிர்கொள்வதற்குப் பதிலாக ஹீலியும், சுலோட்டரும் புரட்சிகர இயக்கத்தின் வேலைத்திட்டம் பற்றிய பிரச்சனைகள் சிறியஅளவு முக்கியத்துவம் கொண்டவை என்ற நிலைப் பாட்டை அபிவிருத்தி செய்தனர். எஸ் எல் எல் /டபிள்யூ ஆர். பி. தலைவர் களின்படி டிராட்ஸ்கிச வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதைவிட "பிரச்சார வாதத்துக்கும்" "கருத்தியல் சிந்தனைமுறைகளுக்கும்" எதிராகப் போராடுவதே அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

102. 1971—ஐ, தொடர்ந்து எஸ்.எல்.எல்.-/டபிள்யூ. ஆர்.பி. தலைவர் களால் அதிகரித்த கர்ண கடூரத்துடன் முன்வைக்கப்பட்ட இந்தக் கருத்துரு வின் முக்கியமான உள்ளடக்கம்— நான்காம் அகிலத்தை எதிர்கொண்டுள்ள ஆபத்து அரசியல் தனிமைப்படுத்தலாக இருந்தது என்பதாகும் மேலும் ஹீலி, பண்டா, சுலோட்டர் ஆகியோர் டிராட்ஸ்கிச அடிப்படையில் கொள்கை களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றலே இந்த தனிமைப்படுத்தலுக்கான காரணம் என்றனர். அது "கோட்பாட்டிற்கும் நடைமுறைக்கும் உள்ள ஐக்கியத்தினை உண்மையாக விளங்கிக் கொள்வதற்கு ஒரு தடைக்கல்லாக

www.padippakam.com


இருப்பதாக'' அவர்கள் தெரிவித்தனர் அது ''ஒரு பிரச்சாரவாத வாழ்வை நியாயப்படுத்தியது''. அது ''ஒரு போதும் உண்மையான புரட்சிகர நடைமுறைக்கான வழிகாட்டுதலாக அழைக்கப்படவில்லை,'' பதிலாக அது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் வர்க்கப்போராட்ட இயக்கத்தை புரிந்து கொள்வதற்குத் தடையான, மாற்றத்திற்கான தடையான போலி ஒப்பந்த முடுதிரையை இப்பொழுது வழங்குகிறது'' என்றனர்.



ஹீலி



பண்டா

103 நான்காம் அகிலம் எதிர்கொள்ளும் பேரபாயப் தனிமைப்படல் என்ற நிலைப்பாடானது, நான்காம் அகிலத்தினுடைய கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டத்துடன் துண்டிப்பது அவசியம் என்றமுடிவிற்கு இட்டுச்சென்றது. 1972-க்குப்பின்னர் வரையில்இருந்து சுலோட்டர்ஐயுறவாதத்துடன்கேட்டிருந்தார் ''தொழிலாளவர்க்கம் ஆட்சியதிகாரத்திற்கு வருவதற்கும் சோசலிசத்தைக்கட்டுவதற்கும் தொழிலாளவர்க்கத்திற்கு தலைமை தாங்கக்கூடிய புரட்சிகரக்கட்சிகளை நெருக்கடிகளின் விளைவுகளினாலான அரசியல் அபிவிருத்திகளின் காட்சிகளின் முன்னே உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் டிராட்ஸ்கிச சக்திகளின், டிராட்ஸ்கிசத்தின் வேலைத்திட்டங்களை வெறுமனே கொண்டுவருவதால் மட்டுமே கட்டி எழுப்ப முடியுமா?'' அவரது பதில் அழுத்தமாக இல்லை என்பதாக இருந்தது. 1979-ல் பண்டாவினால் எழுதப்பட்டு, பின்னர் அனைத்துலகக்குழுவின்பெயரால் கட்சி அறிக்கை விநியோகிக்கப்பட்டது. அதில் தொழிலாளர் புரட்சிக்கட்சி (WRP) வலியுறுத்தியதாவது, ''வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்திகளுக்கு பிரச்சார லேபிள்களை இட்டு அதன் காரணமாக அதனுடைய சாரத்தை உண்மையாக பிரித்தறிவதற்குத் தடையாகவும்,



சுலோட்டர்

படிப்பகம்

www.padippakam.com



மறைத்துக் கொண்டும் இல்லாதவாறு கட்சி ஊழியர்கள் கட்டாயம் பயிற்றுவிக்கப்படவேண்டும் ஆனால் பதிலாக அவர்கள் அபிவிருத்தி அடைந்துவரும் புரட்சிகர யதார்த்தம்கோருகின்ற ஒருபோராடும் உணர்வுமிக்க விழிப்புணர்வை அபிவிருத்தி செய்ய வேண்டும்.''

104. எல்லாவித அரசியல் போக்குக்களையும் இயக்கங்களையும் அவை பிரதிநிதித்துவம் செய்யும் சமூக சக்திகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யும் பாரம்பரிய மார்க்சிச விதி முறையினையே தொழிலாளர் புரட்சிக் கட்சி (WRP) யின் சந்தர்ப்பவாதிகள் ''வர்க்கப் போராட்டத்தின் அபிவிருத்தியின் மேல் பிரச்சார லேபிள்களை ஒட்டுதல்'' என இழிவுபடுத்தினர். இந்த வழியினால் மட்டுமே தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரமான மூலோபாய தந்திரோபாய வழிமுறைகளை நிர்ணயம் செய்ய முடியும். மறுபுறத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உள்ளே ஹீலி வாத சந்தர்ப்பவாதப் பிரிவு, பாட்டாளி வர்க்கத்தினதும் சர்வதேச மார்க்சிச இயக்கத்தினதும் அத்தியாவசியமான வரலாற்று அனுபவங்களை கணக்கில் எடுக்காமல் ''வளர்ச்சியடையும்புரட்சிகர யதார்த்தம் வேண்டுவதுஎன்ன?'' என்பது தீர்மானித்துக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் என்றனர்.

105. 1985 –8ம் பிளவு வரையிலான தசாப்தத்தில் தொழிலாளர் புரட்சிக் கட்சித்தலைவர்களால் அமுல் செய்யப்பட்ட சகலவிதமான காட்டிக் கொடுப்புக்களுக்கும் இது அடிப்படையாக விளங்கிற்று: நிரந்தரப்புரட்சிக்கோட்பாட்டினை நிராகரித்தல், மத்திய கிழக்கு ஆப்பிரிக்க முதலாளித்துவ தேசியவாத ஆட்சியாளர்களுடனான கூட்டு, பிரிட்டனில் தொழிற்சங்க, தொழிற்கட்சி அதிகாரத்துவத்துக்கு அடிபணிவு; மற்றும் அனைத்துலகக் குழுவின் பகுதிகளை அழிப்பதற்கான வரிசைக்கிரமமான முயற்சிகள் ஆகியவற்றுக்கானதும். ஒரு நீடிக்கப்பட்ட காலப் பகுதியில் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைவர்கள் இன்றைய சகாப்தத்தின் முக்கிய ... 'தோல்வி காணாத தொழிலாள வர்க்கத்தின் தோற்றமே' என்ப பிரகடனம் செய்வதன் மூலம் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் மூலோபாய அனுபவங்கள் பற்றிய எந்த ஒரு மார்க்சிச மதிப்பீட்டையும் தடைசெய்ய முயன்றனர். இந்த பிசுபிசுத்த சொற்றொடரோடு தொழிலாளர் புரட்சிக் கட்சியின் (W R P) சந்தர்ப்பவாதிகள், பாட்டாளி வர்க்க புரட்சித் தலைமைக்கான நெருக்கடியை குலைத்ததோடு. அதனிடத்தில் வர்க்கப் போராட்டம் பற்றிய முற்றிலும் அருவமான மற்றும் திருப்தியான ஒரு கருத்துருவை இருத்தினர். தொழிலாள வர்க்கத்தின் ஒவ்வொரு நிகழ்வும், அவற்றின் பெறுபேறுகளைப் பொருட்படுத்தாமல் 'தோல்விகாணா தொழிலாள வர்க்கத்திற்கு' ஒரு உதாரணம் என தப்பட்டம அடிக்கப்பட்டது; உண்மையில் இக்கோட்பாடு தொழிலாள வர்க்கத்திற்கு மார்க்சிச முன்னணிப்படை ஆற்ற வேண்டிய சுதந்திரமான பங்கைக் குறைக்கின்ற அதேவேளையில் ஸ்டாலினிஸ்டுகள், சமூக ஜனநாயக வாதிகள், முதலாளித்துவ தேசியவாத தீவிரவாதிகளின் குற்றங்களை நியாயப்படுத்தவும், மூடிமறைக்கவுமே சேவை செய்தது.

106. 1985—86 அனைத்துலகக்குழுவுக்கும் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் சந்தர்ப்பவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட பிளவில் இருந்த ஓடுகாலிகளின் அனைத்து பிரிவுகளும் டிராட்ஸ்கிசத்திலிருந்து பூரணமாக துண்டித்துக் கொண்டனர். ஹீலி தம்மை மிகயீல் கோர்பச்சேவின் ஆதரவாளராகப் பிரகடனம் செய்ததோடு, அக்டோபர் புரட்சியின் 70—வது ஆண்டு நிறைவு 'கொண்டாட்டங்களில்' கலந்து கொள்ள அதிகாரத்துவத்தினால் மாஸ்கோவுக்கு அழைக்கப்பட்டார். கிரீசில்சவாஸ் மைக்கேலின் தலைமையிலான அவரது

www.padippakam.com


சகாக்கள் கோர்பச்சேவை ஒட்டுமொத்தமாக புகழாரம் சூட்டுதலை, உள்நாட்டில் ஸ்டாலினிஸ்டுகளின் மக்கள் முன்னணி அரசியலில் நேரடி பங்கு கொள்வதன் மூலம் இணைத்துக் கொண்டனர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அரசியல் ஆளுமையை நிராகரிப்பதற்கான ஒரு சாக்குப் போக்காக தொழிலாளர் புரட்சிக்கட்சியில் பிரசுரிக்கப்பட்ட அனைத்துலகக்குழுவிற்கு எதிரான ஒரு பகிரங்க கண்டனத்தினை எழுதியதன் பின்னர் பண்டா தொழிலாளர் புரட்சிக்கட்சியில் இருந்து பிரிந்தார். அவர் டிராட்ஸ்கியையும் டிராட்ஸ்கிசத்தையும் கண்டனம் செய்ததோடு, தம்மை ஜோசப் ஸ்டாலினின் ஒரு தீவிர ஆதரவாளனாகவும் பிரகடனம் செய்துகொண்டார். இன்று சுலோட்டரினால தலைமை தாங்கப்படும் தொழிலாளர் புரட்சிக்கட்சியின்சி (WRP) மிச்ச சொச்சங்கள், உடனடியாக அனைத்து டப்லோவாதக் குழுக்களுக்குள்ளும் பழையதும் வர்க்க சகவாழ்வைக் கடைப்பிடித்தலில் மதிப்பிழந்தவர்களுமான பரிமளு வாதிகளுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு வழிவகுத்தது.

107. 1985—86—ன் பிளவில இருந்து இடம் பெற்று வரும் சம்பவங்கள் புரட்சிகர இயக்கத்தின் உள்ளே சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டத்திற்கும் வர்க்கப்போராட்டத்தின் வரலாற்று அபிவிருத்திக்கும் இடையேயான ஆழ்ந்த உறவை மீண்டும் எடுத்துக்காட்டியது. பிளவானது நான்காம் அகிலத்தினுள் பிரதிபலித்த புறநிலை வர்க்க சக்திகளின் போராட்டத்தின் விளைவாக இருந்தது. 1938—ல் டிராட்ஸ்கியால் ஸ்தாபிக்கப்பட்ட நான்காம் அகிலம், நிகழ்வுகளின் அழுத்தங்களின் கீழ் 1953—அளவில் ஒரேசீரான தன்மையான அரசியல் இயக்கமாக இல்லாதிருந்தது. 1963—ல் அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சி (SWP)யின் சீரழிவுக்கு எதிராக (SLL) எஸ் எல் எல் ஆல் பாதுகாக்கப்பட்டது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு 1985—ஆண்டளவில் சமரசம் செய்ய முடியாத வர்க்கப்போக்குகளுக்கிடையில் துருவமுனைப்படுத்தப்பட்டிருந்தது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் கணிசமான பகுதியினர் குட்டி முதலாளித்துவ சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் நனைட மரபுகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தமையாலேயே, பிரித்தானிய சந்தர்ப்பவாதிகளின் காட்டிக்கொடுப்புக்களை எதிர்க்கமுடிந்தது. பிளவானது தொழிலாளர் புரட்சிக் கட்சியை இருளடையச் செய்த அதேவேளை, அது அனைத்துலகக்குழுவை பெருமளவில் பலப்படுத்தியதோடு, மார்க்சிசக் கோட்பாட்டின் ஒருஉண்மையான மறுமலர்ச்சிக்கும் இட்டுச்சென்றுள்ளது.

108. தொழிலாளர் புரட்சிக்கட்சி ஒடுகாலிகளுக்கு எதிரான போராட்டத்தினை அனைத்துலகக்குழு நடத்துகையில் நான்காம் அகிலத்துக்குப் பேராபத்து 'பிரச்சார வாதம்' அன்றி சந்தர்ப்பவாதமே என்ற அடிப்படை உண்மையை மீண்டும் ஊர்ஜிதம் செய்தது. இங்கு முன்னைய பண்பானது, வேலைத்திட்டத்தை மிதமிஞ்சியவகையில் வெறுமனே காட்சிக்கு வைப்பதை நோக்கிய சரிவாகும். இப்பலவீனம் கல்வி, வெகுஜன இயக்கத்தின் உள்ளேயான அனுபவத்தில் ஊடாகக்களையப்பட முடியும். பின்னையதோ பலம் வாய்ந்த சமூக சக்திகளில் வேரூன்றிய அரசியல் போக்காகும். இது தொழிலாள வர்க்கத்தின் மீதும் மற்றும் புரட்சிகர முன்னணி மீதும் ஏகாதிபத்திய அழுத்தத்தினை பிரதிபலிக்கின்றது. பிரச்சார வாதத்தினை நோக்கிச்சரிந்து விட்ட தோழர்கள் பால் சலுகை காட்டாத போதிலும், கட்சி பொறுமையை கடைப்பிடிக்கும் வேளையில் சந்தர்ப்பவாதத்தின் ஒவ்வொரு வெளிப்பாடு சம்பந்தமாகவும் அது ஈவிரக்கமற்ற பகைமைப்போக்கினைக் கடைப்பிடிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



109. 1985—86 பிளவு நான்காம் அகிலத்தின் அபிவிருத்தியில் ஒரு வரலாற்று மைல்கல் என்பதில் எந்த ஒரு கேள்விக்கும் இடமில்லை. இது 1953-ல் அனைத்துலகக்குழு நிறுவப்பட்டதில் இருந்து பப்லோவாத சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக டிராட்ஸ்கிச இயக்கத்தினுல் தொடுக்கப்பட்ட நீண்ட போராட்டத்தின் உச்சக்கட்டமாகும். பப்லோவாத சந்தர்ப்பவாதத்தினுல் தோற்றுவிக்கப்பட்ட நீண்டகால ஐக்கியமின்மையும், தடுமாற்றமும் ஒரு முடிவுக்கு வந்துள்ளது. ''உலகம் முழுமையும் உள்ள அனைத்துவித உண்மையான டிராட்ஸ்கிஸ்டுகளையும்—அதாவது புரட்சிகர மார்க்சிஸ்டுகளை—அனைத்துலகக்குழுவின் பதாகையின் கீழ் கொண்டு வருவதற்கான நிலைமைகள் உருவாகி உள்ளன.

110. ஸ்டாலினிசம், சமூக ஜனநாயகம், மற்றும் பப்லோவாத சந்தர்ப்பவாதம் ஆகியவற்றினது இணைந்த காட்டிக் கொடுப்புக்கள், பிரெட்டன் வூட்சின் சரிவினுல் தூண்டி விடப்பட்ட மிக மோசமான நெருக்கடி காலப்பகுதியில் நின்று பிடிப்பதற்கும் உலக முதலாளித்துவ சமபலநிலையை ஸ்தாபிப்பதற்கும அவசியமான அரசியல், பொருளாதார கொள்கைகளை தயார் செய்யவும் அனைத்துலக முதலாளித்துவ வர்க்கத்திற்கு நிலைமைகளை உருவாக்கிக் கொடுத்தது. பெட்ரோ—டாலர்களின் மறுசுற்றோட்டம் என்ற தீர்க்கமான பொறிமுறையின் மூலம் கலைப்பு நெருக்கடி அச்சுறுத்தலில் இருந்து மீளமுடிந்தது. பொருளாதாரப் பின்னடைவுக்கு முடிவுகட்டவும், உலக வர்த்தகத்தை விரிவுபடுத்தும் பொருட்டும் வங்கி கடன் கொடுப்புக்களை பிரமாண்டமாக அதிகரிக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டது. எவ்வாறெனினும் 1973—75 பொருளாதார பின்னடைவில் இருந்து தற்காலிகமாக விடுபட முடிந்த போதிலும் உலக முதலாளித்துவத்தின் மிக முக்கியமான புள்ளி விபரங்கள் பிரெட்டன்—வூட்ஸ் சகாப்தத்தின செழிப்பு நிலைமைகளுக்கு திரும்பவே இடமில்லை என்பதைச் சுட்டிக்காட்டின. 1970 களின் கடைசிப்பகுதிகளில் பணவீக்க அதிகரிப்பு வீதத்தையும், குறைந்த வளர்ச்சி வீதத்தையும் குறிக்கும் பொருட்டு 'ஸ்டாக்பிளேசன்' (STAGFLATION) என்ற பதம் புழக்கத்துக்கு வந்தது.

111. இலாபவீதம் சம்பந்தமான புள்ளி விபரங்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை. இவை 1970 கள் பூராகவும் தொடர்ந்து வீழ்ச்சி கண்டன. 1974—ன் பின்னர் ஐரோப்பா, அமெரிக்கா இரண்டிலும் லாபவீதம் கடுமையாக வீழ்ச்சிகண்டன. 1976-அளவில்முதலீட்டு மூலதனம் மீதான சராசரி லாபவீதம 9.2% ஆகும். 1966—ல் இது 13.4% ஆக இருந்தது. அமெரிக்காவில் நிதியல்லாத கம்பெனிகளின் லாபவீதம் 1963-66ல் 15.5%-ல் இருந்து 1967—70-ல் 12.7% ஆகவும் 1971—74—ல் 10% ஆகவும் 1978—ல் 9.7% ஆகவும் வீழ்ச்சிகண்டது. 1965—ல் இலாபங்கள் தேசிய வருமானத்தின் 14% ஆக விளங்கின. 1970—அளவில் அவை 8.8% வீழச்சி கண்டது 1980—ல் புள்ளி 8 2% ஆகஇருந்தது, 1982—ல 6.7% குறைவாக வீழ்ச்சியடைந்தது

112. இலாபவீகத்தின் வீழ்ச்சி, சுருளபணவீக்கம், டாலர் மீதான அனைத்துலக நம்பிக்கையின் சரிவினை எதிர்கொண்ட அமெரிக்க முதலாளித்துவ வர்க்கம், 1970 களின் கடைசிப்பகுதியில் தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத்தரங்களின்மேல் நேரடித்தாக்குதலை நடத்துவதை விட மாற்றுவழி இல்லை என்ற முடிவுக்கு வந்தது. 1979—ல் கார்ட்டர் நிர்வாகம பாலவாக்கரை சமஷ்டி ரிசர்வ் வங்கியின் தலைவராக நியமனம்

www.padippakam.com


செய்தது. அவர் உடனடியாக பயங்கரமான சிக்கன கொள்கைகளை அமுல் செய்யத் தொடங்கினர். இரண்டாம் உலகப்போரின் பின்னர் இருந்து, தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக நீடித்த படுமோசமான தாக்குதலை நடத்தும் பொருட்டு, முதலாளித்துவத்தால் பயன்படுத்திக் கொள்ளப் பட்ட பொருளாதாரப் பின்னடைவின் ஒரு தூண்டும் தேவைக்காக வட்டி வீதங்கள் வரலாற்றின் மட்டங்களுக்கு உயர்த்தப்பட்டன. ஒருசில மாதங் களுக்குள் ஐரோப்பாவிற்கும் பொருளாதார பின்னடைவு பரவியது. 1983—ல் வேலையற்றோர் எண்ணிக்கை 1975—ல் இருந்ததைக் காட்டிலும் இரண்டு மடங்காகியது.

113. 1980—நவம்பரில் ரேகன் தெரிவு செய்யப்பட்டமை அமெரிக்கா வில் தொழிலாளர் இயக்கத்துக்கு எதிரான உக்கிரமான தாக்குதலை சமிக்ஞை காட்டியது. எதிர்ப்புக்காட்டமாட்டோம. என்ற வாக்குறுதியை ஏ. எப். எல—சி ஐ ஓ. (AFL—C.I.O.) விடம் பெற்ற ரேகன் நிர்வாகம், கார்ட்டர் நிர்வாகத்திஞல் தயார் செய்யப்பட்ட அவசரகால அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 1981, ஆகஸ்டில் 13,000 விமானப் போக்கு வரத்துக் கட்டுப்பாட்டாளர்களை ஒரேயடியாக வேலை நீக்கம் செய்தது. தொழிலாள வர்க்கத்தின் கடந்தகாலத் தேட்டங்களைக் கட்டிக்காப்பது பற்றிய எந்தவிதமான பாவனையையும்கூட அதிகாரத்துவம் கைவிட்டதால் தொழிற்சங்க இயக்கத்தினை அடியோடு துடைத்துக்கட்டுவது தொடர்ந்தது.

114. தொழிலாள வர்க்க எதிர்ப்பின் ஒவ்வொரு வடிவத்தினையும் முறையாக நசுக்குவதன் பொருட்டு, ஏ. எப். எல்—சி ஐ ஓ. தொழிற் சங்க இயகக்த்தினை துடைத்துக்கட்ட தலைமை தாங்கத் தொடங்கியது. அது தொழில்துறை சார்ந்த ஒப்பந்தங்களை ஒழிப்பதை வரவேற்றது, இருந்து கொண்டிருக்கும் உடன்படிக்கைகங்களை ரத்துச் செய்ய இணங்கியது. கூலி வெட்டுக்கும், ''திரும்பக்கொடு''; என்பது போன்ற கணக்கற்ற எண்ணிக்கையுடைய கோரிக்கைகளுக்கு அனுமதியளித்தது, மற்றும் பல எண்ணிக்கையில தொழிற்சாலைகள் மூட ஊக்க ஆர்வத்துடன் துணை போனது. தொழிற்சங்கத் தலைமை நடைமுறையில் அதனை கூட்டுத்தாபன நிர்வாகத்தின் ஒழுங்கமைப்புக்குள் ஒருங்கிணைத்துக் கொள்ளுதலை ஏற்றுக் கொண்டது. அதிகாரத்துவம தனது வேலையை முற்றுமுழுதாகநிறைவேற் றுவதால, பெரிய கூட்டுத்தாபனங்கள் ஆயிரக்கணக்கான நடுத்தர நிர்வாகி களை வேலை நீக்கம் செய்து, அவர்களின் முன்னைய மேற்பார்வை வேலைகளை தொழிறசங்க அதிகாரிகளிடம ஒப்படைப்பதைசாத்தியமாக்கியது. பெரிய அமெரிக்க கூட்டுத்தாபனங்களால சமீபத்தில வெளியிடப்பட்ட உயர்ந்த லாபங்கள், தொழிலாளர் அதிகாரத்துவத்தினால் சாத்தியமாக்கப்பட்ட பெருமளவில் அதிகரித்த சுரண்டல் மட்டத்தினைப் பிரதிபலிக்கின்றது. பெரும்பாலான கம்பெனிகளில் நஷ்டத்திலிருந்து லாபத்துக்கு இடம்பெயர் வதில், விற்பனை அதிகரிப்பு அல்ல செலவில வெட்டுதலே ஒரு பெரும் காரணியாக விளங்குகிறது. 1980 -க்கும் முன்னரைவிட 24% குறைவான விற்பனையில் மோட்டார் கமபெனிகள் தற்போது லாபம் ஈட்டுகின்றன. 1970—ல் கூலிகளும் சம்பளங்களும் தேசியவருமானத்தில் 75.4% உள்ளடக் கியிருந்தன; 1986—ல் அந்தப்புள்ளிகள் 61% ஆக வீழ்ச்சியுற்றன.

115. 1979—80—ல் அமெரிக்க முதலாளித்துவத்திஞல் மேற் கொள்ளப்பட்ட கொள்கைகள், அனைத்துலக மட்டத்தில் ஒருவர்க்க ஆட்சி

படிப்பகம்

www.padippakam.com


விதிமுறையில் ஒரு மாற்றத்தை சமிக்ஞை செய்தது. 1979—மே மாதத்தில் தாட்சர் தேர்ந்து எடுக்கப்பட்டமை, தொழிலாள வர்க்கத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதை இலக்காகக்கொண்ட நீடித்த உக்கிரமான ஒரு எதிர்த்தாக்குதலின் ஆரம்பத்தையும், இரண்டாம் உலகப்போரின் பின்னர் உருவாக்கப்பட்ட சமூக நல அமைப்புக்களை ஒழித்துக்கட்டுவதையும் ஒரேகாலத்தில் குறித்து நின்றது. பிரான்சில் ஸ்டாலினிச அமைச்சர்கள் நால்வரைக் கொண்ட ''சோசலிச'' மிட்டரண்ட் அரசாங்கம், ஒரு பகட்டான தீவிரவாதத்தை காட்டிய பின்னர், ரேகனின் பொருளாதாரக் கொள்கைகளில் இருந்து பேதம் காண முடியாத கொள்கைக்குத் திரும்பியது. ஹெல்மட் கோல் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜேர்மனியிலும் இத்தகைய ஓர் அபிவிருத்தி ஏற்பட்டது. ரேகனிச ''சீர்கேடுகளின்'' ஐரோப்பிய சாரச்சுருக்கமானது வெறிபிடித்த ''தனியார் மயமாக்கல்'' பிரச்சாரம் தேசிய மயமாக்கப்பட்ட தொழிற்துறைகளை சிதறடிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. 1979—1988-க்கு இடையே போர்த்துக்கல் முதல் கிரீஸ் வரையிலான ஐரோப்பிய அரசாங்கமும் சமூக சீர்திருத்த வாதம், வர்க்க சமரசக் கொள்கைகளை நிராகரித்தன. இப்போக்கு அமெரிக்காவுடனும் ஐரோப்பாவுடனும் மட்டும் கட்டுப்பட்டு நின்றுவிடவில்லை. ஆஸ்திரேலியாவில் கவுக்கின் கீழும், நியூசிலாந்தில் லாங்கேயின் கீழும் சமூக ஜனநாயக அரசாங்கங்கள், தடையற்ற முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தினால் அமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட தடைகளைக்கூட தகர்க்கின்றனர். சர்வதேச நாணய நிதியினதும், உலக வங்கியினதும் சாட்டையின் கீழ் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடுகள் கூட—பெப்ரஸ் கோர்டேராவின் எக்குவடோர் மற்றும் சீகாவின் ஜமைக்கா முதல் ஜெயவர்த்தனேயின் இலங்கை மற்றும் காந்தியின் இந்தியா வரை—ரேகன் நிர்வாகத்தின் கொள்கைகளை பின்பற்ற முயற்சிக்கின்றன.

116. அனைத்துலக தொழிலாளர் இயக்கத்தின் வெளிப்படையான நெருக்கடி, முதலாளித்துவ பிரச்சார வாதிகளால் முதலாளித்துவத்தின் புதிய பொற்காலம் எனப் பிரகடனப்படுத்துவதற்காக கைப்பற்றப்பட்டது. ஆனால் வறுமையின் பெரும் வளர்ச்சிக்கு இடையேயும் முதலாளித்துவ வர்க்கத்தினால் முழு முதலாளித்துவ முறையினதும் உலக நெருக்கடியில் இருந்து விடுவித்துக் கொள்ள முற்றிலும் முடியாது போயிற்று. உலக அளவில் முதலாளித்துவ வர்க்கம் முகம் கொடுக்கும் நெருக்கடியானது வெறும் கற்பனை அல்ல, ஒரு வரலாற்று ஒழுங்குமுறையான பண்பைக் கொண்டுள்ளது.

117. 1970-களின் இலாபவீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் பொதுவான பொருளாதார தேக்கநிலையும் நாடுகடந்த கூட்டுத்தாபனங்களின் செயலில் திடீர் வளர்ச்சிக்கு உந்துதலைக் கொடுத்தது. இதன் விளைவாக உலகச்சந்தை முன்னெப்போதும் இல்லாத விதத்தில் இணைக்கப்பட்டு உற்பத்தியும் சர்வதேசிய மயமாக்கப்பட்டது. அனைத்துத் தேசியப் பொருளாதாரங்களும் அமெரிக்கா உட்பட, உலகப்பொருளாதாரத்தின் முழுமையானதும் தீவிரமானதுமான மேலாதிக்கத்திற்கு ஆட்பட்டமை நவீன வாழ்வின் ஒரு அடிப்படை உண்மையாகும். ஒரு இணைந்த சுற்றுவழிகளின் கண்டுபிடிப்புடனும் பூரணத்துவத்துடனும் கூடிய விதத்தில் தொழில் நுட்பத்தில்

ஏற்பட்ட முன்னேற்றங்கள் செய்தித் தொடர்பு சாதனங்களில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. அவை பதிலாக, பூகோளத்தின் பொருளாதார ஒருங்கிணைப்பு வழிமுறைகளை துரிதப்படுத்தியுள்ளன. ஆனால் இந்த பொருளாதார தொழில் நுட்ப அபிவிருத்திகள் முதலாளித்துவத்திற்கு புதிய வரலாற்று சாலைகளைத் திறப்பதற்கு மாறாக, உலகப் பொருளாதாரத்துக்கும் முதலாளித்துவ தேசிய அரசு அமைப்பு முறைக்கும் இடையேயும் சமூக உற்பத்திக்கும் தனிச்சொத்துடைமைக்கும் இடையேயும் அடிப்படையான முரண்பாடுகளை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தீவிரமாக்கியுள்ளன.

118. பிரம்மாண்டமான நாடுகடந்த கூட்டுத்தாபனங்களின் மற்றும் உற்பத்தி பூகோள மயமாக்கப்பட்டதன் தோற்றமானது பிரிக்க முடியாதவாறு, புரட்சிகர தாக்கங்களைக் கொண்ட மற்றுமோர் காரணியுடன் இணைந்து கொண்டுள்ளன: அமெரிக்கா தனது உலகப்பொருளாதார மேலாதிக்கத்தினை சார்புரீதியிலும் முழுமையாகவும் இழந்தமை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக அந்தஸ்தில் ஏற்பட்ட இந்த வரலாற்று மாற்றம் அமெரிக்காவை உலகின் முக்கிய கடன் கொடுப்பாளர் என்ற நிலையில் இருந்து மாபெரும் கடனாளி என்ற நிலைக்கு மாற்றியதன் மூலம் வெளிப்பாடாயிற்று. இது தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரங்களில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சிக்கான காரணமாக அடிப்படையைக் கோடிட்டுக் காட்டுவதோடு, அமெரிக்காவில் புரட்சிகர வர்க்க மோதுதல்களுக்கான காலப் பகுதிக்கும் கட்டாயம் இட்டுச்செல்கின்றது.

119. அமெரிக்காவின் மேலாதிக்கத்தின் கீழ் மறு நிர்மாணம் செய்யப்பட்ட யுத்தத்துக்குப் பிந்திய உலக முதலாளித்துவத்தின் முழு பொருளாதார மற்றும் பூகோள அரசியல் கட்டமைப்பின சீர் செய்ய முடியாத தகர்வானது, ஜப்பான் பலம்வாய்ந்த தொழிற்துறை சக்தியாகவும் பெரும் மூலதன ஏற்றுமதியாளராகவும் எழுச்சி கண்டதைக் காட்டியது. இது அமெரிக்க முதலாளித்துவத்தை பூகோளத்தின் ஒவ்வொரு மூலையிலும் சவால் செய்கின்றது. அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் இடையேயான மோதல்தான் பெரிதும் வெடிக்கும் தன்மையுடையதாய் இருந்தாலும், அது ஏகாதிபத்திய வாதிகளுக்கிடையே மோசமடைந்து செல்லும் குரோதத்தின் ஒரு வெளிப்பாடு மட்டும் ஆகிவிடாது. ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கம் பொருளாதார சமூகத்தை (E.C.) ஜப்பானிய, அமெரிக்க மூலதனம் இரண்டையும் சவால் செய்ய வல்ல ஒரு வர்த்தக நிதிக்கூட்டாக மாற்றச் செய்யமுயன்று வருகையில், யுத்தத்தின் பிந்தைய "அட்லாண்டிக் கூட்டு" அடியோடு தகர்ந்து வருகிறது. 1992—களில் தனியொரு ஐரோப்பியச் சந்தையை நிறுவும் திட்டங்களின் முக்கியத்துவம் இதுவே ஆகும்.

120. மாபெரும் புரட்சிகர முக்கியத்துவமுடைய நான்காவது காரணி ஆசிய பசிபிக் கரையோர பொருளாதாரங்களின் அசாதாரணமான துரித அபிவிருத்தியாகும். நிலைத்திருக்க வைக்க முடியாத ஏற்றுமதி சந்தைகளில் முற்றிலும் தங்கியுள்ள பொருளாதார நிலையைக்கொண்ட தேசிய முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்தில் தள்ளப்பட்டு வரும் பரந்த தொழிலாள வர்க்கத்தினைத் தோற்றுவித்துள்ளது. தென்கொரிய தொழிலாள வர்க்க இயக்கம் இளையதாயினும் பலம் வாய்ந்த தொழில் துறைப்பாட்டாளி வர்க்கம் படைப்பிரிவுகளாக ஆசியா முழுவதும்

www.padippakam.com



யும் உலகப் புரட்சி அரங்கினுள் நுழைவதைக் குறிக்கிறது. ஏகாதிபத்தியத்தின் மூலதன ஏற்றுமதியினால் தொழிலாள வர்க்கத்தின் புதியதும் சக்தி வாய்ந்ததுமான படையணிகள் எழுச்சி கண்டிருப்பது ஆசியாவில் மட்டுமல்ல. இதே போக்குகள் ஆப்பிரிக்காவிலும், லத்தின் அமெரிக்காவிலும் (சிறப்பாக மெக்சிகோ) நன்கு முன்னேறியுள்ளன.

121. நம் கவனத்தைக் கவர்ந்த ஐந்தாவது காரணி, பின் தங்கிய நாடுகளின் ஏழ்மையடைதலும் கையாலாகாத தேசிய முதலாளித்துவத்தின் கணக்கற்ற வளர்ச்சி மூலோபாயங்களின் சிர்குலைவுமேயாகும். லத்தின் அமெரிக்க நாடுகள், ஆப்பிரிக்கா மற்றும் இந்தியத் துணைக்கண்டத்தின் நாடுகள் அவற்றின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் ஒருபோதும் ஒத்தவையாக இல்லாதிருப்பினும் அவை அனைத்தும் சமூக வெடிமருந்து பீப்பாய்கள் ஆகும். ஏகாதிபத்தியம் மற்றும் அதன் கையாளான தேசிய முதலாளித்துவம் ஆகியவற்றின் கொள்கைகளால் உருவாக்கப்பட்ட துன்பங்கள் இழிவுகள் இவற்றிலிருந்து சோசலிசப் புரட்சி மூலமாக தவிர வேறுவழியாக தப்பமுடியாது.

122. இறுதியாக ஆறாவது காரணி, நாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு சோவியத் யூனியனில், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மற்றும் சீனா ஆகியவற்றில உள்ள ஆளும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களால், சந்தைப் பொருளாதார கொள்கைகளுக்குச் சென்றதன் திருப்பத்திலிருந்து கட்டாயம் ஊற்றெடுக்கின்ற புரட்சிகர பிரதிவிளைவுகளாகும். சீனாவில் நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் முதலாளித்துவ உறவுகளை ஸ்டாலினிச அதிகாரத்துவம ஊக்குவித்ததன் விளைவாக 35 ஆண்டுகளுக்கும் மேலாகக் காணாத வறுமையின் அம்சங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. பணவீக்கமும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்கனவே அவற்றின் தாக்கத்தை உணரப்பண்ணிக் கொண்டிருக்கின்றன. போலந்தில் அண்மையில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் எடுத்துக்காட்டியவாறு, ஸ்டாலினிஸ்டுகள் ஆளும் நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் முதலாளித்துவத்தை மீண்டும் அறிமுகம் செய்வதை அமைதியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

## ஐக்கிய அமெரிக்க அரசுகள், ஜப்பான், ஐரோப்பாவும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான குரோதங்களின் வளர்ச்சியும்

123. முதலாளித்துவம் ஒரு இரண்டாவது பொற்காலத்தில் நுழைந்து கொண்டிருப்பதாகத் தம்மைத்தாமே திருப்திப்படுத்திக் கொண்டுள்ள விரக்தியுற்ற குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளுடன் ஒப்பிடுகையில் நன்கு தொலைநோக்குப் பார்வையுடைய முதலாளித்துவத்தின் பிரதிநிதிகள் அமெரிக்க மேலாதிக்கத்தின் தகர்வு, பொதுவாக பூகோளப் பொருளாதாரம் எனஅழைக்கப்படும் நாடு கடந்த கம்பெனிகளின் உற்பத்தியின் பெருக்கம, வர்த்தகப் பகைமைகளின் உக்கிரம, தொழில் நுட்ப முன்னேற்றங்களின் தாக்கங்கள் ஆகியன தீர்வுகாணமுடியாத பெரும்பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன என்பதை அறிவர், அத்தகைய பிரதிநிதிகளில் ஒருவரான மாஜி அமெரிக்க கருவூல செயலாளர் டபிள்யு.மைக்கேல் புளுமென்தல் சமீபத்தில எழுதியதாவது: ''மிகப் பிரமமாண்டமான

www.padippakam.com



அளவிலான ஒரு நிஜ உலக மூலதனச்சந்தையும் மற்றும் பல இடை நிலைத் தொடர்புகளும் ஒளியின் வேகத்தைப் போல் விரைவில் எல்லைகளைப் பொருட்படுத்தாமல் உலகின் கம்ப்யூட்டர்கள், தொலைத்தொடர்புகள் வலைப்பின்னல்களின் ஊடாக, பரந்த அளவிலானவழக்கத்திற்கு மாறான நிதி ரீதியான புதிய பண அணிகலன்களும், பணத்தையொத்த கருவிகளும், —உள்நாட்டுக் கொள்கை, நாணயமாற்று வீதங்கள் தொடர்பான வெறும் தேசிய ரீதியான நடவடிக்கையை காலாவதியாக்கிவிட்டன. தேசிய பண விநியோகம் என்ன கேள்விக்கு பதிலளிப்பது இனியும் சுலபமான காரியம் அல்ல. தேசிய ரீதியில் பண விநியோகத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி எல்லைத் திட்டமிடலும் [illegible] நாடும் ஆட்டத்தின் நியதிகள் அடிப்படையில மாற்றம அடைந்துவிட்டன...... பொதுவாகச் சொன்னால பொருளாதார விவகாரங்களின் பலதுறைகளில—குறைந்தபட்சம் உலகின் பெரிய நாடுகளில் சிலவற்றிலும் இறுதியில் அனைத்திலும......—அநத தொழில் நுட்பமே தேசிய இறைமைபற்றிய அடிப்படைக் கருத்தினைத் துரிதமாக காலாவதியானதாக்கிக் கொண்டுள்ளது. தொழில் நுட்பமானது, தனிப்பட்ட உண்மையான பொருளாதார இருப்பை சக்தி வாய்ந்த விதத்தில் இனியும் கொண்டிருக்க முடியாத தொகுப்பினைக் கொண்ட ஒரு உலகத்தை சிருஷ்டித்துள்ளது என்ற முடிவுக்கு வருவது தவிர்க்க முடியாதது. நாம் எதுவும் மாற்றம் நடந்துவிடவில்லை என்ற விதத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருவோமாயின், கட்டாயமாக தேசிய கொள்கைகளைப் பிரயோகிப்பதில் நாம் காட்டும் விடாப்பிடியானது, விரக்தியடையச் செய்வதோடு, பெரும்பாலும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்.'' (வெளி விவகாரங்கள், பகுதி 66, எண் 3, பக்கம் 585—95)

124. தொழில் நுட்ப முன்னேற்றங்கள், அவையே நெருக்கடிக்கான காரணி அல்ல. புளுமென்தல் அதற்கு உதவமுடியாது, ஆனால் அதனை அங்கீகரிக்கின்றார். மாறாக 70 ஆண்டுகளுக்கு முன்னர் டிராட்ஸ்கியினால் முன்வைக்கப்பட்ட ஆய்வு சரியானது என்பதை அவரின் விளக்கம காட்டுகிறது: "முதலாளித்துவம அபிவிருத்தி செய்த முதலாளித்துவ உற்பத்தி சக்திகள் தேசிய அரசு எல்லைகளைக் கடந்து வளர்ச்சிகண்டுள்ளன. இன்றைய அரசியல் வடிவத்தில் தேசிய அரசானது இத்த உற்பத்தி சக்திகளைச் சுரண்டுமளவுக்கு மிகக்குறுகியதாக இருக்கிறது. ஆதலால் நமது பொருளாதார அமைப்பின் இயற்கைப்போக்கு, இந்த அரச எல்லைகளை உடைத்துச்செல்ல முயலுவதாக உள்ளது. பூகோளம் முழுவதும், நிலம், கடல், வெளிப் பரப்பு அதேபோல் உட்புறமும் ஒரு பொருளாதார வேலைத்தளமாகி விட்டன. இவற்றின் வெவ்வேறு பகுதிகளுள் பிரிக்க முடியாதவாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதாக அமைந்துள்ளன. ஆனால் இதனை நிறைவேற்றுகையில் முதலாளித்துவ அரசுகள் ஒவ்வொரு நாட்டினதும் முதலாளித்துவ வர்க்கத்தின் லாபநலன்களின்பேரில் உலகம் தழுவிய பொருளாதார முறையை கீழ்ப்படுத்துவதற்கான போராட்டத்திற்கு இட்டுச் செலலப்படுகின்றன. 1789-1815, 1848-1859, 1864-1866 1870களில் புரட்சிகள், யுத்தங்கள் மூலம் உருவாக்கப்பட்ட பழைய தேசிய அரசுகள் தங்களபலேயே உயிர்வாழ முடியாமற் போய்விட்டதை ஏகாதிபத்திய அரசியல் மேலெந்தலையும் விட நன்கு எடுத்துக் காட்டியுள்ளது. இன்று இது பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சகிக்க முடியாத இடைஞ்சலாகி உள்ளது.'' (யுத்தமும் அனைத்துலகமும்)

www.padippakam.com



**125.** உலகப் பொருளாதாரத்தின் அமைதியான அபிவிருத்தியை முதலாளித்துவத்தின் கீழும் அதன் தேசிய அரச முறையின்கீழும் காண்பது முடியாத காரியம். ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான மோதல்கள், உலகைக் கூட்டாகச் சுரண்டும் முதலாளித்துவ உற்பத்தியாளர்களின் சங்கத்திற்கு நிரந்தரமாகவே இரண்டாம் பட்சமாகப் போய்விட்டது என்ற " அதீத ஏகாதிபத்திய" கருத்துரு, படுமோசமான திரிபுவாதி கார்ல் காவுத்ஸ்கியால், பல தசாப்தங்களுக்கு முன் முன்வைக்கப்பட்டது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான குரோதம் என்ற கருத்தை ஏகாதிபத்திய சக்திகளுக்கும் சோஷலிசத் அணிக்கும் இடையிலான மோதல் என்பதாய்முழுமையாக வெளித்தள்ளப்பட்டுவிட்டது என்ற கருத்து முதலில் ப்லோவால் முன்வைக்கப்பட்டது, பின்னர் பண்டாரினாலும் சுலோட்டரினாலும் வளர்க்கப்பட்டது. இது பிரட்டன்—வூட்ஸ் அமைப்பின் கட்டமைப்பினுள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தற்காலிக மேலாதிக்கத்துக்கு குட்டி முதலாளித்துவ அடிபணிவேயன்றி வேறல்ல.

**126.** உலகப் பொருளாதாரத்தக்கும் தேசிய அரசு முறைக்கும் இடையிலான முரண்பாட்டினை ஏகாதிபத்தியம் வெற்றிகரமாகத் தீர்த்துவிட்டது என்ற கூற்றை முழுமையானதாய் ஏற்றுக்கொண்ட கருத்துருவானது, இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இருந்து ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான மிகவும் உக்கிரமான குரோதங்களின் மறுக்க முடியாத வளர்ச்சியால் தகர்க்கப்பட்டுவிட்டது.

127. உலகச் சந்தையில் அமெரிக்கா மேலாதிக்கம் இழந்ததைக் காட்டும் வகையில் எண்ணற்ற புள்ளி விபரங்களைக் காட்டமுடியும். 1950—1976 வரை அமெரிக்க வர்த்தக நிலுவை 600 கோடி டாலர் உபரிக்கும் 900 கோடி டாலர் பற்றுக்குறைக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தது; 1977-ல் இருந்து 1981 வரை 2500 கோடி டாலருக்கும் 3,400 கோடி டாலருக்கும் இடைப்பட்ட உறுதியான வர்த்தகப் பற்றுக்குறை காணப்பட்டது. 1982-ல் வர்த்தகப் பற்றுக்குறை 3,600 கோடி டாலராக இருந்தது, 1985-ல் அது 12,500 கோடி டாலராக எட்டியது. 1970 கள் வரை அமெரிக்கா மூலப் பொருட்களையும், பெட்ரோலையும் இறக்குமதி செய்தது. உற்பத்திப் பொருட்களையும், மூலதனப்பொருட்களையும்ஏற்றுமதி செய்தது. இன்று நிலைமை தலைகீழாகியுள்ளது. 1985-ல் ஜப்பானுக்கான அமெரிக்க ஏற்றுமதிகளில் ஐந்து முக்கிய ஏற்றுமதிகள்—மஞ்சள் தானியங்கள், சோயாபீன்ஸ், நிலக்கரி, கோதுமை, பருத்தி—அதே சமயம் ஜப்பானிலிருந்து மோட்டார் வாகனங்கள், அலுவலக எந்திரங்கள், எலெக்ட்ரானிக் உற்பத்தி நுகர் பொருட்கள், செமிகண்டக்டர்கள் ஆகியவற்றை இறக்குமதிசெய்தது. 1965-ல் 65% ஆக இருந்த அமெரிக்க வாகன உற்பத்தியின் பங்கு 1980-ல் 20% ஆக வீழ்ச்சி கண்டது. 1980—1984-க்கும் இடையில் அமெரிக்கா தனது ஏற்றுமதிச் சந்தைப் பங்கில் 23%ஐ இழந்தது. இரும்பு எஃகுத் தொழிற்துறையின் நிலைப்பாடு, ஒரு காலத்தில் சவால் செய்ய முடியாத முன்னணி தொழில் சக்தியாக திகழ்ந்த அமெரிக்கா இன்று அதை இழந்துவிட்டதை நன்கு காட்டுகிறது. 1955-ல் உலக எஃகு உற்பத்தியில் 39.3%ஐ அமெரிக்கா உற்பத்தி செய்தது. 1975-ல் அது 16.4% ஆக வீழ்ச்சியடைந்தது. 1984-ல் அது 8 4% ஆக மட்டுமே இருந்தது, 1973—1983-க்கும் இடையே அமெரிக்க எஃகு உற்பத்தி 44% ஆக வீழ்ச்சி அடைந்தது. 1950 களில் ஒருங்கிணைக்கப்பட்ட அமெரிக்க கம்பெனிகள், அமெரிக்க சந்தைக்கு 95%க்கும் மேலானதை வழங்கின. இப்பொழுதோ அவற்றின் பங்கு 60%க்கும் குறைவானதாகும்.

www.padippakam.com



128. ஜப்பான் ஒரு தொழில் துறை, மற்றும் நிதித்துறை சக்தியாக வளர்ச்சி கண்டதைக் காட்ட, இதற்குக் குறைவுபடாத பரந்த அளவிலான புள்ளி விபரங்கள் உள்ளன. அவற்றை அமெரிக்காவின் வீழ்ச்சி விபரங்களுடன் ஒப்பிடுகையில், அவை வியப்பூட்டுபவையாக இருக்கின்றன. கடந்த கால் நூற்றாண்டின்போது, அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான வர்த்தகத்தில் ஒரு தெளிவான அதிகரிப்பு ஏற்பட்டது. ஆனால் ஜப்பானிய இறக்குமதிகள் அமெரிக்க ஏற்றுமதிகளைவிட பெருமளவில் அதிகரித்துக் காணப்பட்டன. 1960-ல் அமெரிக்கா ஜப்பானுக்கு 140 கோடி டாலருக்கு பொருட்களை விற்பனை செய்தது. 110 கோடி டாலருக்கு பொருட்களை கொள்வனவு செய்தது. 1985-ல் அமெரிக்கா 2,260 கோடி டாலர் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்தது, 6880 கோடி டாலர் பொருட்களை இறக்குமதி செய்தது. பணவீக்கத்தினைச் சரி செய்தபொழுது இது ஏற்றுமதியில் 5 மடங்கு அதிகரிப்பினையும் இறக்கு மதியில் 18 மடங்கு அதிகரிப்பையும் பிரதிநிதித்துவம் செய்கிறது. 1960-ல் ஜப்பானின் தலாவருமானம் அமெரிக்க மட்டத்தில் சுமார் 30%-ல் நின்று கொண்டிருந்தது. 1980-ல் இது சுமார் 70%க்கு வளர்ச்சி கண்டது. 1960–1980-க்கு இடையே உலக மொத்த தேசிய உற்பத்தியில் (GNP) ஜப்பானின் மொத்தப்பங்கு 300%க்கும் மேலாக அதிகரித்தது.

129. உலக நிதித்துறையில் ஜப்பானின் பாத்திரம் கடந்த 20 வருடங்களாக எந்த விதத்திலும் குறைவுபடாத பெரும் வளர்ச்சிகண்டுள்ளது. அமெரிக்காவின் தேசிய வெளிநாட்டுக் கடனான 26,400 கோடி டாலர்களுடன் ஒப்பிடுகையில், ஜப்பானின் தேசிய வெளிநாட்டுச் சொத்து இப்பொழுது 30,000 கோடி டாலர்களை எட்டியுள்ளது. உலகின் மிகப்பெரிய எட்டு வங்கிகளில் ஏழு வங்கிகள் ஜப்பானுடையதாகும். உலகின் முன்னணி நூறு வங்கிகளில் 25 வங்கிகள் ஜப்பானுடையதாகும். முன்னணி 500 வங்கிகளில் 98 ஜப்பானுடையதாகும். அவை உலக வங்கிக் கடன்களில் 25% கணக்கைக் குறிப்பிடுகின்றன. ஒப்பிடுமிடத்து அமெரிக்கவங்கிகள் அனைத்தும் சர்வதேச வங்கி கடன் சொத்துகளில 18%ஐ மட்டுமே கொண்டுள்ளன. லண்டன் நகரில் இயங்கும் 25 பெரும் வங்கிகளில் 1[illegible] வங்கிகள் ஜப்பானுடையதாகும். 1986-ல் டோக்கியோ பங்குச் சந்தை உலகின் பெரும் சந்தை ஆகியது. இது உலக பங்கு மதிப்பில் 1/3 பங்கை கணக்கில் கொண்டிருக்கின்றது. நியூயார்க் பங்குச் சந்தையின் அளவை சேர்க்கப்படாவிடில், உலகின் ஏனைய பங்குச் சந்தைகளை இணைத்தாலும் அதை விடப் பெரியது டோக்கியோவே. நொமுரா செக்யூரிட்டிஸ் கம்பெனியின் சந்தை மூலதனம் 5,400 கோடி டாலர்களாகும். இது தனது பெரிய அமெரிக்கப் போட்டியாளரான மெரில் லிஞ்ச் அண்ட் கம்பெனியை விட 10 மடங்கு அதிகமானது. இந்தப் புள்ளி விபரங்கள் 1987-அக்டோபர் வால்ஸ்ட்ரீட் சரிவுக்கு முன்னைய நிலைமைகளை பிரதிபலிக்கின்றன. அதிலிருந்து டோக்கியோ பங்குவிலைகள் முற்றிலும் மீண்டு விட்டன. ஆனால் வால்ஸ்ட்ரீட் கடந்த ஆண்டு மட்டத்துக்கு பெரிதும் கீழேயே நின்று கொண்டிருக்கிறது. வால்ஸ்ட்ரீட் நெருக்கடி சம்பந்தமா[illegible] ஒரு முக்கிய முதலாளித்துவப் பத்திரிகையான 'பாரின் பாலிசியில்' ஒ[illegible] உணர்வு பூர்வமான ஆய்வு வெளியாகியது. அது ஆளும் வர்க்கத்தி[illegible] முக்கிய பகுதியினரின் சிந்தனையைப் பிரதிபலிக்கின்றது. ஒரு பொருளா[illegible]தார அறிஞர் தெளிவாகக் குறிப்பிடுகையில் '1987 சரிவு பொருளாதார[illegible] நிதி பலத்தை அமெரிக்காவிடமிருந்து ஜப்பானுக்கு மாற்றுவதில் ஒருகுறி[illegible] டத்தக்க படியைக் குறித்துள்ளது'' என்றார். (1988-ஏப்ரில், எண் 7[illegible] பக்கம் 71)

www.padippakam.com



130. ஜப்பானிய — அமெரிக்க முதலாளித்துவத்தின் உலகளாவிய போட்டி முன்னெரு போதும் இல்லாத விதத்தில் உக்கிரம் அடைந்து வருகின்றது. ஏற்றுமதி சந்தைகளை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும் மூலப்பொருட்கள், ''மலிவு உழைப்பு''க்கான வளங்களை பெறுவதற்கும் உலகம் முழுமையும் அமெரிக்காவின் உள்ளும் கூட ஆளும் வர்க்கங்கள் மூர்க்கமாகப் போராடி வருகின்றன. டாலரின் கடும் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஜப்பானியர்கள் அமெரிக்காவில் உள்ள தமது நிதி, தொழில்துறை அந்தஸ்தினை துரிதமாக அதிகரித்துக் கொண்டுள்ளனர். கலிபோர்னியாவில் 11 மிகப்பெரிய வங்கிகளில் 5 வங்கிகள் ஜப்பானியரினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அந்த மாநிலத்தில் மட்டும் அவர்களின் வங்கிச் சொத்து 2,500 கோடி டாலர்கள் என நம்பப்படுகிறது. அமெரிக்கக் காங்கிரசில் ஜப்பானிய இறக்குமதிகளுக்கு எதிரான பாதுகாப்பு வாத சட்டஷரத்துக்கு பதிலளிக்கும் வகையில் ஜப்பானிய தொழில் வல்லுநர்களும் நிதியாளர்களும் வெளிநாட்டு உற்பத்தி வசதிகள் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளனர். பாதுகாப்பு வாத நடவடிக்கைகளைத் தாண்டி அமெரிக்காவினுள் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு அவர்கள் தென் கொரியா, தைவான், ஸ்பெயின், மெக்சிகோ ஆகியவற்றை வெளிநாட்டு இணைப்புத்தளங்களாக சார்ந்திருப்பதை அதிகரித்துக் கொண்டுள்ளனர்.

131. ஜப்பானின் பிரமாண்டமான பொருளாதார பலத்துக்கும் அதன் இன்றைய ராணுவ நிலைக்கும் இடையிலான சமனற்ற நிலையும் அதற்கு நேர்மாறாக அமெரிக்காவின் உலகப்பொருளாதார அந்தஸ்தின் வீழ்ச்சிக்கும் அதன் இராணுவ மேலாதிக்க வலிமைக்கும் இடையிலான வேறுபாடும் இருப்பது இரண்டு ஏகாதிபத்தியப் போட்டியாளர்களுக்கிடையிலும் பகைமையை தணிப்பதற்கு பதிலாக அதை உக்கிரப்படுத்துகின்றன. ஜப்பானிய முதலாளித்துவ வர்க்கம் அதனுடைய அரசியல் பொருளாதார அபிலாசைகள்கள் அமெரிக்க நலன்களால் இடைவிடாது விரக்திக்குள்ளாகப் படுகிறது என உணராமல் இருக்க முடியாது இவை இறுதி ஆய்வுகளில் பின்னையதின் ராணுவ பலத்தில் ஆதரிக்கப்படுகின்றது பாரசீக வளைகுடாவில் அமெரிக்க அதிரடிப்படைகளை இறக்கியமை ஈரானை மிரட்டுவதற்கு மட்டுமின்றி மத்திய கிழக்கில் ஜப்பானின் கேந்திரமான எண்ணெய் வழிகள் எக்கணமும் அமெரிக்காவினால் வெட்டப்படும் என்பதை ஜப்பானுக்கு நினைவூட்டவுமேயாகும். இந்நடவடிக்கையானது ஜப்பானிய முதலாளித்துவ வர்க்கத்துக்கு அதன் நாட்டின் கடுமையான மூலப்பொருள் பற்றாக்குறையை நினைவூட்டத்தவறாது. அதன் இன்றைய குறிப்பிட்ட அபிவிருத்திமட்டத்தில் பார்ப்பின் 1941-ல் இருந்ததைக் காட்டிலும் பேராபத்தானது. நீண்டகாலத்திற்கு இத்தகைய ஒரு நிலைமையை ஜப்பானிய முதலாளித்துவ வர்க்கத்தால் சகித்துக் கொள்ள முடியாது

132. ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே தவிர்க்க முடியாத விதத்தில் உக்கிரம் காணும் மோதல் உலக ஏகாதிபத்திய விவகாரங்களில் ஆழமாக ஸ்திரப்பாட்டைக்குலைக்கும் காரணியாக விளங்குகின்றது. இரண்டாம் உலகயுத்தத்தைத் தொடர்ந்து வந்த இரண்டு தசாப்த காலங்களில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கமும், ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான குரோதம் சாந்தப்படுத்தப்பட்டது போலிருந்ததும் உலக வர்த்தகத்தின் விரிவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த போருக்கு பிந்தைய செழுமைக்கான அரசியல் முன் தேவைகளாக விளங்கின. இரண்டாம் உலகயுத்தத்தை உருவாக்கிய அதே பொருளாதார, புவியியல்,

www.padippakam.com



தப்புவழிகள் ஊடாக ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான உறவுகளின் முறிவும், மேலாதிக்கத்தின் வீழ்ச்சியும் ஒரு வெடிப்புமிக்க சமனற்ற புதிய காலப்பகுதியை முன்னறிவிக்கிறது. இவை ஒரு அமைதியானதும் முற்போக்கானதுமான அடிப்படையில் உலகச் சந்தையை ஐக்கியப்படுத்த முடியாத முதலாளித்துவ வர்க்கத்தின் இயலாமையை நன்கு புலப்படுத்தியுள்ளன. உண்மையில மேலே மேற்கோளிட்டுக் காட்டப்பட்ட பொருளாதார வல்லுநரின்படி, அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையேயான மோதுதல் ''1930-ஆம் ஆண்டுகளுக்கு சமமான அனுபவத்தை: நிதிக்குழப்பங்கள், பக்கத்து நாட்டிடம் பிச்சை எடுக்கும் கொள்கைகள் உலகளாவிய மந்தத்தை நோக்கியும். சிலவேளை யுத்தத்தை நோக்கியும் வீழ்ச்சியடையுமாறு அச்சுறுத்தலைக் கொண்டுள்ளது.'' அதே நூல், பக்கம் 82)

133. உலக ஏகாதிபத்திய விவகாரங்களில் ஐரோப்பா இன்னமும் ஒரு பெரும்பாத்திரத்தை வகிக்கிறது. உலகின் பழம் முதலாளித்துவ வர்க்கம், எந்தவிதத்திலும் உலக ஆதிக்கத்துக் கான போராட்டத்தில் இருந்து விலகிக் கொண்டு விடவில்லை. 1992—ல் ஒரு தனி ஐரோப்பிய சந்தையை எல்லைக்கட்டுப்பாடுகள் சுங்கத்துறை இல்லாமலும் முடிந்த மட்டும் தனியொரு நாணயத்துடன் நிறுவும் திட்டங்கள் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும், ஐரோப்பாவுக்கும் இடையே வளர்ச்சி காணும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான குரோதங்களுடன் நெருக்கமாகத் தொடர்புடையன. 32 கோடிமக்களுடன் ஐரோப்பா பெரும் முதலாளித்துவ சந்தையைக் கொண்டுள்ளது. மேலும் ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கம் அந்த உத்தேச 1992 இணைப்பானது. சர்வதேசரீதியில் போட்டி மிக்கதாக தொடர்ந்திருக்க உதவும் எனவும் நம்புகின்றது. அமெரிக்கா ஐரோப்பியர்களுக்கு ஒரு கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளது. கூட்டுச்சந்தையில் அமெரிக்கப்பொருட்களை விலக்கிவிட எடுக்கப்படும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் எதிராக பதிலடி கொடுக்கப்படும் என அச்சுறுத்தியுள்ளது.

134. தனிச் சந்தை எனப்படுவதை உருவாக்கும் திட்டங்கள் தேசிய அரசு முறையை ஒழிப்பதைக் குறிக்காமல் இருப்பது போன்றே ஏகாதிபத்திய அரசுகளுக்கிடையேயான சமாதான உடன்படிக்கைகள் யுத்தத்தை ஒழிப்பதை குறிக்காது இருக்கின்றது. ஐரோப்பிய மக்களின் உண்மையான பொருளாதார இணைப்பு முதலாளித்துவ ஆட்சியின் கீழ் நிறைவேற்றப்பட முடியாது. உண்மையில் ஒரு இணைந்த ஐரோப்பிய சந்தையை உருவாக்குவது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் தவிர்க்க முடியாத விதத்தில் தேசிய குரோதங்களின் ஆழத்தை அம்பலப்படுத்தியதோடு ஒரு இணைந்த முதலாளித்துவ ஐரோப்பாவை உருவாக்க இயலாமையையும் வெளிப்படுத்தியுள்ளது. பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர் ஐரோப்பாவின் தேசிய அரச அமைப்பை தாண்டிச் செல்லும் எல்லா பேச்சுக்களையும் ''பகட்டு—தேவதை'' கதைகளாக அவமானப்படுத்தியுள்ளார். 'ஐரோப்பிய ஐக்கியத்தினை' ஆர்வத்துடன் பிரேரிக்கும் பிரான்ஸ், ஜெர்மனியினால் இது பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தமது சொந்த தேசிய முதலாளித்துவத்துக்கு இது கொணரக்கூடிய நன்மைகளின் கணிப்பீட்டின் அடிப்படையிலேயே தமது நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக தனிச்சந்தைத் திட்டத்தின் பிரதான இலக்கு ஐரோப்பியத் தொழிலாள வர்க்கத்தை உக்கிரமாகச் சுரண்டுவதேயாகும். சமீபத்திய ஸ்வீடிஷ் ஆசியா மற்றும் சுவிஸ் பிரவுன் பொவேரி போன்றவற்றின் இணைப்பு அலைகள் பாரிய அளவிலான வேலை நீக்கங்கள், தொழில் நிலைமை மீதான தாக்குதலுடன் தவிர்க்க

படிப்பகம்

www.padippakam.com



முடியாத விதத்தில் இணைந்துள்ளன. ஐரோப்பாவில் ஒரு கோடியே அறுபது லட்சம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் உள்ளனர். இவர்களில் 1/3பங்கினர் 25-வயதுக்கும் குறைவானவர்கள் ஆவர்.

135. மேலும் ஒவ்வொரு ஐரோப்பிய முதலாளித்துவ வர்க்கமும் தனது நாட்டுத் தொழிலாளர்களைக் காட்டிலும் நல்ல சமூகத் திட்டங்கள், உயர்ந்த மட்ட சம்பளங்கள், வேலை நிலைமைகளைக் கொண்டிருந்தால் தேசிய முதலாளித்துவம் திட்டமிட்டுள்ள தனிச்சந்தைக்குள் போட்டியிட முடியாது என வலியுறுத்தி வருகின்றார்கள். எனவே பெல்ஜியம் அரசாங்கம் எல்லாவித சம்பள ஏற்றங்களையும் தடைசெய்துள்ளது. பணவீக்கம் வீதத்துடன் சம்பளமட்டத்தை இணைக்கும் வாழ்க்கைச் செலவு ஷரத்துக்களை குறைக்க வேண்டுமெனவும் கோரியுள்ளது. டேனிஷ் அரசாங்கம் 1985-ல் வாழ்க்கைச் செலவு போனசுகளை இரண்டு ஆண்டுகளுக்கு இரத்துச் செய்துள்ளது. மற்றும் பாராளுமன்றம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மீதான அனைத்து உடன்படிக்கைகளையும் செல்லுபடியற்றதாகும் சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. மேற்கு ஜெர்மனியில் (ஓராண்டு உடன்படிக்கைகளுக்குப் பதிலாக) தொழிற்சங்கங்கள் பணவீக்க நிலையில் உடன்படிக்கையை பேச்சுவார்த்தைக்கான எவ்வித சரத்துக்கும் இடமில்லாமல் முதல் தடவையாக மூன்றுண்டு சம்பள ஒப்பந்தத்திற்கு உடன்பட்டுள்ளன.

## ஏகாதிபத்தியமும் ஆசிய பசிபிக் கரையும்

136. கடந்த கால் நூற்றுண்டில் ஆசிய பசிபிக் கரையென பேர் பெற்ற பிராந்தியத்தில் முதலாளித்துவம் பரந்தவளர்ச்சி கண்டுள்ளது. இது ஜப்பான், தைவான், தென்கொரியா, ஹாங்காங், சிங்கப்பூர், இந்தோனேஷியா, மலேஷியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. சீனமக்கள் குடியரசும் இந்தப் புவியியல் பிராந்தியத்தில் ஓர் பாகமே ஆகும். இன்று ஆசிய பசிபிக்கரை அபிவிருத்தி பற்றிய முதலாளித்துவ ஆய்வுகளில் இதன் பொருளாதாரமும் உலக முதலாளித்துவ பொருளாதாரத்தில் இதன் பாத்திரம் பற்றியும் சேர்க்கப்பட்டுள்ளதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 1960-1982க்கும் இடையில் சீன உட்பட ஆசிய-பசிபிக் நாடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) உலக உற்பத்தியில் 7.8%-ல் இருந்து 16.4% ஆக உயர்ந்தது. அமெரிக்காவின் மொத்த உற்பத்தியுடன்தொடர்புபடுத்துகையில் ஆசிய-பசிபிக்கின் உற்பத்தி 18%-ல் இருந்து 53.2% ஆக அதிகரித்தது. 1960—85 க்கும் இடையே இப்பிராந்திய உலக ஏற்றுமதியின் பங்கு 7.5%-ல் இருந்து 17% ஆக இரண்டுமடங்குக்கு மேல் அதிகரித்தது. 1965-ல் ஒருங்கிணைந்த ஆசிய-பசிபிக் பொருளாதாரங்கள் 18,300 கோடி டாலர் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தன. இது வட அமெரிக்க மட்டத்திற்கு 75% குறைந்ததாகும். 1983-ல் அவர்களின் மொத்த உற்பத்தி 170,000 கோடி (1.7 டிரில்லியன்) டாலர்களாக உயர்ந்தது. இது வட அமெரிக்க உற்பத்தியைக் காட்டிலும் 50%-ம் ஐரோப்பாவைக் காட்டிலும் 30%-ம் குறைவானதாகும்.

137. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் இருந்து உலகின் அநேக பாகங்களில் முதலாளித்துவம் விரிவடைந்தமையும் ஆசியாவில் பிரம்மாண்டமான முதலாளித்துவ மையங்கள் உருவாகியமையும் ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற லெனினின் வரைவிலக்கணத்தை எவ்வித முரண்பாட்டுக்கும் உள்ளாக்கி விடவில்லை. லெனின் 'ஏகாதிபத்தியத்தில்,

சிறப்பாக எச்சரித்தது போன்று "இந்த போக்கு முதலாளித்துவத்தின் துரித வளர்ச்சியை நீக்கி விடுகின்றதென நம்புவது தவருகும். இது அப்படியல்ல." அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆசிய பசிபிக் நாடுகளை "பாகங்களை இணைக்கும் தளங்கள்" ஆகப்பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக அமெரிக்க செமிகண்டக்டர் (Semiconductor) தொழிலில், ஒருங்கிணைந்த மின்சுற்றுக்களின் மிகவும் சிக்கலான பாகங்களைத் தனது ஆசிய-பசிபிக் வசதி வாய்ப்புக்களுக்கு ஏற்றுமதி செய்கின்றது. அங்கு உழைப்பு— ஆழ்ந்த இணைப்பு வழிமுறைகள் நிறைவேற்றப்படுகின்றன. "உள்ளார்ந்த ஸ்தாபன வர்த்தக" சுழற்சி, முழுமையாக இணைக்கப்பட்ட அலகுகள் திரும்ப அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படுவதுடன் பூர்த்தியடைகிறது. இந்த அபிவிருத்திகளின் பின்னணியில் உள்ள உள்நோக்கம் பெரிதும் தெளிவானது.'செமிகண்டக்டர்'தொழிலைப்பற்றிய ஒரு ஆய்வு குறிப்பிடுவதுபோல்: '1964—1972 காலப்பகுதியில் அமெரிக்கா ஒருங்கிணைந்த, மின்சுற்று நிறுவனங்கள் தூரக்கரையோரங்களுக்கு பகுதி இணைப்புக்கு இடம் பெயர்ந்தமையானது, உழைப்பு-ஆழ்ந்த கட்டங்களைக்கொண்ட ஒருங்கிணைந்த மின்சுற்று உற்பத்தியில் உழைப்புச் செலவைக் குறைப்பதற்கான ஒரு உக்கிரமான நடவடிக்கை ஆகும். தெற்காசிய அபிவிருத்தியடையும் நாடுகளுக்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான பெருமளவிலான ஊதிய செலவின வேறுபாடுகள் 'பகுதிகள் இணைத்தலை' தூரக்கரையோரங்களுக்கு நகர்த்துவதை பெருமளவிலான பொருளாதார ரீதியில் ஊக்குவிக்கின்றது' (சர்வ தேசப் போட்டியில் அமெரிக்க தொழில்துறை, சிஸ்மன் — ரைசன், 1983)

138 ஆசிய—பசிபிக் முதலாளித்துவப் பொருளாதாரங்கள் தொழிலாள வர்க்கத்தை இந்த மிலேச்சத்தனமான சுரண்டலுக்கு உள்ளாக்குவதன் அடிப்படையில் அமைந்துள்ளன. தேசிய முதலாளித்துவ வர்க்கம் சர்வதேச நாணய நிதியத்தினுல் விரும்பப்படும் 'ஏற்றுமதி மூலோபாயத்தை' இராணுவ— போலீஸ் சர்வாதிகாரங்களுடன் பேணுகின்றது. இவை அரச அமைப்புக்களில் வேரோடிய, உண்மையான ஜனநாயகப் புரட்சிகளினுல் ஒரு போதும் அடித்துச் செல்லப்படாத பல அரை நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களை பேணிக்காக்கின்றன. "டிரான்ஸ் நேஷனல்" கூட்டுத் தாபனங்களின் உச்ச சுரண்டலுக்கான களஞ்சியங்களாக தொழிற்படும் வேளையில், இந்த 'குட்டி—ஜப்பானகள்' எனப்படுபவற்றின் பொருளாதாரங்கள் உலக வர்த்தக மாதிரிகளால் கடுமையாகப் பாதிக்கப்படக் கூடியவையாகும். பொருளாதாரப் பின்னடைவு அல்லது பாதுகாப்பு வாத சட்டத்தின் விளைவுகள பெரும் அழிவு நிறைந்ததாக இருக்கும்.

139. ஆசிய பசிபிக்கில் முதலாளித்துவ பரவலாக்கத்தின் முக்கிய அம்சம் இப்பிராந்தியம் முழுமையும் பாட்டாளி வர்க்கத்தின் பிரமாண்டமான வளர்ச்சியாகும். 1950—களில் இருந்து தென்கொரியாவின் நாட்டுப் புறங்களில் இருந்து ஏற்பட்ட தீவிரமான இடம் பெயர்வினுல் தொழிலாள வர்க்கம துரிதமாக வளர்ச்சியடைந்தது. வேலை நிறுத்த அலைகள் தென்கொரியாவை ஆட்டங்காணச் செய்ததோடு ஜெனரல்—சண் –டு—வானை பலவந்தமாக ஓய்வெடுக்கச் செய்தது. இது முதலாளித்துவ ஆய்வாளர் ஒருவரை பின்வருமாறு மதிப்பிடச் செய்தது: 'கடந்த 20 வருடங்களுக்கு மேலாக கொரியத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம்பற்றிய எதிர்பார்ப்புகள் அதிகரிக்கின்றது. தொழிலாளர்களாக மாற்றப்பட்ட விவசாயிகள் நகர்ப்புறங்களில் தொழிற்சாலைகளில் ஜீவியத்தை ஈட்டிக்கொள்ளும் வாய்ப்புக்காக தொடர்ந்து

www.padippakam.com



நன்றியுடையவர்களாக இல்லை. தொழிலாளர்கள் தங்களைச் சுற்றிலும் உற்பத்தி சக்திகள் வியப்பூட்டும் அளவுக்கு மற்றும் நீடித்த அளவு உற்பத்தித் திறன் விஸ்தரிக்கப்பட்டுள்ளதைக் கண்டனர். மக்கள் தொகையின் குறிப்பிடத்தக்க பகுதிகளின் குறிப்பாக, வல்லுநர், தொழில் நுட்பம் மற்றும் நிர்வாகத்துறை தொழிலாளர்கள் மற்றும் முதலின் சொந்தக்காரர்களின் வருமானப் பெருக்கத்தையும் கண்டனர். அதிசரித்த வரும் வருமான வித்தியாசங்களுக்கான சான்று மிகக்குறைவானதேயாகும். ஆனால் 1970—களின் ஆரம்பத்திலிருந்து வருமானப் பங்கீட்டில் குறிப்பிடத்தக்க பாதிப்புக்கான அடையாளத்தை அலுவலக ரீதியான வெளியீடுகூட கொண்டிருக்கிறது. குறிப்பாக, வருமானம் பெறும் பரந்த அளவிலான குழுவினர் மத்தியில் தொழிற்துறை தொழிலாளர்கள் மிகக்குறைந்த கூலியைப் பெறுகின்றனர். (சி. ஹாமில்டன் மற்றும் ஆர். டாண்ட்டர். சர்வதேச விவகார பத்திரிகை) 'தென்கொரியாவில்' வெற்றியின் முரண்பாடுகள்.

(பக்கம் 65)

140. இக்கட்டுரையின் ஆசான்கள் தென்கொரியாவில் முதலாளித்துவத்தின் வெற்றியை நிருபிக்கும் புள்ளி விபரங்களைத் தந்துள்ளனர் இதே சமயம் கொரிய அபிவிருத்திக்கழகத்தின்படி 1980—ல் 5 பேர்களைக்கொண்ட குடும்பம் ஒன்றின் குறைந்தபட்சம் வாழ்க்கைச் செலவு மாதாந்தம் 2,70,000 வோன் ஆகும். 56% தொழிலாளர்கள் மாதம் ஒன்றுக்கு 2,00,000 வோனுக்கும் குறைவாகவே பெறுகிறார்கள். கொரியத் தொழிலாளர்கள், வாரத்துக்கு ஏறக்குறைய 53 மணிநேரம் வேலை செய்கின்றார்கள். சர்வதேச தொழிலாளர் கழகத்தின் (ILO) ஆய்வின்படி, இது வேறு எந்த நாடுகளைக் காட்டிலும் அதிகமானதாகும். எஃகுத்தொழில் துறையில் வேலை நேரங்கள் 12 மணி நேரங்களைக் கொண்டவையாகும். வேலை முறை மாற்றத்தின் போது சில தொழிலாளர்கள் தொடர்ச்சியாக 24 மணி நேரங்களுக்கு வேலை செய்ய வேண்டியது சர்வ சாதாரணமானதாகும். 1985 பாதுகாப்பு நிலைமைகளினால் 1,618 தொழிலாளர்கள் விபத்துக்களில் கொல்லப்பட்டனர்.

141. ஆசியபசிபிக்கின் ஏனைய 'விருத்தியடையும்' பொருளாதாரங்களில் தென்கொரிய நிலைமைகள் பொதுவில் இன்னமும் மிகக்கொடூரமான முறையில் பிரதிபலிக்கின்றன. தென்கொரியாவில் போராட்டங்கள் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளதுபோல், ஒடுக்குமுறை முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டத்தின் முன்னணியில் பாட்டாளி வர்க்கம் வந்து கொண்டுள்ளது. ஆசிய பசிபிக், நிரந்தரப் புரட்சிர கோட்பாட்டிற்கு மாபெரும் வரலாற்று மெய்ப்பித்தலை வழங்கவிருக்கிறது என்பதில் பிரச்சினைக்கே இடமில்லை.

## பின்தங்கிய நாடுகளின் வறுமை

142. பூமியின் மக்கள் தொகையில் பெரும்பான்மையினரின் விவரிக்க முடியாத வறுமையானது, முதலாளித்துவத்தின் மாபெரும் வரலாற்றுக் குற்றத்தை உள்ளடக்கியிருக்கிறது. யுத்தத்தின் பின்னைய செழிப்பின் முக்கிய காலப்பகுதியில் ஆசிய, ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க மக்களின் வாழ்க்கைத் தரத்தை குறிப்பிடத்தக்க அளவு உயர்த்த முதலாளித்துவத்தால் முடியாது போயிற்று. அத்துடன் கடந்த 15 ஆண்டுகளாக சமூக நிலைமைகள் பெருமளவு சீர்கெட்டுப்போயுள்ளன. 'காலனித்துவ ஒழிப்பின்' முதல் நீரோட்டத்தில் தேசிய முதலாளித்துவ வர்க்கம் சுயபூர்த்தி மூலம் செழிப்பு

படிப்பகம்

www.padippakam.com



என்ற பிரமையை வளர்த்ததோடு "இறக்குமதி பதிலீட்டுக் கொள்கையிலும்" ஈடுபட்டது. இவை 'புதிதாக சுதந்திரம்' பெற்ற நாடுகளை ஏகாதிபத்திய சக்திகள் பொருளாதார குரல்வளை நெரிப்பில் இருந்து விடுதலை செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. சுயபூர்த்திக் கொள்கையை ஒரு சோசலிச வடிவமாகவோ அல்லது முதலாளித்துவ தேசியவாதிகளின் ஸ்டாலினிச கூட்டுக்கள் சிடுமூஞ்சித்தனத்துடன் "முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப்பாதை" எனவோ காட்டும் முயற்சிகளும்கூட இடம்பெற்றன. ஆனால் அவர்கள் உருவாக்கிய பகட்டான பிரதாபங்களும் பிரமைகளும் இன்று ஒன்றுகூட மீதமில்லை.

143. 1970-களில் ஏகாதிபத்திய வங்கிகளின் ஊக்குவிப்புடன் பின்தங்கிய நாடுகள் பெற்ற பிரமாண்டமான கடன்கள் திருப்பிச் செலுத்த முடியாத ஒரு கடன் மலையை உண்டு பண்ணியுள்ளன. வங்கிகள் கடன் நெருக்கடிக்கு பதிலளிக்கும் விதமாக கடன் வழங்குவதைக் கடுமையாகக் குறைத்த சமயத்தில் பண்டங்களின் விலைகள் இருபதாம் நூற்றாண்டில் அவற்றின் அதிகக்குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்தமையும், உலக வர்த்தகத்தில் ஸ்தம்பிதமும், பாதுகாப்புவாதக் கொள்கைகளின் அதிகரித்துவந்த அழுத்தங்களும் இந்த ஆட்சியாளர்களைத் தமது வட்டிக்கொடுப்பனவுகளை ஈடு செய்ய வேண்டி, உள்நாட்டு நுகர்வு மேலும் பெருமளவில் வெட்டும் வண்ணம் நெருக்கடியில் தள்ளின. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியினதும் கட்டளைப்படி பின்தங்கிய நாடுகள் தமது இறக்குமதி பதிலீட்டுக்கொள்கைகளை பெருமளவில கைவிட்டு விட்டு, அவற்றினை ஏகாதிபத்தியத்தின் கட்டளைக்கு முற்றாக அடிபணியச் செய்யும் "ஏற்றுமதி மூலோபாயத்தை" கடைப்பிடித்தன




அர்ஜெண்டினாவில் சர்வதேச நாணயநிதியம் ஆணையிடும்
கடுமையான கொள்கைகளுக்கு எதிரான தொழிலாளர்களின் எதிர்ப்பு

படிப்பகம்

www.padippakam.com



144. இறக்குமதி பதிலீட்டில் இருந்து ஏற்றுமதிமதிக்குச் செல்லும் இந்தப் பெயர்ச்சி சர்வதேச வங்கியாளர்களால் 'சீராக்கங்கள்' என நாசூக்காக அழைக்கப்பட்டது. ஆனால் உலக வங்கி சமீபத்தில் ஒத்துக்கொண்டது போல் சீராக்கங்கள்' சிலநாடுகளுக்கு-குறிப்பாக உபசகாரா ஆப்பிரிக்காவுக்கு பெருமளவில் கடன்பளுவில் மூழ்கிப்போனவற்றிற்கு உண்மையில் ஆபத்தை எதிர்நோக்கியிருத்தலைக் காட்டிலும் நீண்ட பாதை என்பதை நிரூபித்துள்ளன. உரிய நிபந்தனைகளின் அடிப்படையில் அவசியமான வளங்கள் இல்லாத இடத்து, இந்நாடுகள் கல்வி, சுகாதார சேவைகள், சத்துணவு வேலைத் திட்டங்களையும், முன்னேற்றகரமான நீர்வசதிகளையும் ஏழைகளுக்கான இருப்பிடத்தையும் பராமரிக்க கஷ்டப்படும் விஸ்தரிப்பது என்பது ஒருபுறம் இருக்கட்டும்.* (உலக வங்கி ஆண்டறிக்கை—1987, பக்கம்—15) லத்தீன் அமெரிக்காவில் சராசரி தொழிலாளி 1970-ஐக் காட்டிலும் தினசரி குறைந்த கலோரிகளையே உட்கொள்கிறர். ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே அத்தியாவசியமான உணவினை உட்கொள்கின்றது. எனமதிப்பிடப்பட்டுள்ளது குழந்தை மரண வீதம் பெருமளவு அதிகரித்துள்ளது. 1986—ல் தலா வருமானம் 1980—மட்டத்துக்குக் கீழேயே இருந்தது 1970—களின் காட்டிக்கொடுப்புகளுக்கும் தோல்விகளுக்கு லத்தின் அமெரிக்கத் தொழிலாள வர்க்கம் செலுத்தும் விலை இதுவே.

145. உலக வங்கியினால் குறிப்பிடப்பட்ட அத்தியாவசிய சேவைகளிலும் வசதிகளிலும் வேலைத்திட்டங்களிலும் மேற்கொண்டு ஏற்படும் வீழ்ச்சியின் தாக்கங்களின் தாத்பரியத்தை பின் தங்கிய நாடுகளின் 1985— ஆம் ஆண்டின் தலா மொத்த தேசிய உற்பத்தி வெளிவாய் எடுத்துக்காட்டுகிறது. புருண்டியின் தலா மொத்த தேசிய உற்பத்தி 230 டாலர், எத்தியோப்பியா 110 டாலர், மடகாஸ்கர் 240 டாலர், சயிரே 170 டாலர், சோமாலியா 280 டாலர், மாலவி 170 டாலர், பர்க்கினோ பாசோ 150 டாலர், கினி—பிசா 180 டாலர், பங்களாதேஷ்—150 டாலர், பர்மா 190 டாலர், இந்தியா 270 டாலர். இந்தியா ராஜீவ்காந்தியின் ஆட்சியின் கீழ் ஏற்றுமதி மூலோபாயத்திற்கு ஆர்வத்தோடு திசை திரும்பியது இதனுடைய பொருளாதார அபிவிருத்தியானது ஏகாதிபத்தியத்தின் ஒட்டுண்ணித்தனத்தினதும் வரலாற்றுத்தீவால் தன்மையினதும் மிகவும் துல்லியமான நிருபனத்தை வழங்குகிறது

1950—85க்கு இடையே விவசாயத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உண்மையான தலா உற்பத்தியின் அதிகரிப்பு 0 0074% மட்டுமே ஆகும்! பம்பாயில் பிரசுரமாகும் 'எகனமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லி' இந்தியப் பொருளாதாரத்தின் முழு அபிவிருத்தியையும் அளவீடு செய்கையில் ''வளர்ச்சி பற்றுக்குறையானது அத்தோடு ஜனத்தொகையின் பெருக்கத்தினால் இதன் பெரும்பகுதி நடுநிலைப்படுத்தப்பட்டது கடன் வாங்கல்களால் ஏற்பட்ட அபிவிருத்தியானது; கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குப் போதுமான நிதிகளை உருவாக்காததோடு கடன் சுமையையும் அதிகரிக்கின்றது. பற்றுக்குறை நிதியீட்டங்கள் பொருளாதார பலத்தை மட்டும் அல்லாமல் அரசியல் உறுதிப்பாடற்ற நிலையையும் உண்டுபண்ணும் பணவீக்கத் தாக்கத்தினை சிருஷ்டிக்கின்றது. பிராந்திய, மாகாண சமத்துவமின்மை அதிகரித்து அரசியல் ஸ்திரமற்ற நிலை உருவாகின்றது. இவை கடினமான பிரச்சினைகள் அத்துடன் இவற்றிற்கு தீர்வுகள் தென்படவே இல்லை. இந்தியா அனேகமாக இவை எல்லாவற்றையுமே முதுகில் சுமந்த வண்ணம் 21 ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கிறது. (ஜனவரி 2—9, 1988—பக்கம் 50)

www.padippakam.com


146. லெனினின் ஆய்வுகளும் வரலாற்று தீர்க்க தரிசனங்களும் பின் தங்கிய நாடுகளினது மக்களின் பயங்கரமான துன்பங்கள் மூலமும் ஊர்ஜிதப் படுத்தப்பட்டுள்ளது. 'தொழிலதுறையிலிருந்து எங்கும் இன்று பயங்கரமாகப் பின்தங்கியிருக்கும் விவசாயத்தைமுதலாளித்துவத்தால வளர்ந்தோங்கச்செய்ய முடியுமானால், வியக்கத்தகக தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட்டிருப்பினும் எங்கும் இன்னும் அரைப்பட்டினியாகவும் ஏழ்மையுற்றும் வாழ்கின்ற மக்கள் பெருந்திரளினரின் வாழ்க்கைத் தரத்தை முதலாளித்துவத்தால் உயர்த்த முடியுமானால், மூலதனத்தின் உன்னத வளர்ச்சி பற்றிய பேச்சுக்கே இடம் இருக்காது என்பதைக் கூறத்தேவையில்லை. இந்த 'வாதம்' முதலாளித்துவத்தின் குட்டி முதலாளித்துவ விமர்சகர்களால் அடிக்கடி முன் வைக்கப்படுகிறது. ஆனால் முதலாளித்துவம் இவற்றைச் செய்திருந்தால் அது முதலாளித்துவமாக இருக்க முடியாது. ஏனெனில் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியும் மக்கள் பெருந்திரளினரது அரைப்பட்டினி வாழ்க்கை நிலையுமாகிய இவை இரண்டும் இந்த உற்பத்தி முறைக்குரிய அடிப்படையான, தவிர்க்க முடியாத நிலைமைகளாகவும் இருப்பவை. முதலாளித்துவம் முதலாளித்துவமாகவே இருக்கிறவரை, உபரி மூலதனமானது அந்த நாட்டின் மக்கள் பெருந்திரளினரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பயன்படுத்தப்படமாட்டாது, ஏனென்றால் இது முதலாளிகளுடைய லாபங்களைச் சரிந்து விழச் செய்வதாகி விடும்; லாபங்களை அதிகமாக்கும் பொருட்டு பின்தங்கிய நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்வதற்கே உபரி மூலதனம் பயன்படுத்தப்படும்.' (ஏகாதிபத்தியம்) எனவே சோலிசப் புரட்சி மூலம் ஏகாதிபத்தியத்தைத் தூக்கி வீசுவதிலே மட்டுமே தீர்வு தங்கியுள்ளது. பின்தங்கிய நாடுகளின் மக்கள் இம்முடிவினை நோக்கியே பிடிவாதமாக தள்ளப்பட்டுள்ளார்கள்.

## உலகக் கடனின் பெருக்கம்

147. கடன் பெருக்கமானது, பின்தங்கிய நாடுகளின் தரித்திர நிலையில் ஒருமைய பாத்திரத்தை வகுத்திருப்பதோடு உலகப்பொருளாதார நெருக்கடிக்கு ஒரு மைய மூலமாகவும் விளங்குகின்றது 1973—75 உலகப்பொருளாதாரப் பின்னடைவிற்கு பிந்திய ஒரு தசாப்தகாலம், உலக நிதிக்கடனில் வியக்கத்தக்க பெருக்கத்தினால் குணாம்சப்படுத்தப்பட்டிருந்தது அனைத்துலக மூலதனத்தின் அசாதாரமான நகர்வினால் இதற்கு மேலும் எண்ணெய் வார்க்கப்பட்டது விரைவானது பெரிய வகைப்பட்டதுமான ஆதாயத்தைத் தேடி, எந்தவிதமான முதலீட்டினையும் தேடி பேரளவிலான தொகைகள் பூகோளத்தை ஊடறுத்துச் செல்கின்றன மூலதனத்தின் இத்தகைய ஒரு வெறிபிடித்த இயக்கம், வரலாற்றில் முன்னொருபோதும் இருநததில்லை. சர்வதேச நாணய மாற்று வீதங்களில் ஏற்படும் நிமிட நேர மாற்றங்கள் பூகோளத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு பெருமளவு நிதிச் சொத்துக்களை மாற்றுவதற்கான காரணமாக அமைந்துள்ளன. 1969-ல் அமெரிக்க அரசுகளில் 100 கோடி டாலருக்கும் குறைவாக இருந்த நாளாந்த அந்நியச் செலாவணி வியாபாரம் 1983-ல் 3400 கோடி டாலராக, உயர்ந்துள்ளது. உலக ரீதியாக இது 1979—ல் 7500 கோடி டாலரிலிருந்து 20,000 கோடி டாலருக்கு மேலாக 1986-ல் உயர்ந்தது.

148. இந்த வெறிபிடித்த நடவடிக்கை மனித இனத்தின் உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்திக்கு எந்த ஒரு பங்களிப்பையும் செய்யவில்லை மாறாக லாபத்துக்கான ஓட்டமானது, அபரிதமான சந்தைகளையும், சர்வதேச தேசிய கடன்களின் பிரமாண்டமான மாளிகைகளையும் சிருஷ்டித்துள்ளது

www.padippakam.com



உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் வெறிபிடித்த போட்டியானது, நிதி, அடிப்படைத் தொழில்துறை மற்றும் பண்டங்களில் சக்திக்கு மீறிய அளவை உருவாக்கியுள்ளது. 1970-களின் எண்ணெய் செழிப்பு முதலீட்டில் இருந்து 1980-களின் எண்ணெய் 'பிம்பம்' வரையிலான இடைமருவல் இந்தத் தொடர்ச்சிக்கான நல்லதோர் எடுத்துக் காட்டாகும் அளவுக்கு மீறிய விதத்தில் உற்பத்தி செய்த இந்த லாபத்துக்கான அராஜக ஓட்டமானது, இன்று ஆலைகள் மூடல், மற்றும் பேரளவிலான வேலை நீக்கங்கள் முதலான பாரம்பரிய முதலாளித்துவ தொழில் நுட்பங்கள் ஊடாக இதன் அழிவினை வேண்டி நிற்கிறது. இந்த நிகழ்வுப்போக்கானது, அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் எஃகுத் தொழிலை ஏற்கனவே நாசமாக்கி விட்டது. மோட்டார் தொழிலிலும் தசாப்தம் முழுமையும் இப்போக்கு வளர்ந்து வருவதோடு 1990 களுக்கும் தொடரும்

149. உலகப் பொருளாதாரத்தின் மேல் ஒரு இருண்ட நிழல் போன்ற இந்த கடன் வலைகளும் அவற்றின் தாக்கங்களும் பெரும் அழிவுகரமானவை என்பதை சகல முதலாளித்துவ பொருளியலாளர்களும் அங்கீகரித்துள்ளார்கள். அனைத்து நாடுகளும் கடன்மட்டங்களால் அடியோடு திவாலடைந்துள்ளன. அவை வெகு ஜனங்களைப் பட்டினி போடுவதன் மூலம் ஏற்றுமதிகளைப் பெருமளவில் அதிகரிப்பதனூடாகவே அரைகுறையாகவாவது திருப்பிச் செலுத்தப்பட முடியும். 1982-ல் வெளிநாட்டுக்கடன் ஏற்றுமதிகளின் (மீளக்கொடுப்பனவு) நூறுவீதத்தினை ஏற்கனவே எட்டியுள்ளது அர்ஜெண்டினாவில் 179% ஐயும் மெக்சிகோவில் 129% ஐயும் பிரேசிலில் 122% ஐயும் வெனிசுலாவில் 95% ஐயும் பிலிப்பைன்சில் 91% ஐயும் எட்டிற்று. அனைத்து கடன்பட்ட குறைவளர்ச்சி அடைந்த நாடுகளின் கடனுக்கும் ஏற்றுமதிக்கும் இடையிலான விகிதாச்சாரம் 1987-ல் 132 2% ஆக இருந்து 1986-ல் 179.5% ஆக அதிகரித்தது. கடந்த தசாப்தத்தில் குறை வளர்ச்சியடைந்த கடனாளி நாடுகளில் கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதாச்சாரம் 1978 ல் 25.6% ஆகவும் 1982-ல் 33.8% ஆகவும் இருந்து 1986-ல் 40% ஆக அதிகரித்தது. தலா அடிப்படையில் பார்க்குமிடத்து லத்தின் அமெரிக்க நாடுகளின் கடன் மட்டம் ஈடாட்டம் கண்டு வருகிறது. இது அர்ஜெண்டினாவில் 1662 டாலர்கள்; பொலிவியாவில் 622 டாலர்கள்; பிரேசிலில 791 டாலர்கள் சிலியில் 1740 டாலர்கள்; கோஸ்டாரிகாவில் 1615 டாலர்கள்; மெக்சிகோவில் 1,261 டாலர்; மற்றும் வெனிசுலாவில் 2,000 டாலர்கள்.

150. அமெரிக்காவின் உள்ளே உள்ள கடன் புள்ளி விபரங்கள் அமெரிக்க முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த அழுகிய நிலையை அம்பலப்படுத்துகின்றது. 1970-ல் 91 400 கோடி டாலர்களாக இருந்த கூட்டாட்சிக்கடன் 1987-ல் 1,84,100 கோடி டாலர்களாக அல்லது மொத்ததேசிய உற்பத்தியில 37% ஆக அதிகரித்துள்ளது. கடன்களின் மீதான வட்டி 1975-ன் 2,320 கோடி டாலர்களில் இருந்து 1979-ல் 4,260 கோடி டாலர்களுக்கும் 1985-ல் 12,940 கோடி டாலர்களுக்கும அல்லது வரவு செலவுத்திட்டத்தில் 13.7% ஆகவும்உயர்ந்தது. 1980-ல 1,60 000 கோடி டாலர்களாக இருந்த அரசாங்க, தனியார் கடன்கள் 1980-ல் 8,00,000 கோடி டாலர்களாக அதிகரித்தது. 'கார்ப்பரேட்' கடனின் பெருக்கமானது. அமெரிக்க வர்த்தகத்திற்கு முழு அடிப்படையினதும் தொறுங்கும் தன்மையை அம்பலப்படுத்துவதுடன், இது முதலாளித்துவத்தின் தொழிற்பாட்டுக்குஎதிரான குற்றச்சாட்டையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது. லாபத்துக்கான ஓட்டமானது, உற்பத்தியின் போக்கினையே கீழறுத்து பேராபத்தான அழிவு நெருக்கடிக்கு தளம் அமைக்கின்றது.

151. அமெரிக்கத் தொழில்துறையின் புணரமைப்பினை முதலாளித்துவப் பத்திரிகைகள் உலகச் சந்தையில் அமெரிக்காவின் போட்டியிடும் தன்மையின் ஒரு மறுபிறப்பு எனக் கொண்டாடின உண்மையில் அது வளங்களை உதவாக் கரையான விதத்தில் வீண விரயப் செய்வதையே குறிக்கின்றது. 1980-களின் இணைப்புக்கள் தொழிலாளவர்க்கத்தை பலவீனப்படுத்த வதையும் சுரண்டலின் வீதத்தினைத் தீவிரமாக்கவும், லாபவீதத்தல் சரிவினை ஈடுகட்டுவதையும் மைய இலக்குகளாகக் கொண்டிருந்தன. வங்கிகளும் தரகர் இல்லங்களும் இந்த 'இணைப்பு வைத்தியம்' பிரமாண்டமான காசுத லாபங்களை சிருஷ்டித்தன என்பதில் உண்மையில் அக்கறைகாட்டவில்லை. 1980-க்கு முன்னர் இணைப்புக்கு 100 கோடி டாலர்கள் செலவினை எடுத்த 12 இணைப்புகள் மட்டுமே இடம் பெற்றன. ஆனால் 1980—1985-க்கு இடையில் அவை 45 ஆக இருந்தன. அத்தகைய பலகோடிடாலர்கள் மதிப்புடைய இணைப்புக்கள் 1985-ல் 25ஆகவும் 1986-ல் 33 ஆகவும் இடம் பெற்றன. நாலாயிரம் நிறுவனங்கள் 1986-ல் புணர மைப்புக்காக 20,000 கோடி டாலர்கள் செலவழித்தன. 1983—க்கும் 1987-க்கும் இடையில் 49,000 கோடி டாலர்கள் மதிப்புடைய 12,200 கம்பெனிகள் கைமாறின.

152. இந்தச் சொத்துக்களின் மறுசலைப்பானது, தவிர்க்க முடியாத விதத்தில் பிரம்மாண்டமான கடன்களை உள்ளடக்கிக் கொண்டது. உதாரணமாக கல்ஃப்பை (GULF) சுவீகரிக்கும் ஆர்கோவின் (ARCO) தோல்வியில் முடிந்த முயற்சிக்கு 1,200 கோடி டாலர்கள். டி. பூன்பிச்கன்சின் டாலர்கள் கல்ஃப் புடனுடன தபது இணைப்பை நித்யீட்டம் செய்ய சோகலுக்கு (SOCAL) 1 400 கோடி டாலர்கள் போன்றன. இந்த இணைப்பு வைத்தியத்தின் விளை 'கார்ப்பரேட்' கடன் வான் அளவுக்கு உயர்ந்தது. 1950-ல் அமெரிக்கக்கூட்டுத் தாபனங்கள் அவை வட்டியாகச் செலுத்திய ஒவ்வொரு டாலருக்கும் 43 டாலர் களை வைத்திருந்தன. 1982—ல் இருந்து சொத்துக்களுக்கும் வட்டிக்கும் இடையிலான விகிதாச்சாரம் 4-க்கு ஒன்றாக வீழ்ச்சிகண்டது. 1983—ல் கடன் சுமார் 6,000 கோடி டாலர்களாலும் (Equity) சாதாரண பங்கு 3 000 கோடி டாலர்களாலும் அதிகரித்தது 1984—ல் புதிய கார்ப்பரேட் கடன்கள் 16 900 கோடி டாலர்களாக அதிகரித்த வேளையில் Equity 7,800 கோடி டாலர்களால் வீழ்ச்சிகண்டது. 1985—ல் கடன் மற்றுமோர் 1,[illegible] கோடி டாலர்களால் அதிகரித்தது, பெரும்பாலான தொழிற்சாலைகளில் இலாபங்கள் நிலையான வட்டிகளையும், முன்னுரிமைப்பங்கு லாபக் கட்டணங்களையும் வழங்கப் போது மானதாக இல்லை. கடனின் அளவு தொடர்ச்சியாக அதிகரித்து வந்த வேளையில் இதன் கால எல்லை தொடர்ந்து குறுகிக்கொண்டே வந்தது. 1976-ல் ஒரு வருடத்திற்கு குறைந்த குறுகிய காலக்கடன்கள் 4,000 கோடி டாலர்களில் இருந்து 1984—ல் சுமார் 1,000 கோடி டாலர்களாக அதிகரித்தன. 1985—அளவில் வரிவிதிப்புக்கு முன்னைய 47% ஆன லாபம் கடன் சேவைக்குச் சென்றது. கடனில் அரைப்பங்குக்கு மேல் குறுகிய காலக் கடன்களாக விளங்கியது. கடனின் தரத்தைப் பொறுத்தமட்டில் 1985-ல் சகல புதிய கார்ப்பரேட் விநியோகங்களிலும் 25% ஐ மதிப்பற்ற கடன் பத்திரங்கள் கொண்டிருந்தன.

153. நின்றுபிடிக்க முடியாத தன்மையுடைய கடனின் பிரம்மாண்டமான கட்டமைப்பு மிகத்தெளிவானதாகும். பெரிதும் அச்சத்திற்குரியதும் ஆனால் பொருளாதாரப் பின்னடைவின் தவிர்க்க முடியாத தாக்கமானது முழு அமைப்பின் மீதும் தாங்கமுடியாத சுமையைத் திணிப்பதோடு, கார்ப்பரேட் திவால்களின் சங்கிலித் தொடர்வினைகளால் அச்சுறுத்துகின்றது மேலும் 65 ஆண்டுகளுக்குமுன் டிராட்ஸ்கி குறிப்பிட்டதைப்போல், போலிமூலதனத்தின் பெருக்க

www.padippakam.com



மானது, முதலாளித்துவப் பொருளாதாரத்தின் திவாலைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். கோடான கோடி கடன்களும் ஒன்றில் உயிர்வாழ்வுக்காக மறைந்துவிட்ட அல்லது இன்னமும் சிருஷ்டிக்கப்படவுள்ள மூலதனத்தின் மீதான கோரிக்கைகளைபிரதிநிதித்துவம் செய்கின்றன இன்னும் உயிரோடில்லாத மூலதனத்திலிருந்து எதனையும் கறந்தெடுக்க முடியாது. உயிர்வாழும் உழைப்பிலிருந்தே — தொழிலாள வர்க்கத்திடமிருந்தே கடனைத் தாங்கிப் பிடிப்பதற்கான அந்த மூலதனம் பெறப்பட்டாக வேண்டும். அதனை வேலை செய்பவர்களை உக்கிரமாகச் சுரண்டுவதன் ஊடாகவும் அதே சமயத்தில் தேசிய வருமானத்தில் தொழிலாளர்களின் பங்கினைக் குறைப்பதன் மூலமே பூர்த்தி செய்ய முடியும்.

154. இக்கொள்கையை அமல்செய்வதானது, தொழிலாளர் இயக்கத்தில் உள்ள முதலாளி வர்க்க ஏஜெண்டுகளின் ஒத்துழைப்பிலேயே முற்றிலும் தங்கி உள்ளது. ஆனால் இந்தத் துரோகிகள், தமது விருப்பங்கள் இருந்த போதிலும் இப்பணிக்குச் சமமாக நிரூபிக்க முடியாதவர்களாவர். இலாப முறையின் முடிவுகளுக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் கிளர்ச்சியானது, முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியின் தவிர்க்க முடியாத ஒரு பின் விளைவாகும். அந்தக் கிளர்ச்சியைப் புரட்சிகர வழியில் வழி நடாத்துவது நான்காம் அகிலத்தின் வரலாற்றுப் பொறுப்பாக இருந்து வருகின்றது.

## ஏகாதிபத்திய யுத்தத்திற்கெதிரான போராட்டம்

155. தேசிய அரச முறையின் வரையறைகளுக்கு எதிரான உலகப் பொருளாதாரத்தின் உற்பத்தி சக்திகளின் கிளர்ச்சியானது, மனித இனத்துக்கு சோசலிசமா அல்லது காட்டு மிராண்டித்தனமா என்ற பதிலீட்டை வழங்குகின்றது. இந்நூற்றாண்டில் இரு தடவைகள் 1914—1918-லும் மீண்டும் 1939 -1945-லும் கோடானு கோடி மனிதர்களை நாசமாக்கிய இராணுவப் பேரழிவுகளுக்குள் ஏகாதிபத்தியம் மனித இனத்தை மூழ்கடித்தது. அத்தோடு கடந்த நான்கு தசாப்தகால ''சமாதானத்தின்'' போது ஏகாதிபத்தியம் பூகோளத்தின் மீது கொண்டிருந்த போர்த்தாக்கம் எண்ணற்ற ''சிறிய யுத்தங்களுக்'' காரணமாகியது. இவற்றில் மேலும் பலலட்சம் பேர் அழிந்தனர். இன்று அணு ஆயுதங்களின் இருப்புடன், உலகச் சந்தையை மறுபங்கீடு செய்வதற்கான மற்றொரு யுத்தம் எனும்போது அது மனித இனத்தின் நாகரிகத்தின் மரணத்தையே குறிக்கின்றது. உலக வளங்களின் பெரும்பாகம் அழிவுச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கே வீணடிக்கப்படுகின்றது. 197?-ல் 30,000 கோடி டாலர்களாக இருந்த அனைத்துலக ஆயுத செலவீனங்கள் இன்று 1,00,000 கோடி டாலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளது.

156. ஒன்றில் தொழிலாள் வர்க்கம் உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசுக்கும் இடையேயான இந்த முரண்பாட்டினை, முதலாளித்துவ வர்க்கத்தினைத் தூக்கி வீசி சமூக உடமையின் அடிப்படையில் முழு பூகோளத்தினதும் உற்பத்தி சக்திகளை மறுசீரமைப்புச் செய்வதன் மூலம் ஒரு முற்போக்கு பாணியில் தீர்த்துவைக்கலாம். அல்லது முதலாளித்துவம் தனது சொந்தத் தீர்வுகள் மூலம் உற்பத்தி சக்திகளை பேரழிவுக்கு உள்ளாக்குவதன் மூலமும் மனித இனத்தை அழிப்பதன் மூலமும் தீர்வு காண முயலும். முதலாம் உலக யுத்தத்துக்கான அடிப்படைக் காரணமாக டிராட்ஸ்கி குறிப்பிட்ட விளக்கம் எந்தவொரு எதிர்கால யுத்தத்துக்கும் செல்லத்தக்கதான மூலவிளக்கமாக உள்ளது: 'இன்றைய இரத்தம் தோய்ந்த மோதுதல், தேசிய பாதுகாப்புக்கான

ஒரு நடவடிக்கை என்ற சகல பேச்சுக்களும் ஒன்றில் பாசாங்கானது அல்லது கண்மூடித்தனமானது. மாருக யுத்தத்தின் நிச புறநிலே முக்கியத்துவமானது இன்றைய தேசியப் பொருளாதார மத்திய நிலேயங்களின சரிவும, அதற்குப் பிரதியீடாக ஒரு உலகப் பொருளாதாரத்தை பதிலீடு செய்வதுமேயாகும். ஆனல் ஏகாதிபத்தியத்தின் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கங்கள் பிரேரிக்கும்வழிகள் சகல மனிதஇன உற்பத்தியாளர்களதும் புத்திசாதுரியமான ஒழுங்கமைக்கப்பட்ட வழிகளூடாக அல்லாமல் வெற்றி ஈட்டிய நாட்டின் முதலாளித்துவ வர்க்கம் உலகப் பொருளாதார முறையைத் தாம் சுரண்டு வதன் மூலமாகவே; அந்நாடு இந்த யுத்தத்திஞல் ஒரு பெரும் சக்தி என்ற நிலேயில் இருந்து ஒரு உலக சக்தியாக மாற்றம்செய்யப்பட உள்ளது.

(யுத்தமும் அனேத்துலகமும்)


157. தனது பொருளாதார மேலாதிக்க இழப்புக்கள் இருந்த போதிலும் அமெரிக்கா தொடர்ந்து இராணுவ ரீதியாக மிகச் சக்திவாய்ந்த ஏகாதிபத்திய நாடாக இருப்பதோடு, உலக போலீஸ்காரன் பாத்திரத்தையும் தனக்கு ஒதுக்கிக் கொண்டுள்ளது ஆனல் 1945-ல் 'அமெரிக்க நூற்றுண்டு' எனப்பட்ட தன் தொடக்கத்தில் நிலவிய நிலேமைகள் பெருமளவில மாற்றப்பட்டுள்ளது. பெரும் முதலாளித்துவ நாடுகளுக்கிடையே ஒருசமயம் தனதுவார்த்தையையே "சட்டம்" ஆக்கிய பொருளாதார முதன்மையை இது இழந்து விட்டது என்ற உண்மையானது, அமெரிக்காவை முன்பைவிட தனது இராணுவ பலத்தின் காட்டுமிராண்டித்தனமான சக்தியில் தங்கியிருக்கும்படி நிர்ப்பந்தித்துள்ளது. டிராட்ஸ்கியினது மற்றுமோர் முன்னறிவிப்பு ஊர்ஜிதமாகப் போகின்றது: "உலகம் பிளவுபட்டுள்ளது? இது கட்டாயம் மீளவும் பிளவுப்படுத்தப்படும். ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் இது 'ஐரோப்பாவை அணிதிரட்டும்' பிரச்சனேயாக விளங்கியது. அமெரிக்கா உலகனேக்கட்டாயம் 'அணிதிரட்ட' வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்திய எரிமலேயின் வெடிப்பில் நேருக்கு நேர் சந்திக்கும்படி வரலாறு மனித இனத்தைக் கொண்டு வந்துள்ளது." (யுத்தமும் நான்காம் அகிலமும் [1934])

158 யுத்தத்துக்கான அமெரிக்காவின் உந்துதல் அதன் ஏகாதிபத்திய போட்டியாளர்களுக்கு எதிராகக் கிளப்பப்பட்டுள்ளது; லத்தின் அமெரிக்கா வினதும் உலகினதும் ஒ. க்கப்படும் மக்களின் புரட்சிகர எழுச்சிக்கு எதிராக வும் அது திருப்பப்பட்டுள்ளது. மற்றும் ஏகாதிபத்தியத்தின் நேரடிச் சுரண்ட லில் இருந்து 1/6 பங்கு பூமிப் பரப்பை 1917-ல் நீக்கிய சோவியத் யூனியனின் உருவாக்கத்திற்கு எதிராகவும் கிளப்பப்பட்டுள்ளது.

159. கிளோஸ்விட்ஸ் குறிப்பிட்டது போல் யுத்தம் என்பது வேறுவழி களில் அரசியலேத் தொடர்வதாகும். இவ்வாருக யுத்தம் சம்பந்தமான எமது நிலேப்பாடு அதைத் தொடுத்து வரும் அரச சக்திகளின் வர்க்கப் பண்பிஞல் நிர்ணயம் செய்யப்படுகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திஞல் நடத்தப்படும் எந்த ஒரு யுத்தத்திலும் "முதல் வேட்டினே" யார் சுடுகிருர்கள் என்பதைப்பற்றி சட்டை செய்யாமல் 'வொர்க்கர்ஸ் லீக்'கின் நிலேப்பாடு 'ஒரு புரட்சிகரத் தோற்கடிப்பு வாதமேயாகும்'. ஏகாதிபத்திய நாடுகளில் தொழிற்படும் அனேத்துலகக்குழுவின் பகுதிகள் 'தமது' நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் யுத்த தந்திரம் தொடர்பாக இதே போக்கையே கடைப் பிடிக்கும். ஜப்பான், ஜெர்மனி, அமெரிக்கா இவற்றுக்கிடையேயான புதிய யுத்தம் உலக மேலாதிக்கத்தின் பொருட்டு வேறுபட்ட ஏகாதி பத்திய மாஃபிய தேசிய குழுக்களுக்கு இடையே நடைபெறும் ஒரு

www.padippakam.com





1983-ல் அமெரிக்கத் துருப்புக்கள் கிரெனடாவை ஆக்கிரமித்தல்

போரினையே குறிக்கும். பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான நலன்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்துலகக்குழு அத்தகைய ஒரு யுத்தத்தின் தன்மையை சளைக்காது அம்பலபபடுத்தி "தேசிய பாதுகாப்புக்" கொள்கை என்பது தொழிலாள வர்கத்தை ஏமாற்றும் மோசடியென அது எதிர்க்கும். புரட்சிகர தொழிலாளர்கள் யுத்தத்துக்கு எதிராக தமது வர்க்கத்தை அணிதிரட்டப் போராடியாக வேண்டும். இம்முயற்சிகளுக்கு இடையேயும் யுத்தம் வெடிக்குமானால் வர்க்க நனவுள்ள முன்னணிப்படை தமது சொந்த முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடிக்கக் கட்டாயம செயற்பட வேண்டும. அத்தோடு யுத்த வெறியர்களைத் தூக்கி வீசும் பொருட்டு போர்க்கால உக்கிரம் கண்ட அரசியல் முரண்பாடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

www.padippakam.com


**160** முழு பூகோளத்தின் மீது ஏகாதிபத்தியம் கொண்டுள்ள மேலாதிக்கம் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் பண்பாட்டு அபிவிருத்தியில் பெரும் தடைக்கல்லாக அமைந்துள்ளது. அரச எல்லைகளை உடைத்தெறிவதும் ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்காவை பலம் வாய்ந்த இணைப்புக்களுள் கொண்டு வருவதன் மூலம், ஒடுக்கப்படும் மக்களை ஐக்கியப்படுத்துவதும் உண்மையான முன்னேற்றத்துக்கான இன்றியமையாத முன் நிபந்தனைகளாகும். ஆனால் இந்த மிகப்பிரமாண்டமான வரலாற்றுப் பணியினை பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் வெகு ஜனங்களை அணிதிரட்டுவதன் ஊடாக மட்டுமே யார்த்தமாக்க முடியும். இதே சமயம் பின்தங்கிய நாடுகளின் முதலாளித்துவ கும்பல்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைச் சீர்குலைக்கவும், பிராந்தியத்தினை ஐக்கியமற்ற சழுப்பநிலையில் வைத்திருக்கவும் தமது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்கின்றனர். அவர்களது தலையாய கருவி தேசிய வாதம்—இது ஒடுக்கப்படும் மக்களின் நியாயமான ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாதத்தின் விரகதியால் ஒரு நச்சுத்தன்மையான விஷ பொருளாகும். ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையேயான ரத்தம்தோய்ந்த மோதுதல போன்ற இரண்டு ஒடுக்கப்படும் நாடுகளுக்கு இடையேயான சகோதரரைக் கொல்லும் யுத்தங்கள், அரசியல், பொருளாதார ஐக்கியத்துக்கான வரலாற்று முயற்சிகளின் உருக்குலைக்கப்பட்ட வெளிப்பாடுகள் ஆகும். மேலும் இந்த யுத்தம் கடந்த காலத்தில் இந்தியா, பாக்கிஸ்தானுக்கிடையேயான யுத்தத்தைப் போன்று வெகுஜனங்களை அரசஎந்திரத்துடன் கட்டிப்போடும் முதலாளித்துவ வாக்கத்தின் தேவைக்கு சேவை செய்கின்றது. இவ்வாறான யுத்தங்களில் தமது சொந்த முதலாளித்துவத்தின் கொள்கைகளுக்கு பூரணமாக எதிர்ப்பு தெரிவிப்பதே தொழிலாள வர்க்க கடமையாகும்.

**161.** சீரழிந்த ஒன்றாக இருந்தபோதிலும் சோவியத் யூனியனை நாம் ஒரு தொழிலாளர் அரசாகக் கணிக்கும் வரையில் அமெரிக்காவாலோ அல்லது வேறு எந்த ஏகாதிபத்திய சக்திகளாலோ அதற்கு எதிராகத் தாக்குதல் இடம்பெறும் சமயத்தில், சோவியத் யூனியனைக் காக்குமாறு அனைத்துலகக்குழு தொழிலாளவர்க்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றது. வெடிப்புக்கு இட்டுச்செல்லும் உடனடி சூழ்நிலைகளைக் கருதாது, அத்தகைய ஒரு யுத்தத்தில பிரச்சனைக்கு உரிய விடயம் 1917 அக்டோபர்ப் புரட்சி மூலம் உருவாக்கப்பட்ட தொழிலாளர் அரசின் நீடிப்பும் அதன் நீடித்து நிற்கும் சமூகத் தேட்டங்களான தேசியமயமாக்கப்பட்ட சொத்துறவுகளையாகும். சீனா, வியட்னாம், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தொடர்பாகவும் நாம இதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளோம். இவற்றினை டிரொட்ஸ்கிச இயக்கம உருக்குலைந்த தொழிலாள அரசுகளாக இனம் காண்கிறது. எவ்வாறெனினும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ருஷ்யாவையும் சீனாவையும் பாதுகாப்பதானது, அதன் ஸ்டாலினிச தலைமைகளுக்கு எந்தவொரு அரசியல் ஆதரவை வழங்குவதையோ அல்லது இந்த உருக்குலைந்த அல்லது சீரழிந்த தொழிலாளர் அரசு எடுக்கும் எந்தவொரு இராணுவ நடவடிக்கைக்கும் அனைத்துலகக்குழு ஆதரவளிக்கும் என்பதையோ குறிக்காது. உதாரணமாக அனைத்துலகக்குழு சோவியத் யூனியனின் ஆப்கானிஸ்தான் மீதான ஆக்கிரமிப்பை எதிர்த்தது. இது ஒரு சிறிய தேசத்தின் மீதான கர்வம் நிறைந்த பிற்போக்குத் தாக்குதலாகும்.

**162.** வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்ட நாடுகள் மீது, அதாவது மத்திய அமெரிக்கா, தென் அமெரிகா, கரீபியன் நாடுகள், ஏனைய சகல

படிப்பகம்

www.padippakam.com


அரைக்காலனித்துவ நாடுகள் ஆகியவற்றின் மீதான அமெரிக்காவினதோ, அல்லது வேறு ஏகாதிபத்திய நாட்டினதோ தாக்குதல், அனைத்துலகக் குழுவினதும் வொர்க்கர்ஸ் லீக்கினதும் அதே இணக்கமற்ற எதிர்ப்பினை உடன் வேண்டி நிற்கும். அத்தகைய யுத்தத்தில் நாம் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் நலனின் பேரில் ஒடுக்கப்படும் நாட்டின வெற்றியையேவேண்டுவோம். ஒடுக்கப்படும் தேசங்களின் போராட்டங்களைப் பொறுத்தமட்டில் யுத்தம் தொடர்பான மார்க்சிஸ்டுகளின் அணுகுமுறை, முதலாளித்துவ ஒடுக்குதலையும்- தொழிலாளவர்க்கத்தினதும் தேசிய விடுதலை இயக்கங்களினதும் உக்கிரமான எதிர்த்தாக்குதலையும் ஒரே விதத்தில் கண்டனம் செய்கின்ற, நடுத்தர வர்க்க சமூகக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்துகின்ற அகிம்சா வாதத்தினை இணக்கமற்று எதிர்ப்பதனைக் குறிக்கின்றதைச் சுட்டிக்காட்டியாக வேண்டும். அனைத்துலகக்குழு எல்லா யுத்தங்களையும் எதிர்க்கவில்லை. இதுஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தால் தொடுக்கப்படும் யுத்தங்களை ஏகாதிபத்திய யுத்தங்களை— எதிர்க்கின்றது. ஆனால் நாம் ஏகாதிபத்தியத்தினால் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் தேசிய விடுதலை யுத்தங்களைத் தொடுப்பதற்குள்ள உரிமையை ஆதரிக்கின்றோம். அத்தோடு நாம் சோவியத் யூனியனையும், உருகுலைந்த தொழிலாளர் அரசுகளையும் ஏகாதிபத்தியத் தாக்குதலுக்கு எதிராக நிபந்தனை இன்றி பாதுகாக்கின்றோம்.

163. அணு ஆயுத ஒழிப்பு, 'சமாதான சகவாழ்வுக்கு' சாதகமாக தொழிலாள வர்க்கத்தை அஹிம்சா மோசடி மூலம் ஏமாற்றும் படுபிற்போக்கு வடிவமே ஸ்டாலினிச பிரச்சாரமாகும். ஏகாதிபத்தியத்திற்கும் சோவியத் அதிகாரத்துவத்துக்கும் இடையேயான அணு ஆயுத ஒப்பந்தங்கள் மூலம் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது. ஆனால் முழுஉலகிலும் யுத்தத்திற்கு காரணமாக உள்ள முதலாளித்துவத்தை புரட்சிகரமான முறையில் தூக்கி வீசுவதன் மூலம் மட்டுமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும். லெனின் சுட்டிக்காட்டியது போன்று தொழிலாள வர்க்கம் ஆதரவளிக்கக் கூடிய ஆயுத ஒழிப்பின் ஒரே வடிவம், ஆயுதம் தாங்கிய பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தை நிராயுதபாணி ஆக்குவதே ஆகும்.

164. நான்காம் அகிலத்தில் அனைத்துலகக்குழு பலவர்க்க ''யுத்த எதிர்ப்பு'' மக்கள் முன்னணிகளை மூர்க்கமாக எதிர்க்கின்றது. அவை 'சமாதானம் விரும்பும்' குட்டி முதலாளித்துவ, முதலாளித்துவ பிரிவினருக்கு தொழிலாள வர்க்கத்தை அரசியல் ரீதியில் கீழ்ப்படுத்த முயல்கின்றன. யுத்தத்திற்கு எதிரான போராட்டம் எப்போதும் வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று அரசியல் தர்க்கத்தினை அடிப்படையாகக் கொண்டது. அதன் முதல்விதி பாட்டாளி வர்க்கத்தின் நிபந்தனையற்ற சுதந்திரமாகும். தொடர்ச்சியான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைக்கு அது அத்தியாவசியமான ஒரு முன் நிபந்தனை ஆகும்.

165. ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிரான போராட்டம், பாட்டாளி வர்க்க மக்களின் அணிதிரளலை வேண்டி நிற்கின்றது. தனிமைப்படுத்தப்பட்ட தனி ஆட்களின் நடவடிக்கைகள்— நாசகார நடவடிக்கைகளை அமுல் செய்யவதற்கான முன்பதிவு செய்தலுக்கு தனிப்பட்ட ரீதியில் மறுத்தல்— தொழிலாள வர்க்கத்தின் நனவினை வளர்க்க உதவாது. ஆதலால் அவற்றை எதிர்க்கவேண்டும். தொழிலாளவர்க்கத்தின் உள்ளே-

www.padippakam.com


சிறப்பாக பாட்டாளி வர்க்க இளைஞர்களிடையே ஒழுங்குமுறையான பிரச்சாரத்தை முன்னெடுப்பது அவசியம். அப்போது தான் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் தன்மையை விளங்கிக் கொள்ள கல்வி யூட்டப்படுவார்கள். சகல இரகசிய இராஜதந்திரங்களுக்கும் அத்தோடு சகல பகிரங்கமானதும் இரகசியமானதுமான இராணுவ உடன்படிக்கைகளுக்கும் எதிராக ஒரு ஒழுங்குமுறையான பிரச்சாரம ஏற்பாடு செய்யப்பட்டாக வேண்டும்.

166. அனைத்துலகக்குழுவின் பகுதிகள் முதலாளித்துவ வர்க்கத்தின் தேசியவெறிக்கு எதிராகப் பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதகொள்கைகளை நிலைநிறுத்தவேண்டும். அமெரிக்கா, ஐரோப்பா, உலக ஐக்கிய சோசலிச அரசுகள் என்ற சுலோகத்தினை பிரசித்தி பெறச் செய்ய வேண்டும். உலக ஏகாதிபத்தியத்திற்கெதிரான பொதுப் போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் சகல பகுதியினரையும் ஐக்கியப்படுத்த அது சகல குடிவரவு எதிர்ப்பு பாரபட்சம், இனவாதம் ஆகியவற்றுக்கெதிராகப் பிரச்சாரம் செய்யவேண்டும்.

167. இங்கு டிராட்ஸ்கியின் வார்த்தைகளைத் திரும்பக் கூறுவது மட்டும் அவசியமானது: ''எமது சகாப்தத்தில் அனைத்துலகக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் உலகக்கட்சியின் அணியில் சேரும் இயக்கம் மட்டுமே தேசிய மண்ணில் வேரோட முடியும். என்பதில் எந்தவிதமான சர்ச்சைக்கும் இடமில்லை யுத்தத்துக்கு எதிரான போராட்டம் என்பது இன்று நான்காம் அகிலத்துக்கான போராட்டம் அர்த்தப்படுத்துகிறது.'' (யுத்தமும் அனைத்துலகமும்

## அனைத்துலகக்குழுவும் மார்க்சிசத்திற்கான போராட்டமும்

168. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் மையப்பணி ஒரு டிராட்ஸ்கிச முன்னணியை தொழிலாள வர்க்கத்தினுள் கட்டி எழுப்புவதே ஆகும். அது தொழிலாள வர்க்கத்தின் பரந்த தன்னியல்பான போராட்டங்களில் தலையிடவும் ஆளும் வர்க்கத்தின் ஏஜண்டுகளான தொழிற்சங்க அதிகாரத்துவம், ஸ்டாலினிஸ்டுகள், திரிபுவாதிகள் மற்றும் மத்திய வாதிகளுடன் போரிட்டு அவர்களை அரசியல் ரீதியில் தோற்கடிக்கவும் பரந்தளவிலான தொழிலாளர்களுக்கு ஒரு தெளிவான புரட்சிகர வேலைத்திட்டத்தினையும் முன்நோக்கினையும் வழங்கி அவர்களை ஆயுத பாணியாக்கக் கூடியதாக இருக்கும். எப்போதும் அனைத்துலகக்குழுவின் டிராட்ஸ்கிஸ்டுகள், பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான பாதையை நிலைநாட்டப் போராடவேண்டும். இதனால் எல்லா விதமான சந்தர்ப்பவாதங்களுக்கும் எதிரான ஈவிரக்கமற்ற போராட்டத்தினை நடத்த வேண்டி நிற்கிறது. தொழிலாள வர்க்கம் அடைந்த ஐக்கியமின்மைக்கும பின்னடைவுக்குமான முக்கிய காரணம் சந்தர்ப்பவாதிகளின் அரித்தழிக்கக்கூடிய செல்வாக்கேயாகும்.

169. புரட்சிகர சர்வதேசியவாதம் சந்தர்ப்பவாதத்தின் அரசியல் எதிரிடையாகும். ஒருகுறிப்பிட்ட தேசிய சூழலின் உள்ளே உள்ள அரசியல் வாழ்வின் யதார்த்தங்கள் என்று அழைக்கப் படுவனவற்றிற்கு திட்டவட்டமின் அடிபணிதலை சந்தர்ப்பவாதம் ஏதோ ஒருவகையில் வரிப்படுத்துகிறது. சந்தர்ப்பவாதம் எப்போதுமே குறுக்கு வழிகளைத்

தேடுகின்றது. ஏதோ ஒரு தேசிய தந்திரோபாயத்தினை உலக சோசலிசப் புரட்சியின் அடிப்படை வேலைத்திட்டத்திற்கு மேலாக உயர்த்துகின்றது. "லங்கா சோசலிசப்புரட்சி" வேலைத்திட்டத்தினை மிகவும் அருவமானது எனக்கூறி விட்டு சந்தர்ப்பவாத பேராசையாளர்கள் மிக ஸ்தூலமான தந்திரோபாயங்கள் பின் செல்கின்றனர் சந்தர்ப்பவாதி. தொழிலாளர் வர்க்கத்தின் சர்வதேசியப் பண்பை "மறந்து" போக விரும்புவதோடு மட்டுமல்லாமல் அவர் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நெருக்கடியின் உண்மையையும் "புறக்கணிக்கின்றனர்" உலக முரண்பாடுகளை, அடிப் படைத் தோற்றமாகக் கொண்டுள்ள இவை சர்வதேசிய வேலைத்திட்டத் தின் அடிப்படையில் மட்டுமே தீர்க்கப்பட முடியும். எந்தவொரு தேசிய ரீதியிலான தந்திரோபாயமும், கட்சியின் அரசியல் ஆயுத சாலையில் அதன் பாத்திரம் எவ்வளவு தான் முக்கியத்துவமுள்ளதாய் இருப்பினும் (உ-ம்: தொழிற்கட்சியை அமைக்கும்படி கோரும் ஒர்க்கர்ஸ் லீக்கின் அழைப்பு அல்லது ஆஸ்திரேலிய சோசலிச தொழிலாளர் கழகம் தொழிற்கட்சியின் இடது சாரிகள் மேல் கோரிக்கை வைத்தல்) அனைத்துலகக் குழுவின் உலக மூலோபாயத்தில் இருந்து பிரிக்கப்பட்ட நிலையில், அதனை ஒன்றில் அதற்கு மேலாக உயர்த்தினாலும் சரி அல்லது அதற்கு சமமாக விளக்கினாலும் சரி அதன் புரட்சிகர உள்ளடக்கத்தை பேணிக்காக்க முடியாது எனவே தான் அனைத்துலகக்குழுவின் பகுதிகள் இயங்குகின்ற நாடுகளில் உள்ள தொழி லாளர் இயக்கங்களுக்கு, அவை அளிக்கும் பிரதான வரலாற்றுப் பங்களிப்பு உலக சோசலிசப் புரட்சி முன்நோக்குக்கான கூட்டானதும், ஒன்றுபட்டதுமான போராட்டமேயாகும்.

170 இந்த நிலைப்பாட்டில் இருந்தே கட்சி நிதானமாக தொழிலாளர் வர்க்கத்திற்கு கல்வியறிவூட்டி சோசலிச வர்க்க நனவினை வளர்த்தெடுக் கின்றது. ஒரே விஞ்ஞான புரட்சிகரக் கோட்பாடான மார்க்சிசத்தின் அடிப்படையினால் மட்டுமே அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தொழிலாளவர்க்க அமைப்பினைப் பெற முடியும். மார்க்சிசம், தொழிலாள வர்க்கத்தின் புறநிலைரீதியான புரட்சிகர பாத்திரத்தின் நனவு பூர்வமான வெளிப்பாடாகும். இது மட்டுமே ஏகாதிபத்தியத்தின் தன்மையை வெளிப் படுத்துகின்றது. இது தொழிலாளர்களின் உழைப்புச்சக்தியை விலைக்கு வாங்கி உபரிஉழைப்பைத்திருடும் முதலாளித்துவச் சுரண்டலை,லாபநோக்கு முறையின் அடிப்படை முரண்பாடுகளை அம்பலப்படுத்துகின்றது. இதுவே வர்க்கப் போராட்டத்தின்ஒவ்வொரு தோற்றத்தின் அத்தியாவசியமான அரசியல் சாராம்சத்தினை வெளிக்காட்டுகின்றது. இத்தகைய விஞ்ஞான அடிப்படையின் மேல் தான் சோசலிசப்புரட்சியின் மூலோபாயத்தையும் தந்திரோபாயத்தையும் விரிவாக்குகின்றது.

171. மார்க்சிசம் என்பது தொழிலாள வர்க்கத்தினால் தன்னியல்பாக உருவாக்கப்பட்ட சித்தாந்தம் அல்ல. புரட்சிகரக் கட்சியின்றி தனித்த தொழிலாள வர்க்கம், தொழிற்சங்க நனவுக்கு அப்பால் மேலும் எதனையும் அபிவிருத்தி செய்ய முடியாது என்பதையே சர்வதேச தொழிலாள வர்க்கத் தின் முழு வரலாறும் எடுத்துக்காட்டுகின்றது. தொழிற்சங்க வாதம்— கூலிகள், வேலை நிலைமைகளை முன்னேற்றும் பொருட்டு பரந்ததொழிலாளர் அமைப்புக்களை அமைத்து மற்றும் பாதுகாப்பதன் மூலம் வேலை கொள் வோருக்கு எதிராக ஐக்கியப்படவேண்டியதன் அத்தியாவசியத் தேவையை

www.padippakam.com


அங்கீகரிக்கின்றது. முதலாளிகளுக்கு எதிரான போராட்டத்தின் கசப்பான வரலாற்று அனுபவங்களின் மூலம் இது தொழிலாளவர்க்க இயக்கத்தின் உள்ளே தன்னியல்பாக எழுகின்றது. ஆனால் தொழிற்சங்க நனவு, அது எவ்வளவுதான் போர்க்குணம் மிக்கதாக இருப்பினும் முதலாளித்துவ நனவாகவே தொடர்ந்து இருந்து வருகின்றது. இது கூலி முறையின் கீழ் தொழிலாளர்களின் நிலைமைகளை உயர்த்துவதை இலக்காகக் கொண்டுள்ளதேயன்றி கூலி அடிமை முறையையே ஒழித்துக் கட்டிவிடுவதை அல்ல. நெருக்கடியினால் தொழிலாள வர்க்கம் முன்நோக்கி தள்ளப்படுகையில, முதலாளித்துவம் உருவாக்கிய புதைசேற்றிலிருந்து வெளியேற அது தீர்க்கமாக முயல்கின்றது. கட்சியின் தலையீடு இல்லாமல் தொழிற்சங்க போராட்டத்தை ஒரு இன்றியமையாத பாகமாகக் கொண்ட உலக அளவிலான வர்க்கப் போராட்டத்தின் முழு அரசியல், புரட்சிகர உள்ளடக்கத்தை அதனால் புரிந்து கொள்ள முடியாது.

172. கட்சியும் அதன் அங்கத்தினர்களும் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே கட்சியின் அரசியல் வேலைத்திட்டத்துக்கும் கொள்கைகளுக்கும் எப்போதும் போராடவேண்டும். இது தொழிலாளர்களின் உடனடியான மனோநிலைகளுடனும் நனவுடனும் முரண்பட்டு குறுங்காலத்தில் கட்சியை வெகுஜனங்களில் இருந்து தனிமைப்படுத்தும் விளைவினைக் கொண்டுவரினும் கூட தொழிலாள வர்க்கத்துக்கு உண்மையைக்கூறப் பின்வாங்கக்கூடாது. அனைத்துலகக்குழு குறிப்பிட்டுள்ளதைப் போன்று: ''தனது நீண்டகால வரலாற்றுப் பணிகளை விஞ்ஞான ரீதியில் புரிந்துகொள்ள பாட்டாளி வர்க்கத்துக்கு கல்வியறிவூட்டுவது ஒரு கொள்கை சார்ந்த நிலைப்பாட்டை வேண்டிநிற்பதை மார்க்சிஸ்ட் புரிந்திருக்கிறான். ஆதலால் அவன் தொழிலாள வர்க்கத்தினை அரசியல் ரீதியில் தெளிவுபடுத்துதலை நிராகரிப்பதன் மூலம் வாங்கப்படும் குறுகியகால நலன்களுக்குப் பதிலாக தற்காலிக தனிமைப்படலையே விரும்புகிறான். (போர்த் இண்டர்நேஷனல், மார்ச் 1987)

173. தொழிலாள வர்க்கத்தின் நனவினை அதன் புறநிலை வரலாற்றுக் கடமைகள் வேண்டிநிற்கும் மட்டத்துக்கு உயர்த்தும் போராட்டமும் 'தன்னியல்புக்கு தலை வணங்காமையும்' அனைத்து வகையான சந்தர்ப்பவாதத்திற்கும் எதிரான மார்க்சிசத்துக்கான போராட்டத்தின் இதயமாக விளங்குகின்றது, மற்றும் கம்யூனிசத்தின் அடிப்படைகளுக்கும் இட்டுச் செல்கின்றது- கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் மார்க்ஸ், எங்கெல்ஸ் எழுதியதுபோல், ''கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்தின் உடனடி நோக்கங்கள் சித்தி பெறுவதற்காக, உடனடி நலன்கள் நிறைவேற்றம் பெறுவதற்காகப் போராடுகிறார்கள்; ஆனால் தற்காலத்திய இயக்கத்தில் இந்த இயக்கத்தின் எதிர்காலத்தையும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்து பேணிப் பாதுகாக்கின்றனர்.''

174. அனைத்துலகக் குழுவின் வேலையானது, நான்காம் அகிலத்தின் ஸ்தாபன பத்திரத்தில் டிராஸ்கியினால் அபிவிருத்தி செய்யப்பட்ட இடைமருவு வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. 50 ஆண்டுகளின் பயணத்தின் பின்னரும் முக்கியமான கோட்பாட்டு, மூலோபாய, வேலைத்திட்ட கருத்துருக்கள் அவற்றின் எந்தவொரு வரலாற்றுத்தொடர்பினையும் இழந்துவிடவில்லை. டிராட்ஸ்கி பிரேரித்த, குறிப்பாக 'இடைமருவு' கோரிக்கைகள் கூடநகரும் அளவுத்திட்ட கூலியும்—நேரமும்,

தொழிற்சாலை குழுக்கள், தொழில் ரகசியங்களை ஒழித்தலும் தொழிற்சாலையைத் தொழிலாளர் கட்டுப்படுத்தலும், தனியார் வங்கிகளை சுவீகரித்தலும், வங்கித்தொழிலை தேசியமயமாக்கலும், தொழிலாளர் பாதுகாப்புப் படைகளை அமைத்தல், தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவுதல்—தொழிலாள வர்க்கத்தைப் புரட்சிகரமான முறையில் அணி திரட்டுவதற்கான நடைமுறை நெம்புகோல்கள் போன்று பலம்வாய்ந்த ஆதாரங்களாக இருக்கின்றன.

175. இந்த இடைமருவு கோரிக்கைகளை முன்வைக்கையில் அனைத்துலக குழுவின் பகுதிகள் உலக நெருக்கடியின் முதிர்ச்சிக்கும் பாட்டாளி மக்களின் நனவின் முதிர்ச்சியின்மைக்கும் இடையேயான இடைவெளியைக் கடக்க முயல்கின்றனர். இதே காரணத்திற்காக, இடைமருவு கோரிக்கைகளை எழுப்புகையில் இவை அடிப்படையாகக்கொண்ட புரட்சிகர சோசலிச முன்னோக்கில் இருந்து தனிமைப்பட்ட விதத்திலோ அல்லது அதற்கு எதிரிடையாகவோ ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது. இடை மருவு வேலைத்திட்டத்தினை சந்தர்ப்பவாத அடிபணிவுகளுக்கும் மத்தியவாத தட்டிக்கழிப்புகளுக்குமான ஒரு மருந்துச்சீட்டாக மாற்றும் இடைவிடாத முயற்சிகள் பப்லோவாதிகளின் காட்டிக்கொடுப்புக்களில் முக்கிய இடம் பிடித்திருந்தது: அதாவது இக் கோரிக்கைகளை அவற்றின் உண்மையான புரட்சிகர அடிப்படையிலிருந்து அப்புறப்படுத்தி, அவற்றை தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு நிஜ புரட்சிகர வேலைத்திட்டத்திற்கான ஒரு பதிலீடாக வைக்கப்பட வேண்டுமென சிபாரிசு செய்வதாகும். இந்த திரிபுவாத முறையினை முன்மொழிபவரின் படி இடை மருவு கோரிக்கைகள் வெகுஜனங்களின் பின்தங்கிய நனவினை எதிர்த்துப் போராடுவதற்கு மாறாக அவர்களின் பின்தங்கிய நனவிற்கு அடிபணிந்து போவதற்கான கருவிகளாகும். சாராம்சத்தில் இந்நிலைப்பாட்டினை முன் மொழிபவர்கள் தொழிலாள வர்க்கத்தின் உள்ளே சோசலிச நனவுக்காக எந்தவொரு வெளிப்படையானபோராட்டத்தின் அவசியத்தினையும நிராகரிக்கின்றனர். தொழிலாளர் இயக்கத்துக்கு மார்க்சிச கலாச்சாரத்தின் வளமான பலாபலன்களை பொறுமையாகப் புகட்டுவது அவசியம் இல்லை என இவர்கள் தெரிவிக்கிறார்கள், மாறாக அவர்களின் இறுதி இலக்கு பற்றிய நனவே இல்லாமல், வெகுஜனங்களைக் கவரக்கூடிய ஒரு சில சாதாரண கோரிக்கைகளை வழங்குவது அவர்களை சோசலிசப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் என நினைக்கின்றார்கள்,

176. பப்லோவாத சந்தர்ப்பவாதத்தின் தாத்பரியத்தில் இடைமருவுவேலைத்திட்டத்திற்கே மறு அர்த்தம் கற்பிக்கும் முழுமுயற்சி சோசலிசத் தொழிலாளர் கட்சியினால் மேற்கொள்ளப்பட்டது 1963-ஆம் ஆண்டின் மறு இணைப்பின் பல்லாண்டுகளின் பின்னர் இந்த வேலைத்திட்டத்தை "ஒரு பலநோக்கு கருவிகள் பெட்டிக்கு" ஒப்பிட்டது. "ஆகையால் ஒரு தொழில் வல்லுநன் அதைக் கையாளுவதைப்போல் நாம் செய்கிறோம். ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்ய வேண்டுமாயின், அந்த வேலைக்குப் பொருத்தமான கருவியை கருவிகள் பெட்டியில் தேடுகின்றோம். மக்களின் நனவு, வேலைத்திட்டத்தின் இந்த அந்த அம்சங்களின் மீது செயல்படவிருக்கும் அவர்களது தயார்நிலை ஆகியவற்றுக்கேற்றவாறும், வெகுஜன இயக்கத்தின் வளர்ச்சிநிலை அளவிற்கேற்றதும் காலப் பொருத்தமானதுமாக எதுவெல்லாம் இருக்கிறதோ அவற்றை இடை

www.padippakam.com


மருவு வேலைத்திட்டத்தில் இருந்து வெளியே எடுக்கின்றோம். அத்தருணத்திற்கு ஏற்றதை அது கொண்டிருக்காவிட்டால் ஒன்று அல்லது இரண்டு உபாயங்கள் தேவையாக இருக்கும்'' (புரட்சிகர வழியில இடை மருவு வேலைத்திட்டத்தின் பாத்திரம்—ஜார்ஜ் நோவாக்)

177 டிராட்ஸ்கி இடை மருவு வேலைத்திட்டத்தின்நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்குகையில் இதற்கு நேர் எதிராகச் சொல்லி இருந்தார், இடைமருவு வெலைத்திட்டம அமெரிக்க தொழிலாளர்களுக்கு அதிகம் முன்னேற்றமானது என எச்சரிக்கை செய்தவர்களுக்குபதிலளிக்கையில்டிராட்ஸ்கி கூறியதாவது: ''இங்கு நாம் நம்மையே கேட்கவேண்டும். வேலைத்திட்டம் தொழிலாளர்களின் மனோநிலையுடன் ஒத்துப்போக வேண்டுமா அல்லது நாட்டின் இன்றைய புறநிலை, பொருளாதார, சமூக நிலைமைகளுடன் ஒத்துப்போக வேண்டுமா இது மிக முக்கியமான கேள்வியாகும்.... வேலைத்திட்டமானது தொழிலாளர்களின் பின்தங்கிய நிலைமையைக் காட்டிலும் தொழிலாள வர்க்கத்தின் புறநிலையான பணிகளைக் கட்டாயம் பிரதிபலிக்க வேண்டும். அது சமுதாயத்தை அப்படியே பிரதிபலிக்க வேண்டுமேயன்றி தொழிலாள வர்க்கத்தின் பின்தங்கிய நிலைமை அல்ல. அது பின்தங்கிய நிலைமையைத்தாண்டி அதனை வெற்றி கொள்வதற்கான ஒரு கருவியாகும். எனவே தான் நாம் நமது வேலைத்திட்டத்தில முதல்வரியில் அமெரிக்கா உட்பட முதலாளித்துவ சமுதாயத்தின் சமூக நெருக்கடியின் முழு தீவிரத்தையும் கட்டாயம் வெளிப்படுத்த வேண்டும். எம்மில் சார்ந்திராத புறநிலைமைகளை நாம் ஒத்திபபோடவோ அல்லது திருத்தவோ முடியாது இந்நெருக்கடியை வெகுஜனங்கள் தீர்த்துக் கொள்வர் என நாம் உத்தரவாதம் கொடுக்க முடியாது. ஆனால் நாம நிலைமையை அப்படியே வெளிப்படுத்த வேண்டும். அதுதான் வேலைத்திட்டத்தின் பணி... இந்த நிலைமையில் ஒரு புரட்சிக்கட்சி என்ன செய்ய முடியும்? தொழிலாளர்கள் இதற்குப்பக்குவம் அடைந்திருக்கிறார்களா இல்லையோ இந்நிலைமையில் இருந்து பெருக் கெடுக்கும் வரலாற்றுக் கடமைகளின் புறநிலைமையைப் பற்றி தெளிவான, நேர்மையான விளக்கத்தை முதலிடத்தில் வழங்க வேண்டும், எமது பணிகள தொழிலாளர்களின்

மனோ நிலையில் தங்கியிருக்கவில்லை. தொழிலாளர்களின் மனோ நிலையை வளர்த்தெடுப்பதே எமது எமது பணியாகும். இதைத் தான் முன்னேறிய தொழிலாள வர்க்கத்திற்கு முன் வேலைததிட்டம் நெறிப்படுத்தி வழங்க வேண்டும், சிலர் கூறலாம்: நல்லது, இந்த வேலைத்திட்டம் விஞ்ஞான ரீதியான வேலைத்திட்டம; இது புறநிலைமைகளுடன் தொடர்புடையதாக இருக்கிறது— ஆனால் தொழிலாளர்கள் இந்த வேலைத்திட்டத்தை ஏற்காது போனால் இது மலடாகிவிடும. சாத்தியமே,சோசலிசப்புரட்சியைத் தவிர்ந்த வேறுவழியில் நெருக்கடி தீர்க்கப்பட முடியாது இருப்பதால், தொழிலாளர் நசுக்கப்படுவதை மட்டுமே இது குறிக்கின்றது அமெரிக்கத் தொழிலாளி உரிய காலத்தில் இந்த வேலைத்திட்டத்தை ஏற்காது போயின் அவன் பாசிச வேலைத்திட்டத்தை ஏற்கும்படி நிர்ப்பந்திக்கப்படுவான். அத்தோடு நாம் எமது வேலைத்திட்டத்துடன் தொழிலாள வர்க்கத்தின் முன் தோன்றும பொழுது,அவர்கள் எமது வேலைத்திட்டததைஏற்றுக்கொளவார்கள் எனப தற்குஎந்தவிதமான உத்தரவாதங்களையும் நாம தரமுடியாது நாம் இதற்குப்

படிப்பகம்

பொறுப்பேற்க முடியாது. நமக்கு மட்டுமே நாம பொறுப்பேற்க முடியும். (இடைமருவு வேலைத்திட்டம் பற்றி லியான் டிராட்ஸ்கி)

178. தொழிலாள வர்க்கத்தின் ஒவ்வொரு தன்னியல்பான போராட்டத்திலும். சம்பந்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் உடனடிக் காரணமும் உடனடி இலக்குகளும் என்னவாக இருந்த போதிலும், அனைத்துலகக்குழுவின்பகுதிகள் கையிலுள்ள பொருளாதாரப் போராட்டத்துக்கும் முதலாளித்துவத்திற்கு எதிரான முழுதொழிலாள வர்க்கத்தின் அரசியல போராட்டத்துக்கும் இடையேயான நிலையான தொடர்பினை பொறுமையுடனும் சளைக்காமலும் விளக்க வேண்டும், முதலாளிவர்க்கத்தாலும, தொழிலாள வர்க்க இயக்கத்தினுள் உள்ள அவர்களின் அடிவருடிகளாலும் கொடூரத்துடன் திணிக்கப்படும் தேசிய வாதத்தின் தொழிலாள வர்க்கத்தினுள் உள்ள அதன் சகல வெளிப்பாடுகளுக்கும் எதிராக விசேச கவனம செலுத்த வேண்டும். அனைத்துலகப்பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பகுதியை மறு பகுதிக்கு எதிராக குழி தோண்ட வைக்கும்— பாதுகாப்புவாதம், தேசிய பிரத்தியேகவாதம். குடிவரவு எதிர்ப்பு உணர்வு, இனவாதம்— அனைத்து பின்னேற்றமான பாகுபாடுகளுக்கும் எதிராக நான்காம அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் பகுதிகள் இணக்கமின்றிப் போராடவேண்டும்.

179. ஒரு புறநிலையான பரஸ்பரம் சார்ந்த முழுமை என்றவிதத்தில் உலகப் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கும் காலாவதியான தேசிய அரசுகள் முறைக்கும் இடையேயான சமரசப்படுத்த முடியாத முரண்பாட்டினால் ஆளுமை செய்யப்படும் முதலாளித்துவ உலக நெருக்கடியின் புதிய சட்டமானது, பூகோள ரீதியில் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர எழுச்சிக்கான இயக்கு சக்தியாக இருக்கின்றது. வேறுபட்ட இயல்புள்ள தேசியமக்களை உடைய சர்வதேச தொழிலாள வர்க்கத்தினை ஒருஇராணுவமாக மாற்றும் மாபெரும் வரலாற்றுக் கடமையை இப்பொழுது நிறைவேற்ற முடியும், ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!'' எனும் புரட்சிகர மார்க்சிசத்தின் போர்க்குரலே ஒவ்வொரு நாட்டின் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையாகும். நீண்டகாலத்துக்கு முன்பே செத்துப் போய் விட்ட இரண்டாம் மற்றும் மூன்றும் அகிலங்களின் நாற்றமெடுத்த மிச்ச சொச்சங்களான பழைய ஸ்டாலினிச, சமூக ஜனநாயகக் கட்சிகள் காலாவதியான தேசிய அரசு முறைமையும் அதன் முதலாளித்துவ எஜமான்களையும் என்றுமில்லாத அளவு ஆற்றொணா நிலையில் பற்றிக் கொண்டுள்ளனர். இவ்வாறு நான்காம் அகிலத்தின் சகாப்தம் வந்துள்ளது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின கடமையானது, சர்வதேச போராளிகளை ஒழுங்கமைத்து, இவ்வேலைத்திட்டத்தின் பால தீர்க்கமாக செயல்பட வைத்து, நான்காம அகிலத்தின பதாகையில் தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டி, வரவிருக்கும் உலக சோசலிசப் புரட்சிக்கான வெற்றியைத் தயார் செய்வதாகும்.

| பக்கம் | | முன்னேக்கு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | 3 | 6 | 9 | யரட்சி | புரட்சி |
| 2 | 5 | 9 | 8 | மாருக்சிஸ்டு | மார்க்சிஸ்டு |
| 3. | 19 | 42 | 19 | தள்ளுபடி | தள்ளும்படி |
| 4. | 25 | 57 | 6 | ஜேப்டிம்பு | ஜோப்டிபு |
| 5. | 25 | 57 | 22 | தனப்ப்பட்ட | தனிப்பட்ட |
| 6. | 26 | 58 | 6 | நான் அகிலத்தின் | நான்காம் அகிலத்தின் |
| 7. | 26 | 59 | உபதலைப்பு | சோளியத் | சோவியத் |
| 8. | 32 | 69 | 1 | கொள்வவை | கொள்வதை |
| 9. | ,, | 69 | 2 | கூட்டுறத | கூட்டுறவு |
| 10. | 33 | 72 | 2 | நசுக்கியதாக | நசுக்கியாக |
| 11. | 33 | 73 | 8 | முயலுகைலல் | முயலுகையில் |
| 12. | 35 | 76 | 16 | வந்து | வளர்ந்து |
| 13. | 37 | 81 | 10 | தந்திரத்திற்காக | சுதந்திரத்திற்காக |
| 14. | 37 | 81 | 15 | சுதந்தரமாக | சுதந்திரமாக |
| 15. | 48 | 105 | 20 | டாலினிஸ்டு | ஸ்டாலினிஸ்டு |
| 16. | 57 | 129 | 11 | ,, | 12 |
| 17. | 58 | 131 | 17 | 141 | 1941 |
| 18. | 18 | 41 | 10 | சோவியத் | பொலிவிய |

# Subscribe to:

The Tamil language paper of the Revolutionary Communist League, Srilankan section of the International Committee of the Fourth International, and excerpts from the paper of the Socialist Labour League (India), which is in sympathy with the ICFI, are regularly reprinted for distribution in Europa.

தொழிலாளர் பாதை

**Have it posted** **20 issues: DM 26.-**

**Write to Neue Arbeiterpresse, Postfach 100 105, D - 4300 Essen 1, West Germany**

**Subscription payable to accont Neue Arbeiterpresse (Bettina Rippert), No. 211 85 - 431, Postgiroamt Essen (effected at any post office)**


# Fourth International

A JOURNAL OF INTERNATIONAL MARXISM PUBLISHED BY THE INTERNATIONAL COMMITTEE OF THE FOURTH INTERNATIONAL

**Now available: Volume 15, Nos. 3-4 (July-December 1988)**

**Contains:**

- *The World Capitalist Crisis and the Tasks of the Fourth International.* Perspectives Resolution of the International Committee of the Fourth International.
- Gorbachev and the Soviet Union
- The 1992 European Internal Market
- Sri Lanka and the Assassination of Comrade R.A.Pittawala
- The Cases of Patrick Slaughter and Mark Curtis




Also available in German (DM 10.- per issue)

**Subscription rates:**

| | | |
|---|---|---|
| US | 1 issue | $ 8.00 |
| | 1 year (4 issues) | $ 30.00 |
| Europe, Latin America | 1 issue | $ 10.00 |
| | 1 year (4 issues) | $ 40.00 |
| India, Asia, Africa, Australia | 1 issues | $ 12.00 |
| | 1 year (4 issues) | $ 45.00 |

**Labor Publications, Inc., P.O.Box 33023, Detroit, MI 48216**

www.padippakam.com


# உள்ளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | நான்காம் அகிலத்தின் ஐம்பது ஆண்டுகள் | 1—8 | 1 4 |
| 2. | சர்வதேசியமும் பாட்டாளி வர்க்கமும் | 9—15 | 5-8 |
| 3. | முதலாளித்துவ நெருக்கடியும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையும் | 16—32 | 8-15 |
| 4. | நான்காம் அகிலமும் சந்தர்ப்பவாதமும் | 33—43 | 15-19 |
| 5. | சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டத்தின் ஒரு வரலாற்று இருப்பு நிலைக்குறிப்பு | 44—46 | 19-21 |
| 6. | ஸ்டாலினிசத்தின் பங்குபற்றி பப்லோவாதம் | 47—58 | 21-26 |
| 7. | சோவியத்யூனியன் இன்று | 58—75 | 26-34 |
| 8. | சீனாவில் ஸ்டாலினிசம் | 76—80 | 35-37 |
| 9. | நிரந்தரப்புரட்சித் தத்துவம் ஊர்ஜிதம் | 81—98 | 37-44 |
| 10. | அனைத்துலகக் குழுவில் பிளவு | 99—109 | 45-49 |
| 11. | முதலாளித்துவ நெருக்கடியும் தொழிலாள வர்க்கத்திற்கு எதிரான தாக்குதலும் | 110—115 | 49-51 |
| 12. | புதிய புரட்சிகர நெருக்கடிக்கான புறநிலை அடிப்படைகள் | 116—122 | 51-53 |
| 13. | ஐக்கிய அமெரிக்க அரசுகள், ஜப்பான் ஐரோப்பாவும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான குரோதங்களின் வளர்ச்சியும் | 123—135 | 53-59 |
| 14. | ஏகாதிபத்தியமும் ஆசியபசிபிக் கரையும் | 136—142 | 59-61 |
| 15. | பின் தங்கிய நாடுகளின் வறுமை | 142—147 | 61-64 |
| 16. | உலகக்கடனின் பெருக்கம் | 145—154 | 64-67 |
| 17. | ஏகாதிபத்திய யுத்தத்திற்கெதிரான போராட்டம் | 155—167 | 67-72 |
| 18. | அனைத்துலகக்குழுவும் மார்க்சிசத்திற்கான போராட்டம் | 168—179 | 72-78 |


© Arbeiterpresse Verlag,
Postfach 100 105, D – 4300 Essen 1, West Germany
Printed in Germany 1989
ISBN 3 – 88634 – 500 – 9 / DM 5.-

www.padippakam.com

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

படிப்பகம்

www.padippakam.com

DM 5.-
ISBN 3 – 88634 – 500 – 9

படிப்பகம்